www.padippakam.com

16-31 டிசம்பர் 2000 ரூ. 5.00



# புதிய ஜனநாயகம்

## தாமிரபரணி படுகொலை: விபத்தா?




நாட்டிலே ஜெயலலி

காட்டிலே வீரப்ப

"இரு வல்லவர்க

படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## வர்த்தகச் சூதாடிகளின் அரசு

இந்திய உணவுக் கழகத்திடம் உள்ள 4 கோடி டன் அரிசி மற்றும் கோதுமை கையிருப்பில், 1.4 கோடி டன் அரிசி/கோதுமையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்றுவிட மைய அரசு முடிவு செய்துள்ளது. ரேசன் கடைகளில் பொது மக்களுக்கு 11 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு கிலோ அரிசி, வியாபாரிகளுக்கு ஆறு ரூபாய்க்குக் கிடைக்கும். இதனால் அரசுக்கு ஏற்படும் நட்டம் 1,000 கோடி ரூபாய். வர்த்தகச் சூதாடிகள் தங்கள் பணப் பெட்டியை நிரப்பிக் கொள்ள 1,000 கோடி ரூபாய் நட்டத்தைத் தாங்கிக் கொள்ளும் அரசு, மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசியும் கோதுமையும் வழங்க வேண்டுமென்றால், பற்றாக்குறை என்றல்லவா கணக்குப் போட்டுக் காட்டுகிறார்கள்.

## இரக்கமற்ற இந்துமத வெறியர்கள்

பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து மும்பய் நகரில் நடந்த கலரவத்தால் அனாதைகளாகிப் போன 249 சிறுவர்களின் கல்விக் காக, மைய அரசு மாதா மாதம் 525 ரூபாய் உதவித் தொகை அளித்து வந்தது. மும்பயில் இயங்கி வரும் குடிமக்கள் கண்காணிப்பு கமிட்டி, இந்த உதவித் தொகை 700 சிறுவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனப் போராடிக் கொண்டிருக்கையில், மைய அரசோ, 249 சிறுவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வந்ததையே நிறுத்தி விட்டது. அத்வானி தலைமையில் இயங்கும் உள்துறை அமைச்சகம், மகாராஷ்டிரா மாநில அரசு இந்த உதவித் தொகை தொடர்பாக முறையான கணக்கு வழக்குகளை அனுப்பாததால், விதிப்படி உதவித் தொகை தருவ..த நிறுத்தி விட்டதாகக் கூறுகிறது. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியதே சாக்கு!

## கூட்டணிக் கொள்ளை

ஏகாதிபத்தியங்களின் 'உ..வி' பெற்று இந்தியாவில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்..ட்டங்களை இந்திய அரசு உரிய காலத்திற்குள் முடிக்கவில்லை என்..ற்காக, ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள், கடந்த நான்கு வருடங்க..ில் இந்திய அரசிடமிருந்து 1238 கோடி ரூபாயை அபராதத் தொ..யாக வசூலித்துள்ளன. கடனுதவிக்கு வசூலிக்கப்படும் அநியாய வட்.. ஒருபுறமிருக்க, ஆண்டு தவறாமல் அபராதத் தொகை விதிப்பது எ..து மாட்டை இரண்டு முறை தோலுரிக்கும் கதைதான். இனி வளர்ச்சித்..ட்டங்கள் என்றால் அதிகாரிகள் - அரசியல்வாதிகள் சுருட்டிக் கெ.. இலஞ்சம் மட்டுமல்ல, ஏகாதிபத்தியங்களின் இந்த அநியாயக் கொ.. ..ம் நம் நினைவுக்கு வர வேண்டும்.

## சட்டத்தின் முன் அனைவரும் சமமா?

பொதுத்துறை வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கி அனுமதியோடு சமீபத்தில் பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் கொடுத்திருந்தன. அதில், "பொதுத்துறை வங்கிகளிடமிருந்து தொழில் தொடங்க கடன் வாங்கிவிட்டு, அக்கடனை இதுநாள்வரை திரும்பச் செலுத்தாதவர்களுடன் இவ்வங்கிகள் சமரசம் காண விரும்புவதாகவும், இதற்கு விருப்பமுள்ளவர்கள் தங்கள் நிலுவை பாக்கி கணக்குகளுடன் சம்மந்தப்பட்ட வங்கியின் கிளை மேலாளரை அணுகலாம்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1000, 2000 கடன் வாங்கி, அதனைக் கட்ட முடியாமல் போண்டியான விவசாயிகள் மீது "ஜப்தி" எனப் பாய்ந்து குதறும் சட்டம், 54,000 கோடி ரூபாயை கடன் வாங்கி ஏப்பம் விட்ட முதலாளிகளிடமோ சமரசம் எனப் பல்லைக் காட்டுகிறது!

## தனியாருக்குத் தாரை வார்க்கவே நட்டக் கணக்கு

மைய மின்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு வெளியிட்டுள்ள அறிக்கையில், "மின்சாரத்தை எடுத்துச் செல்வதிலும், நுகர்வோருக்கு வழங்குவதிலும் உள்ள நிர்வாகக் கோளாறுகளினால் மாநில மின்வாரியங்கள் ஆண்டொன்றுக்கு 20 இலட்சம் கோடி ரூபாய் வரை நட்டமடைவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன்படி பார்த்தால், மானியம் கொடுப்பதால்தான் மின்வாரியங்கள் நட்டத்தில் நடப்பதாகக் கூறப்படுவது முழுப்பொய் என்பது அம்பலமாகிவிடுகிறது. இந்த நிர்வாகக் கோளாறைச் சரி செய்தால் மின்வாரியங்கள் கொழுத்த இலாபத்தில் இயங்கத் தொடங்கிவிடும் என்பதோடு, இந்தியாவின் எதிர்கால மின் உற்பத்திக்குத் தேவையான 8 இலட்சம் கோடி ரூபாய் மூலதனத்தையும் ஒரே ஆண்டில் கூடத் திரட்டிவிட முடியும். ஆனால், ஆளும் கும்பலோ மின்வாரியங்களையும், மின் உற்பத்தியையும் தனியாரிடம் தூக்கிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே, இந்த நிர்வாகக் கோளாறைச் சரி செய்யாமல் 'நட்ட'க் கணக்கு காட்டிக் கொண்டிருக்கிறது.


## தொலைபேசித் துறையில் தனியாரின் மோசடிகள்

தொலைபேசித் துறையில் நுழைந்துள்ள தனியார் நிறுவனங்கள் 1999-ஆம் ஆண்டுக்குள் 98,000 கிராமங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பது ஒப்பந்த விதி. ஆனால், இதுநாள் வரை 500 கிராமங்களுக்குக் கூட, இவை தொலைபேசி வசதியினை ஏற்படுத்தித் தரவில்லை. இனியும் தனியாரை நம்பிப் பலனில்லை எனப் புரிந்து கொண்ட தொலைபேசித்துறை, தானே இக்கிராமங்களில் தொலைபேசி வசதியினைச் செய்து வருகிறது. மைய அரசுக்கு ஆண்டு கட்டணத்தைக் கூட முறை..ாகச் செலுத்தாமல் ஏய்த்து வரும் முதலாளிகளிடம், சேவை மனப்பான்மையையா எதிர்பார்க்க முடியும்?

## ஊருக்குத்தான் உபதேசம்

மகா.. ..ஸடு கட்சியைச் சேர்ந்த முதுபெரும் தலைவர் ஜி.எல். ரெட்டி. இவர், சம்யுக்த மகாராஷ்டிரா இயக்கத்தில் ஆற்றிய பணிக்காக இவரைக் கௌரவித்து, சிவசேனா பாராட்டுக் கூட்டமொன்றை நடத்தியது. எவ்விதத் தயக்கமும் இன்றி இவ்விழாவில் கலந்து கொண்ட இவரை, கட்சித் தலைமையும் கண்டு கொள்ளவில்லை. இந்து மதவெறியை எதிர்ப்பதாகக் கூறும் கட்சியின் தலைவர், இந்து மதவெறி பாசிசக் கொலைகாரனான பால் தாக்கரேயின் பாராட்டையும், பரிசையும் பெறலாமா என்று சூடு சொரணையுள்ள அணிகள் கேட்டால், "அரசியல் வேறு; தனிப்பட்ட நட்பு வேறு" என்ற கீழ்த்தரமான மழுப்பல்தான் கட்சியின் பதிலாக இருக்கும்.

**அரசின் தானியக் கொள்முதல் மக்களுக்கா?**
**மொத்த வியாபாரிகளின் இலாபத்துக்கா?**





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 1-3**

16 நவ. 2000 - 31 டிச. 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# நடிகர் ராஜ்குமார் மீட்பு நாடகம்

**வீ**ரப்பன் கும்பலால் கடத்தப்பட்ட பிரபல கன்னட நடிகர் ராஜ்குமார் 108 நாட்களுக்குப் பிறகு அண்மையில் விடுக்கப்பட்டுள்ளார். வீரப்பன் கும்பலால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாத அதேசமயம், ''மகாயோகி'' நெடுமாறன் குழுவினரின் 'மனிதாபிமான தூது நடவடிக்கை'யால் இந்த விடுதலை நிறைவேறியுள்ளது.

வீரப்பன் கும்பல் முன்வைத்த கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றைப் பரிசீலித்து நிறைவேற்றுவதாக அரசு அளித்த வாக்குறுதியைத் தெரிவித்து, ''நக்கீரன்'' கோபால் அரசுத் தூதராக காட்டுக்குள் சென்றுவந்த பிறகு, இரு கோரிக்கைகளை மட்டும் வீரப்பன் கும்பல் வலியுறுத்தி வந்தது. கர்நாடகச்சிறையில் ''தடா'' சட்டத்தின் கீழ் விசாரணைக் கைதிகளாக வதைபடும் 51 தமிழ்ர்களையும், தமிழகச் சிறையிலுள்ள 5 தமிழினத் தீவிரவாதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்; அதிரடிப்படையின் அட்டூழியங்களை விசாரிக்கும் சதாசிவம் கமிஷன் விசாரணையை விரைந்து முடித்து பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பன மட்டுமே வீரப்பன் மற்றும் அவனுடன் இணைந்து செயல்படும் தமிழின தீவிரவாதக் குழுவினரின் மையமான கோரிக்கையாக இருந்தது.

இந்த இழுபறி நீடித்து வந்த நிலையில், ''தடா'' கைதிகளின் விடுதலைக்கு உச்சநீதி மன்றம் தடை விதித்ததோடு, தமிழக - கர்நாடக அரசுகளின் 'பொறுப்பின்மை'யைச் சாடி, வன்முறை தலைதூக்க அனுமதித்த இரு மாநில அரசுகளுமே வெளியேறலாம் என்று கட்டப் பஞ்சாயத்துக்காரனின் பாணியில் திமிராகத் தீர்ப்பளித்து எச்சரித்தது. இதனால் ''தடா'' கைதிகளை விடுவிக்க முன்வந்த போதிலும், தமிழக - கர்நாடக அரசுகளால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்கு ஆளாகி, எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகளின் தாக்குதலுக்கு வலுச் சேர்த்துத் தனிமைப்படவும் அவை தயாராக இல்லை. மறுபுறம், ஓரிரு நாட்களில் கோரிக்கைகள் நிறைவேறிவிடும் என்ற கனவில் கெடுபிடியும் எச்சரிக்கையுமாக வீரவசனம் பேசிய வீரப்பன் கும்பலின் நம்பிக்கைகள் காற்று பிடுங்கப்பட்ட பலூனாகிப் போனது. மாதக் கணக்கில் காட்டுக்குள் பணயக் கைதிகளைப் பாதுகாப்பாக வைத்து பராமரிக்க முடியாத இக்கட்டான சூழலில் வீரப்பன் கும்பல் சிக்கிக் கொண்டது. ராஜ்குமாருடன் பிடித்துச் சென்ற அவரது உதவியாளர் நாகப்பா 'தப்பித்து' ஓடி வந்தார். ராஜ்குமாரின் மைத்துனர் கோவிந்தராஜு உடல்நிலை குன்றியதால் விடுவிக்கப்பட்டார். இனியும் பணயக் கைதிகளை காட்டுக்குள் தனது பாதுகாப்பில் வைத்துப் பராமரிக்க முடியாதபடி நெருக்கடி முற்றி, வேறு வழியின்றி ''உடும்பு வேண்டாம்; கையை விட்டால் போதும்'' என்ற நிலையில் நெடுமாறன் குழுவினரிடம் நடிகர் ராஜ்குமார் மற்றும் நாகேஷ் ஆகியோரை வீரப்பன் கும்பல் விடுவித்து ஒப்படைத்துள்ளது.

ஆனால் இதையே தூது சென்ற நெடுமாறன் குழுவினரின் சாதனையாகச் சித்தரித்து, பாராட்டு விழாக்கள் நடத்தி இனவாத பிழைப்புவாதிகள் மெய்சிலிர்த்துக் கொள்கிறார்கள். நேற்று வரை ராஜ்குமார் கடத்தலை வடுகர்களின் கொட்டத்தை அடக்கிய வீரப்பனின் வீரதீர நடவடிக்கையாகச் சித்தரித்துவிட்டு, இன்று அவனிடமிருந்து ராஜ்குமாரை மீட்டு வந்ததையும் வீரதீரச் செயலாகக் காட்டுகின்றனர். கர்நாடகத் தமிழர்கள் மற்றும் தமிழகத்திலுள்ள கர்நாடக மக்களின் நலன் கருதி, இனவெறிக் கலவரங்கள் நிகழாதிருக்க மனிதாபிமான அடிப்படையில் தலையிட்டு சுமுகமாகத் தீர்வு கண்டதாகப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். பிரபலமானவர்களைக் கடத்திச் சென்று அரசை மிரட்டிப் பணிய வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட காஷ்மீர் போராளிகளுடன் கிரிமினல் வீரப்பன் கும்பலை ஒப்பிட்டு நியாயப்படுத்துவது, வீரப்பனை மாபெரும் மனிதாபிமானியாக, தமிழினப் போராளியாகச் சித்தரித்து ஒளிவட்டம் போடுவது, அக்கிரிமினலுக்குப் பொது மன்னிப்பு அளிக்கக் கோருவது, ''தடா'' கைதிகளை விடுவிக்க இயக்கம் நடத்துவது முதலானவற்றின் மூலம் தமிழின உரிமைப் போராட்டத்துக்கு சூடேற்ற முயற்சிக்கின்றார். ''வீரப்பனைச் சட்டவிரோதக் குற்றவாளியாக மாற்றியது எது? யார் பின்னணி? என்று ஆராயாமல் தனிமனிதனைக் குற்றம் சாட்டுவது சரியல்ல'' என்று தமது வீரப்ப துதிக்கு நியாயம் கற்பிக்கவும் செய்கின்றனர்.

மறுபுறம் பார்ப்பன பத்திரிகைகளும் பாசிச ஜெயா தலைமையிலான எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகளும் கிரிமினல் வீரப்பனின் கொலை - கொள்ளை, தமிழினத் தீவிரவாதிகள் கூட்டு, விடுதலைப் புலிகள் ஆதரவு, ராஜ்குமாரை மீட்க நெடுமாறன் குழுவினர் தூது சென்றது, டாக்டர் பானு - கொளத்தூர் மணி ஆகியோரின் பங்கு முதலானவற்றை ஊதிப் பெருக்கி புலிகள் ஆதரவு பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டி அரசியல் ஆதாய மடையத் துடிக்கின்றன. அதிரடிப் படையை ஏவி வீரப்பன் கும்பலை அழித்தொழிப்பது மட்டுமின்றி, நியாயமான தமிழின உரிமைக்கான கோரிக்கைகளைக் கூட கொச்சைப் படுத்தி பிரிவினைவாத - பயங்கரவாதமாகச் சித்தரித்து பாசிச அடக்குமுறையை நியாயப்படுத்த முயற்சிக்கின்றன. இவற்றை எதிர்கொள்ளத் திராணியற்ற கருணாநிதியோ, வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் வீரப்பன் விவகாரம் மையமானதாகி

தொடர்ச்சி 6-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# கிரிமினல் வீரப்பனை வேட்டையாட அதிரடிப்படை... தண்டிக்கப்பட்ட கிரிமினல் ஜெயாவுக்கு பூனைப்படை பாதுகாப்பா?

இந்திய அரசியல், கிரிமினல் சட்ட முறைமையின் முரண்நிலை மிகவும் நகைப்புக்குரிய முறையில் வெளிப்பட்டிருக்கிறது.

வீரப்பன் அறிவிக்கப்பட்ட கிரிமினல் குற்றவாளி. அவனைத் தேடிப் பிடிப்பதற்கு கருப்புப் பூனைப் படை (கமாண்டோ படை)யின் உதவி கோரி கிடைக்காமல், எல்லைப் பாதுகாப்புப் படை உதவி கிட்டியிருக்கிறது. வீரப்பன் கும்பலால் கடத்தப்பட்ட நடிகர் ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட சில நாட்களிலேயே கர்நாடகா - தமிழ்நாட்டு அதிரடிப்படை வீரப்பன் வேட்டைக்குக் கிளம்பிவிட்டது.

ஜெயலலிதாவோ, வழக்குத் தொடுக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்ட கிரிமினல் குற்றவாளி. கடுங்காவல் சிறையில்அடைக்கப்பட வேண்டியவர். இருந்தாலும், இயந்திரத் துப்பாக்கியேந்திய கருப்புப் பூனைப் படை அரசு மரியாதையுடன் பாதுகாப்புத் தரப்படுகிறது. ஓட்டுப் பொறுக்கும் பிரச்சாரத்துக்கு போனாலும், கோவில் கோவிலாகப் போய் விமோச்சன "பூசை - யாகம்" நடத்தினாலும், ஐதராபாத்துக்குப் போய் உல்லாச ஓய்வு எடுத்தாலும், கூடவே இந்தக் கருப்புப் பூனைப் படை காவலுக்குப் போகிறது.

அறிவிக்கப்பட்ட ஒரு கிரிமினல் குற்றவாளியை வேட்டையாட அதிரடிப்படை. தண்டிக்கப்பட்ட ஒரு கிரிமினல் குற்றவாளியைப் பாதுகாப்பதற்குக் கருப்புப் பூனை கமாண்டோ படை.

இந்த எதிரெதிரான, மாறுபட்ட அணுகுமுறைக்குச் சொல்லக் கூடிய ஒரே காரணம் "வீரப்பன் தலைமறைவாக இருக்கிறான்; சட்டத்தின் முன் தன்னை நிறுத்துவதில்லை." இது உண்மையான காரணமே கிடையாது. சரணடைந்தால் தன் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது, கொல்லப் படுவோம் என்கிற பயத்திலேயே ஒளிந்து வாழ்கிறான்.

வீரப்பனைத் தேடிப் பிடிக்கவில்லை என்பதற்காக இரு மாநில அரசுகளும் பதவி விலகட்டும் என்று கோபம் கொப்பளிக்கப் பேசுகிறது. நீதிமன்றம். ஆனால், ஜெயலலிதா மீதான இலஞ்ச - ஊழல் வழக்குகளுக்கு இதுவரை 400-க்கும் மேற்பட்ட தடை உத்தரவுகள் போட்டிருக்கின்றது, அதே நீதிமன்றம். இரண்டு கிரிமினல் குற்றவாளிகளிடம் ஏன் இந்த வேறு வேறான - எதிரெதிரான அணுகுமுறை? இதைத்தான் ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு, ஒரு கண்ணுக்கு வெண்ணெய் வைப்பது என்கிறார்கள் ஏன் இந்த இரட்டை அணுகுமுறை?

இந்தியாவில் அரசியல்வாதிகள் கிரிமினல்மயமாவதும், கிரிமினல்கள் அரசியல்வாதிகளாவதும் எங்கும் நிறைந்திருப்பதுதான். இதைப்பற்றி விசாரிக்கித் தனி கமிசன் போடப்பட்டு, அரசியல்வாதிகள், கிரிமினல்கள்,. அதிகாரிகள், போலீசு - இவர்களின் கூட்டு கெட்டி தட்டிப் போயிருப்பது நிரூபிக்கப்பட்டு, இந்த நிலைமையை மாற்ற முடியாது என்று கைவிடப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாகிறது.

வீரப்பன் கிரிமினல் குற்றவாளியாக இருந்து அரசியல்வாதியாக மாறுகிறான்.

ஜெயலலிதா அரசியலில் நுழைந்து கிரிமினல் குற்றவாளியாக மாறிவிட்டவர்.

இப்போது வீரப்பனும், ஜெயலலிதாவும் தனி நபர்கள், அல்ல; அவ்விருவரோடு சேர்ந்து கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்ட பங்காளிகள் மட்டும் இப்போது அவர்களின் பின்னணியில் இல்லை.

இப்போது ஜெயலலிதாவின் பின்னே, சசிகலா - தினகரன் முதலிய அதிமுக குற்றக் கும்பல் மட்டும் கிடையாது. மூப்பனார், சங்கரய்யா, நல்லக்கண்ணு, வீரமணி, சோனியாவின் எடுபிடி இளங்கோவன், திருமாவளவன் என்று ஒரு பெரிய அணியே நிற்கிறது.

அதேபோல, வீரப்பனின் பின்னே சேத்துக்குளி கோவிந்தன் போன்ற கிரிமினல், குற்றத்தையே தொழிலாகக் கொண்டவர்கள் மட்டுமில்லை. தமிழர் விடுதலைப் படை, தமிழ்நாடு மீட்புப்படை மற்றும் வீரப்பனுக்காகப் பரிந்து நிற்கும் பல்வேறு தமிழினவாதக் குழுக்கள் நிற்கின்றன.

ஜெயலலிதா, வீரப்பன் ஆகிய இருவரையும் ஒப்பீடு செய்வதையும், இருவரையுமே கிரிமினல் குற்றவாளிகள் என்று சொல்லுவதையும் அவர்களின் பின்னே அணிவகுத்து நிற்பவர்கள் ஏற்பதில்லை. அதிலும் குறிப்பாக, வீரப்பனை ஒரு கிரிமினல் குற்றவாளி என்று வரையறுப்பது தமிழினவாதக் குழுக்களுக்கு ஆத்திரமூட்டுகிறது. ஆனால், அதுதான் உண்மை.

ஜெயலலிதா, வீரப்பன் இரண்டு பேருமே தனிப்பட்ட நபர்களைத் தாக்கிக் கொலை - கொள்ளையில் ஈடுபடும் தனிப்பட்ட குற்றவாளிகளாக இல்லை. தற்செயலான குற்றங்கள் புரிந்தவர்களுமில்லை. கிரிமினல் குற்றத்தையே தொழிலாகக் கொண்ட மஃபியா கும்பலைப் போலச் செயல்பட்டிருக்கிறார்கள்.

**நெடுமாறன் தூதுக்குழு ராஜ்குமாரை மீட்க போகவில்லை, வீரப்பனின் கவுரவத்தைக் காக்கப் போனது.**





படிப்பகம்

www.padippakam.com



**அதிமுக கூட்டணியின் வீரப்பன் எதிர்ப்பு: கிரிமினல் ஜெயா குற்றங்களை மறைப்பதற்கும், அரசியல் ஆதாயம் தேடுவதற்கும்.**

ஆனால், ஜெயலலிதாவுக்குப் பின்னே இருக்கும் கூட்டணிக் கட்சிகளும், வீரப்பனுக்குப் பின்னே இருக்கும் தமிழினவாதக் குழுக்களும் ஜெயலலிதா, வீரப்பன் ஆகியோரையும் விஞ்சிவிடும் அளவுக்கு அவர்களுக்காக வக்காலத்து வாங்குகின்றனர்.

''என்னதான் கிரிமினல் குற்றங்கள் புரிந்திருந்தாலும் ஒரு பார்ப்பன கிரிமினலோடு வீரப்பனை ஒப்பிடலாமா?'' என்பது ஒரு கேள்வி. ''சந்தன மரங்களையும் யானைத் தந்தங்களையும் வெட்டி விற்ற பணத்தை ஏழைகளுக்குத் தானே வீரப்பன் கொடுத்தான். காரும் பங்களாவும் சொத்தும் சுகமுமாக வீரப்பன் குடும்பம் வாழ்கிறதா? ஏழ்மையில்தானே இன்னமும் வாடுகிறது! காடுகளில் கொள்ளையடித்து வெளிநாடுகளிலா சொத்து வாங்கினான் வீரப்பன். அதிரடிப் படையின் அக்கிரமங்களோடு ஒப்பிடும்போது வீரப்பனின் குற்றங்கள் ஒன்றுமில்லை. ஒரு காலத்தில் குற்றங்கள் செய்தவன் திருந்தக் கூடாது, திருந்தி வந்தால் ஏற்கக் கூடாதா? காலம்பூராவும் அவனை கிரிமினலாகவே கருதவேண்டுமா?'' போன்றவை பிற கேள்விகள்.

அதேபோல ஜெயலலிதாவுக்கு வக்காலத்து வாங்குபவர்களும் பேசுகிறார்கள்: ''ஜெயலலிதா மட்டுமா இலஞ்ச ஊழல்களில் ஈடுபட்டார்? அரசியல் பழிவாங்குவதற்காகத்தான் ஜெயலலிதா மீது வழக்குப் போட்டு, அவரை அரசியலிலிருந்து விரட்டுவதற்காகச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, அவசர அவசரமாகத் தண்டிக்கச் சதி செய்கிறார்கள். ஜெயலலிதா மீது இலஞ்ச ஊழல் வழக்குப் போட கருணாநிதிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? கருணாநிதி - மாறன் - ஸ்டாலின் என்ற ஒரு குடும்பம் மட்டும் கொள்ளையடிக்கவில்லையா? வழக்குப் போட்டாலே, கீழ் நீதிமன்றங்களினால் தண்டிக்கப்பட்டாலே குற்றவாளி என்றாகிவிடுமா?'' என்று வாதிடுகிறார்கள்.

கருணாநிதி குடும்பத்தினரும் இலஞ்ச - ஊழல்காரர்கள் என்பதோ, அதிரடிப் படையின் அக்கிரமங்களோ, ஜெயலலிதா, வீரப்பன் இருவரும் என்ன சாதிக்காரர்கள் என்பதோ ஜெயலலிதா, வீரப்பனுடைய கிரிமினல் குற்றங்களை ரத்து செய்து விடுவதில்லை. எதிர்த்தரப்பின் குற்றங்களைக் காட்டி ''நீ மட்டும் யோக்கியனா?'' என்ற ஒட்டுப் பொறுக்கிகள் வாதிட்டுத் தமது குற்றங்களை நியாயப்படுத்துகின்றனர். இரண்டு தரப்பினுடைய குற்றங்களும் தண்டிக்கப்பட வேண்டியவை. ஒன்றை ஒன்று நியாயப்படுத்தாது; அப்படிச் செய்வது அனைத்துக் குற்றவாளிகளையும் தப்பிக்க விடுவது போலாகிவிடும். இதுதான் மக்கள் எடுக்கவேண்டிய நிலையாகும்.

கொள்ளையடித்த பணத்திலிருந்து ஒரு பகுதியை தமது விசுவாசிகளுக்கு ''தர்மம்'' செய்வது அரசியல்வாதிகள், கிரிமினல்கள் இப்போது பின்பற்றும் கொள்கையாகவே உள்ளது. இதைப் பழைய ''ராபின் குட்'' அடிப்படையிலானது என்று பார்ப்பது தவறாகும். ''ஜெயலலிதாவைப் போல வீரப்பன் சொத்து வாங்கிக் குவிக்கவில்லை. வீரப்பன் குடும்பம் வறுமையில் வாடுகிறது'' என்பது இருவருடைய கிரிமினல் குற்றங்கள் எங்கிருந்து தொடங்கின என்பதைப் பொறுத்தது.

வீரப்பனோ, ஜெயலலிதாவோ மனந்திருந்தி விட்டார்கள் என்று முடிவு செய்வதற்கு, அவர்கள் இருவருமே முதலில் குற்றம் செய்து விட்டதாக ஒப்புக் கொள்ளவே இல்லை. வீரப்பனோ, ''இனி நான் பொது மன்னிப்புக் கேட்கப் போவதில்லை. இனி மேலும் நான் தனி மனிதனில்லை. ஒரு பெரிய இயக்கத்தின் அங்கம்'' என்ற கூறிக் கொண்டிருக்கிறான். ஜெயலலிதாவோ, தேர்தலில் படுதோல்வி அடைந்து ஆட்சியிழந்தபோது, தன்னைச் சுற்றியிருந்தவர்கள் தவறு செய்துவிட்டார்கள்; தன்னிடம் பொய் சொல்லி விட்டார்கள். சசிகலாவுடன் எந்த உறவும் கிடையாது என்று விளக்கம் சொன்னார். ஆனால், சில மாதங்களிலேயே அந்த நிலையை மாற்றிக் கொண்டார். சசிகலாவுடன் இணைந்து விட்டார். அரசியல் பழிவாங்கவே வழக்குகள் போடப்பட்டதாகச் சொன்னார்.

தவறை ஒப்புக் கொள்ளாத எவரும் திருந்திவிட்டதாக ஏற்கமுடியாததைப் போலவே, ஏதாவது அரசியல் கோரிக்கையை முன் வைத்து கிரிமினல் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிவிட எத்தணிப்பதையும் ஏற்க முடியாது. இத்தனைக்கும் ஜெயலலிதா, வீரப்பன் ஆகிய இருவருமே கிரிமினல் குற்றத் தண்டனையில் இருந்து தப்புவதற்கு தமிழின உரிமையையே தமது கோரிக்கையாக முன்வைத்தனர் என்பதுதான் வியப்புக்குரியது! இருவருமே தமிழர்களை இளித்தவாயினர் என்று நம்புகிறார்களா? அல்லது தமிழர்கள் மீது உண்மையான அக்கறையினால் அப்படிச் செய்கின்றனரா? காவிரிப் பிரச்சினைக்கு ஜெயலலிதா உண்ணாவிரதமிருந்து நாடகமாடியபோது ஓடோடிச் சென்று வாழ்த்திய அதே நெடுமாறனும் மணியரசனும் இப்போது வீரப்பனின் செய்கையை நம்பச் சொல்கின்றனர்!

''வீரப்பனின் கோரிக்கைகள் நியாயமானவை; அதை அடைய ராஜ்குமார் கடத்தல் உட்பட அவருடைய நடைமுறை ஏற்கத்தக்கதல்ல'' என்பதுதான் வீரப்பன் கூட்டாளிகள் தவிர, பிற தமிழினக் குழுக்களின் அறிவிக்கப்பட்ட, அதிகாரபூர்வ நிலைப்பாடு. இதே அடிப்படையில்தான் புதிய ஜனநாயகம் ஏடு எழுதியிருந்தது.

இருந்தபோதும், வீரப்பனை கிரிமினல் என்று குறிப்பிடுவதோ, ஆதரிக்க மறுப்பதோ தவறு; பார்ப்பனரல்லாதவர் என்பதாலேயே வீரப்பனிடம் பரிவு காட்ட வேண்டும் என்று சொல்லி ''புதிய ஜனநாயக''த்துக்கு எதிராக அவதூறு பரப்பப்படுகின்றது.

இவ்வளவு தூரம் பார்ப்பன எதிர்ப்பு, தமிழின உணர்வு காட்டும் தமிழினவாதக் குழுக்கள், வீரப்பனுக்கு எதிரான ஜெயலலிதாவின் கூச்சல்களை எதிர்த்து, ''நீயே ஒரு கிரிமினல் குற்றவாளி! வீரப்பனைப் பிடித்து தண்டிக்கும்படி கோர உனக்கென்ன தார்மீக உரிமை இருக்கிறது?'' என்று கேட்கவும் எதிர்க்கவும் துணியவில்லையே, ஏன்?

வீரப்பன் தமிழினப் போராளி ஆகி விட்டான், திருந்திய மனிதாபிமானி ஆகி விட்டான் என்று தமிழினவாதக் குழுக்கள் வக்காலத்து வாங்கி, அவனுடைய குற்றங்களை மூடி மறைக்க முயலுகின்றன. ஜெயலலிதா மதச் சார்பில்லாத சக்தியாக மாறி விட்டார். ஆகவே, அவருடைய குற்றங்களைப் பெரிதாகக் கருதவேண்டியதில்லை என்று ஜெயலலிதா தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் வாதிடுகின்றன ஜெயலலிதாவின் மதச்சார்பில்லா அரசியல் நிலைப்பாடு (அது உண்மையல்ல என்பது வேறு விசயம்), அவரது இலஞ்ச ஊழல் குற்றங்களை ரத்து செய்து விடுவதில்லை.

அது மட்டுமல்ல, கிரிமினல்கள் அரசியல்வாதிகளாவதும் அரசியல்வாதிகள் கிரிமினல்களாவதும், சர்வசாதாரணமாகிவிட்ட நிலையில், அரசியல் கிரிமினலான ஜெயலலிதா, கிரிமினல் அரசியல்வாதியான வீரப்பன் விவகாரத்தை முன்னிறுத்தி அரசியல் ஆதாயம் தேட எத்தணிக்கிறார். அதற்கு அவருடைய அரசியல் கூட்டணியினர் துணை போகின்றனர்.

புதிய ஜனநாயகம் ஏடு பலமுறை சுட்டிக்


படிப்பகம்

www.padippakam.com

காட்டியவாறு, ''பிரிவினைவாதப் பீதியூட்டி அரசியல் ஆதாயம் தேடும் பார்ப்பன சதியில்'' ஜெயலலிதாவின் கூட்டணியினர் ஊக்கத்துடன் பங்கேற்கின்றனர். இந்தச் சதியின் மூளையாக ''சோ'', வாசந்தி, சு.சாமி, ஜூனியர் விகடன், ஜெயேந்திர சங்கராச்சாரி என்று பெரிய கும்பலே செயல்படுகிறது.

''வீரப்பனுடன் தமிழினப் பிரிவினை வாதக் கும்பல் கூட்டுச் சேர்ந்துள்ளது. விடு தலைப் புலிகளின் தொடர்பு உள்ளது. வீரப்பன் காட்டிலே தீவிரவாத சதியும் ஆயுதக் குவிப்பும் நடக்கிறது; இதனால் நாட்டுக்கே பேராபத்து, நாட்டு ஒற்றுமை தகர்ந்து போகும்'' என்று உச்சநீதி மன்ற பார்ப்பான் முதல் உள்ளூர் சங்கராச்சாரி வரைக் கூச்சல் போடுகின்றனர். இப்படி நடக்கும் பிரச்சாரம் 1991 தேர்தல்களில் நடந்ததைப் போல படுதோல்விக்குக் காரணமாகி விடும் என்று அஞ்சும் கருணாநிதி அரசோ, நாட்டு ஒற்றுமையைக் காக்க, பிரிவினைவாதத்தை ஒடுக்க அதிரடிப் படையை ஏவிவிடுகிறது.

அடுத்தவர் நிழலில் இளைப்பாறுவதையே தமது செயல்தந்திரமாகக் கொண்ட தமிழினக் குழுக்கள் என்ன செய்யப் போகின்றன?

● ஆர்.கே.

---

தலையங்கம் தொடர்ச்சி...

விடாதிருக்கவும், நீதிமன்றக் கெடுபிடிகளுக்கு அஞ்சியும், எதிர்த்தரப்பின் வாயடைக்கவும் அதிரடிப் படையை ஏவிவிட்டு வீரப்பன் நடமாடும் காட்டுப் பகுதியில் வேட்டையைத் தீவிரமாக்கியுள்ளார்.

அதிரடிப் படையின் அட்டூழியங்கள் - கிரிமினல் குற்றங்களை நியாயப்படுத்த முடியாததைப் போலவே, வீரப்பன் கும்பலின் கிரிமினல் குற்றங்களையும் நியாயப்படுத்த முடியாது. அதுபோலவே காட்டுக் கொள்ளைக்காரன் வீரப்பனையும் நாட்டுக் கொள்ளைக்காரி ஜெயாவையும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக நிற்பதைக் காட்டி ஆதரிக்கவும் முடியாது. இருதரப்பு கிரிமினல் கும்பல்களும் மக்களின் நியாயமான கோரிக்கைகளின் பின்னே ஒளிந்து கொள்வது, தண்டனையிலிருந்து தப்புவதற்கும் தம்மை மக்கள் தலைவராகக் காட்டிக் கொள்வதற்கும் தானே தவிர, மக்கள் மீதான அக்கறையினால் அல்ல. போலி கம்யூனிஸ்டுகள் பாசிச ஜெயா கிரிமினல் கும்பலின் பின்னே வால்பிடித்துச் செல்வதைப் போலவே, தமிழினப் பிழைப்புவாதிகளும் கிரிமினல் வீரப்பன் கும்பலை ஆதரித்து தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளக் கிளம்பியுள்ளனர். நியாயமான தமிழின உரிமைக்கான போராட்டங்களை, பிரிவினைவாத - பயங்கரவாதச் செயலாக முத்திரை குத்தி ஒடுக்க எதிரிகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகவே, தமிழினப் பிழைப்புவாதிகளின் இத்தகைய நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

## 16-வது ஆண்டில் ''புதிய ஜனநாயகம்''

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

நமது புதிய ஜனநாயகம், இந்த இதழிலிருந்து 16-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. தமிழகத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு இப்படியொரு பத்திரிகை தொடர்ந்து வெளிவருவதென்பது புரட்சிகர இயக்கத்தில் இதுவே முதன் முறையாகும்.

பாசிச இருள் சூழ்ந்து நாடு மீண்டும் காலனியாகி வரும் இன்றைய நிலையில், பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டி வரும் நமது இதழுக்கு நிச்சயம் நீங்கள் தோள் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்களது ஊக்கமான ஆதரவுடன், உறுதியான ஒத்துழைப்புடன் எல்லா இடர்ப்பாடுகளையும் தகர்த்தெறிந்து முன்னேற முடியும் என்ற நம்பிக்கையுடன் 16-வது ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

தோழமையுடன், ஆசிரியர் குழு.

---



## தமிழ் மக்கள் இசை விழா

**சனவரி – 6, 2001 சனிக்கிழமை**

**இடம்: தஞ்சை — திருவள்ளுவர் திடல் (திலகர் திடல்)**

காலை முதல் மாலை வரை - கருத்தரங்கம்
மாலை முதல் - கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள்

**மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு**

---

## வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து கிராமங்களில் தொடர் பிரச்சாரம்

தர்மபுரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை வட்டம், நாட்ராம்பாளையம் ஊராட்சியில் மக்களின் அடிப்படை வசதிகளையும் வாழ்வுரிமையையும் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஆட்சியாளர்களை எதிர்த்து இப்பகுதியில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, கிராமங்கள் தோறும் தெருமுனைக் கூட்டங்களாக தொடர் பிரச்சார இயக்கத்தை நவம்பர் முதல் வாரத்தில் நடத்தியது.

தேர்தல் நெருங்கிவிட்ட இன்றைய சூழ்நிலையில், போலி கம்யூனிஸ்டுகள் முதல் பாரதீய ஜனதா வரை அனைத்து ஓட்டுக் கட்சிகளும் தங்களை மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக் கொள்ள ''மக்கள் கோரிக்கை மாநாடு'', ''ஆட்டோ பிரச்சார இயக்கம்'', ''தாமரை யாத்திரை'' போன்றவற்றை நடத்தின. இந்த ஓட்டுப் பொறுக்கிகளை அம்பலப்படுத்தியும், மக்களின் அடிப்படை வசதிகளை உடனடியாக நிறைவேற்றக் கோரியும் இந்தப் பிரச்சார இயக்கத்தை வி.வி.மு. நடத்தியது.

தேன்கனிக் கோட்டை பகுதியில் ஏற்றுமதி அடிப்படையிலான தொழில்களைத் தொடங்க வேண்டும்; தோட்டக்கலை பயிர்கள், பூக்கள் பயிரிடவும் ஏற்றுமதி செய்யவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதாகவே ஓட்டுக் கட்சிகளின் கோரிக்கைகள் உள்ளன. நாடு மீண்டும் காலனியாக்கப்படும் வேளையில் விவசாயத்தையே நாசமாக்கி வரும் ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்யும் வகையிலான இத்தகைய கோரிக்கைகளின் பின்னே மறைந்துள்ள மோசடிகளை வி.வி.மு. தனது பிரச்சாரத்தில் எடுப்பாக அம்பலப்படுத்தியது. மருத்துவமனை, பள்ளிக்கூடம், பேருந்து வசதி, சாலை வசதி, ரேசன்கடை, உள்ளிட்ட குடும்ப அட்டை, புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா, அஞ்செட்டி அருகே காட்டாற்றில் சேதமடைந்த பாலங்களைச் செப்பனிடுதல், மெட்டரை ஆற்றில் புதிய பாலங்கள் கட்டுதல் முதலான கோரிக்கைகளை வலியுறுத்தி மக்களிடம் பிரச்சாரம் செய்தது. தேர்தல் பாதை தீர்வல்ல; ஓட்டுக் கட்சிகள் அனைத்துமே துரோகிகள்; போராட்டங்கள் மூலமே மக்களின் கோரிக்கைகள் நிறைவேற முடியும் என்பதை விளக்கி வி.வி.மு.வில் அணி திரளுமாறு அறைகூவல் விடுத்தது.

தகவல்: விவசாயிகள் விடுதலை முன்னணி, தேன்கனிக்கோட்டை வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com



# தனியார்மயம் கொல்லும்! கம்யூனிசமே வெல்லும்!

## — நவம்பர் புரட்சி தினச் செய்தி

1917-ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம் நாளன்று ரசியப் பாட்டாளி வர்க்கம் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய மகத்தான நாள்! அதுவரையில் புன்மைத் தேரைகளாய் புழுக்களாய் மதிக்கப்பட்டு வந்த பாட்டாளி வர்க்கம், நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் ஆட்சியதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்து விட்டு, உழைக்கும் மக்களின் சோசலிச ஆட்சியை மலரச் செய்த நாள்! அடுத்த சில ஆண்டுகளிலேயே நாட்டின் உற்பத்தியைப் பெருக்கியும், உலகமே வியக்கும் வண்ணம் வாழ்வின் அனைத்து துறைகளை மேம்படுத்தியும் சோசலிசக் கட்டுமானம்தான் அரசியல் அமைப்புகளிலேயே மிக உன்னதமானது என்று ரசியப் பாட்டாளி வர்க்கம் உலகறியச் செய்தது. உலகம் முழுவதும் அடிமைப்பட்டுக் கிடந்த காலனி நாட்டு மக்களின் விடிவெள்ளியாய், நம்பிக்கை நட்சத்திரமாய் பாட்டாளிகளின் சோவியத் சோசலிச அரசு திகழ்ந்தது.

இம்மகத்தான பாட்டாளி வர்க்கப் புரட்சி தினத்தை தமிழகத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் இயங்கும் பகுதிகளில் கொண்டாடின. 83-வது ஆண்டின் நவம்பர் புரட்சி நாளை, நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கும் இந்துவெறி பாசிசத் துக்கும் எதிரான பிரச்சார விழாவாக நடத்தின.

● **கோவையில்,** நவம்பர் புரட்சி நாளன்று காலையில் சின்னியம்பாளையம் தியாகிகள் நினைவிடத்தில் ம.க.இ.க.வும், பு.ஜ. தொழிலாளர் பிரச்சாரக் குழுவும் இணைந்து சிவப்பஞ்சலி செலுத்தின. அதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் நிறைந்த கணபதியில் கொடியேற்று விழா நடந்தது. மாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தஞ்சை ம.க.இ.க. தோழர் சிறப்புரையாற்றினார். அதைத் தொடர்ந்து தோழர்கள் புஷ்பராஜ் - சாந்தி ஆகியோரின் சாதி - தீண்டாமை ஒழிப்பு புரட்சிகரத் திருமணம், ம.க.இ.க. தோழர் சீனிவாசன் தலைமையில் பொதுக்கூட்ட மேடையிலேயே நடந்தது. புரட்சி நாளில் புரட்சிகரமான முறையில் திருமணம் செய்து கொண்ட மணமக்களைப் பலரும் வாயார வாழ்த்தினர். இறுதியாக ம.க.இ.க. மையக் கலைக் குழு நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சி, உழைக்கும் மக்களின் போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பி பெருத்த வரவேற்பைப் பெற்றது. இந்நவம்பர் புரட்சி நாள் விழாவுக்கு 1200-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்ததோடு, நன்கொடை அளித்தும் தமது ஆதரவை நல்கினர்.

● **திருவாரூர்** மாவட்டத்தில் பு.மா.இ.மு. சார்பில் நவம்பர் புரட்சி நாளன்று குடவாசல் வட்டம் மணக்காலில் செங்கொடியேற்றி சைக்கிள் பேரணியும், தெருமுனைப் பிரச்சாரமும் எழுச்சியுடன் நடந்தது. காலையிலிருந்து மணக்கால் அய்யம்பேட்டை, பெரும்பண்ணையூர், காப்பனாமங்கலம், சிமிழி, புதுக்குடி, மஞ்சக்குடி, கொரடாச்சேரி, ஊர்க்குடி, மடப்புரம், கடமங்குடி, குளிக்கரை, தென்பாதி - வடபாதி என 30 கி.மீ அளவுக்கு சுற்றுப்புற கிராமங்களில் செஞ்சட்டையுடன் சைக்கிள் பேரணியும், தெருமுனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

● **கரூரில்,** நவம்பர் புரட்சி நாளன்று பசுபதி பாளையம் நாலு ரோட்டில் பு.மா.இ.மு. கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி இப்புரட்சிநாள் பற்றியும், இந்துவெறி பாசிசத்தை - நாடு மீண்டும் அடிமையாக்கப்பட்டு வருவதைப் பற்றியும் தோழர்கள் உரையாற்றினர். அதைத் தொடர்ந்து கொளந்தனூரிலும் இதே போல் நவம்பர் புரட்சி நாள் விழா எழுச்சியோடு நடந்தது. நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டியும், ஆசான் லெனினது உருவப் படங்களை அலங்கரித்து பொது இடத்தில் வைத்தும், புரட்சிகர பாடல்களை காலை முதல் மாலைவரை ஒலிபரப்பியும் நடந்த இந்த விழா உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

● **சென்னையில்,** பு.ஜ.தொ.மு.வும் ம.க.இ.க.வும் இணைந்து கொரட்டூரில் நவம்பர் புரட்சி நாளன்று செங்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, இப்பகுதிவாழ் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், கவியாடல் - உரைவீச்சுப் போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கி உற்சாகமாகக் கொண்டாடியது.

நவம்பர் புரட்சி நாளையொட்டி திருவாரூர் - மணக்காலில் நடந்த சைக்கிள் பேரணி; கோவையில் நடந்த சாதி-தீண்டாமை ஒழிப்பு புரட்சிகரத் திருமணம்




● **தஞ்சையில்** நவம்பர் புரட்சி நாளில் பு.மா.இ.மு. சார்பில் வல்லம் பெரியார் நகரில் செங்கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நடந்த பல்வேறு கலை இலக்கியப் போட்டிகளில் பகுதிவாழ் இளைஞர்களும் சிறுவர்களும் ஊக்கமாகப் பங்கேற்றனர். மாலையில் கவியரங்க நிகழ்ச்சியும், பின்னர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

● **திருச்சியில்,** ம.க.இ.க.வும் பு.மா.இ.மு.வும் இணைந்து காட்டூரில் நவம்பர் புரட்சி நாளை எழுச்சியோடு கொண்டாடின. நவம்பர் புரட்சி நாளை வாழ்த்தி காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர், விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் மாவட்ட செயலர் உள்ளிட்டு பல்வேறு அமைப்புகளின், சங்கங்களின் பிரமுகர்களும் வழக்கறிஞர்களும் சிறப்புரையாற்றினர். பின்னர் இளைஞர்கள் - சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும், கலை - இலக்கியப் போட்டிகளும் நடத்தி பரிசளிக்கப்பட்டன.

●●●


படிப்பகம்

www.padippakam.com

### தாமிரபரணி கொலைகள்

# தயார்நிலை தீர்ப்புடன் ஒரு விசாரணை கமிசன்

''தாமிரபருணி படுகொலை'' சம்பவத்தைத் தமிழக மக்கள் அதற்குள் மறந்திருக்க முடியாது. கூலியை உயர்த்தக் கோரிப் போராடியதற்காகச் சிறையில் அடைக்கப்பட்ட தங்களின் சக தொழிலாளர்களை விடுவிக்கக் கோரி, மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தியபொழுது, அவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கி, மண்டையைப் பிளந்து, தாமிரபருணி ஆற்றில் தூக்கிப் போட்டு, தமிழகப் போலீசு 17 தொழிலாளர்களைப் படுகொலை செய்த கருப்புச் சம்பவம் இது.

ஊர்வலமாக வந்த தொழிலாளர்கள் தங்களின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தாமிரப்ருணி ஆற்றில் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லாமல், தமிழகப் போலீசாரால் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டதால், இத்தாமிரபருணி படுகொலைகள் இரண்டாவது ஜாலியன் வாலாபாக் என்றழைக்கப்பட்டது. ஜாலியன் வாலாபாக்கில் நூற்றுக் கணக்கான பஞ்சாபியர்களைப் படுகொலை செய்த பிரிட்டிஷ் இராணுவத் தளபதி டயர், ''தோட்டாக்கள் தீரும் வரை சுட்டுக் கொண்டே இருந்தேன்'' எனத் திமிரெடுத்துப் பேசினான். லத்தியைச் சுழட்டியே 17 தொழிலாளர்களைக் கொன்ற தமிழகப் போலீசின் கையில் அன்று துப்பாக்கி இருந்திருந்தால், பிணங்களின் எண்ணிக்கையில் டயரையும் மிஞ்சியிருப்பார்கள்.

தி.மு.க. அரசு, இச்சம்பவம் பற்றி நீதி விசாரணை நடத்துவதற்கு முன்னாள் உச்ச நீதி மன்ற நீதிபதி மோகனை நியமித்திருந்தது. நீதிபதி மோகன் விசாரணை நடத்தி தமிழக அரசுக்குக் கொடுத்துள்ள அறிக்கையைப் பற்றிக் கூற வேண்டுமென்றால், ''மாஞ்சோலை தொழிலாளர்களைக் கொல்ல போலீசுக்கு லத்தி தேவையாய் இருந்தது; நீதிபதி மோகனுக்கோ பேனா முனையே போதுமானது'' என்றுதான் சொல்ல முடியும்.

''ஊர்வலத்தினர் போலீசுக்கும், நிர்வாகத்துக்கும் எதிராக தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி முழக்கம் எழுப்பியதாலும், தடையை மீறி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குள் நுழைய முயன்றதாலும், கிருஷ்ணசாமி உள்ளிட்டுத் தலைவர்கள் யாரும் ஊர்வலத்தினரைக் கட்டுப்படுத்த முயலாததாலும், தலைவர்களின் பேச்சு ஊர்வலத்தினரைத் தூண்டிவிடும்படியாக அமைந்ததாலுமே போலீசார் தடியடி நடத்த வேண்டியதாகியது. போலீசார் தடியடி நடத்தியிராவிட்டால் சிலருக்குக் காயங்கள் உட்பட, பொருட்சேதம் எவ்வளவு ஏற்பட்டிருக்கும் என்பதைக் கணிக்க முடியாது. எனவே, ஊர்வலத்தினர் மீது போலீசார் தடியடி நடத்துவதற்குப் போதுமான அவசியம் இருந்துள்ளது.''

''இறந்து போனவர்களுள் 11 பேர் ஆற்று நீரில் மூழ்கி இறந்து போனதால், அதை விபத்து என்றுதான் கூற முடியும். மீதி 6 பேரும் ஆற்றுக் கரையில் இருந்த கூட்ட நெரிசலாலும், கொக்கிரக்குளம் சாலையில் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாகவே இறந்து போயினர். ஆற்றைக் கடக்க ஏற்பட்ட நெரிசலால்தான், நீச்சல் தெரிந்த ஜெய்சர், பூபாலராஜன், ரத்னமேரி ஆகியோர் இறந்தனர். நீந்துவதற்கு முயற்சி செய்தபோது போலீசார் அவர்களை அடிக்கவில்லை. ஊர்வலத்தினரை ஆற்றை நோக்கி அடித்துத் துரத்த வேண்டும்; அவர்கள் தப்பிப்பதற்கு வேறு வழியில்லாமல் ஆற்றுக்குள் குதிக்க வேண்டும் என்ற சதித் திட்டத்தோடு போலீசார் தடியடி நடத்தவில்லை.''

சுருக்கமாகச் சொன்னால், மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் மீது போலீசார் நடத்திய தடியடி நியாயமானது; அதேசமயம், 17 பேரின் சாவுக்குப் போலீசாரைக் குற்றவாளியாக்குவது அநியாயமானது - இதுதான் நீதிபதி மோகனின் விசாரணை முடிவு.

இத்தடியடி சம்பவம் தொடர்பாக பத்திரிகைகளில் வெளியாகியிருந்த புகைப்படங்களைப் பார்த்தாலே போதும், நீதிபதி மோகனின் விசாரணை எத்துணை அயோக்கியத்தனமானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்; போலீசு அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் சவப் பரிசோதனை செய்யப்பட்டு, வெளியிடப்பட்ட மருத்துவர்களின் அறிக்கையையும்; போலீசாரின் தாக்குதலை நியாயப்படுத்தி கருணாநிதி விட்ட அறிக்கையையும் இப்பொழுது படித்துப் பாருங்கள். அப்பொழுது புரியும், நீதிபதி மோகன் அவற்றைத்தான் வாந்தியெடுத்திருக்கிறார் என்பது. ஊர்வலம் வந்த வழியில் அன்று எந்தவொரு கடையும் பயத்தின் காரணமாக அடைக்கப்படவில்லை. ஆனாலும் நீதிபதி மோகன் போலீசார் தடியடி நடத்தியிருக்காவிடில், பெரும் பொருட்சேதம் ஏற்பட்டிருக்கும் எனச் சரடு விடுகிறார். நிராயுதபாணியான தொழிலாளர்களை, விசாரணை அறிக்கை, வன்முறைக் கும்பலாகச் சித்தரித்து, அவர்களை இப்படி ஓட ஓட விரட்டி தாக்கியது நியாயமானதுதான் எனக் கூறுகிறதென்றால், இந்தத் தீர்ப்பில் ஓரவஞ்சனையும், காழ்ப்புணர்ச்சியும் தவிர, நடுநிலை எங்கே இருக்கிறது?

நீதிபதி மோகன் கழக உடன்பிறப்புகளைப் போலவே, கருணாநிதியைப் பொதுக் கூட்ட மேடைகளில் தானைத் தலைவரே என அழைக்கத் தயங்காதவர். கருணாநிதியால்தான் தனக்கு நீதிபதி பதவி கிடைத்தது என்ற நன்றி விசுவாசத்தோடு நடந்து கொள்பவர். இப்படிபட்ட அதிகாரவர்க்க உடன்பிறப்பிடமிருந்து நடுநிலையான, நியாயமான தீர்ப்பை எப்படி எதிர்பார்க்க முடியும்?

பிரச்சினை இதுதான் என்றால், முன்னாள் நீதிபதி மோகனுக்குப் பதிலாக, வேறொரு 'நடுநிலை' தவறாத நீதிபதியை கமிசனின் தலைவராகப் போட்டிருந்தால், தாமிரபருணிப் படுகொலை சம்பவத்தில் நியாயம் கிடைத்திருக்கும் என்று சிலர் எண்ணலாம். ஆனால், தி.மு.க. அரசால் போலீசு அத்துமீறல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட சில விசாரணை கமிசன்களின் தீர்ப்பைப் பார்க்கும்பொழுது, இப்படி நம்பிக்கை கொள்வதற்கு அடிப்படையே இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

✱ சென்னை மையச் சிறைச்சாலையில்

கரையேற முயன்றவர்களைக் கூட போலீசு அடித்து வீழ்த்தியதை விபத்து என்று கூற முடியுமா?



சென்ற ஆண்டு நடந்த கலவரத்தின் பொழுது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 விசாரணைக் கைதிகள் இறந்து போயினர். இதனை விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதிபதி டேவிட் கிறிஸ்டியன் விசாரணை கமிசன், "இத்துப்பாக்கிச் சூடு தவிர்க்க முடியாதது; அவசியமானது; நியாயமானது. அதேசமயம் கைதிகள் நடத்திய கலவரத்திற்கு எந்தவொரு நியாயமும் கிடையாது" என்று தீர்ப்பளித்துள்ளது.

போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் விசாரணைக் கைதிகளைத் தவிர கலவரத்தைத் தூண்டிவிட்ட ரவுடிகளுள் ஒருவன்கூட இறந்து போகாதது ஏன்? முன்பின் தெரியாத பாக்ஸர் வடிவேலு என்ற ரவுடிக்காக, ஆயிரக் கணக்கான கைதிகள் கலவரத்தில் இறங்குவார்களா? என்ற கேள்விகளை கமிசன் அலசி ஆராய்ந்திருந்தால், போலீசாலும், நீதிமன்றத்தாலும் விசாரணையின்றித் தண்டிக்கப்படும் விசாரணைக் கைதிகள் பக்கமிருக்கும் நியாயம் வெளிவந்திருக்கும். துணை சிறை அதிகாரி ஜெயக்குமார் ரவுடிகளால் தாக்கப்பட்டு, எரித்துக் கொல்லப்பட்ட பொழுது, மற்ற சிறை அதிகாரிகள் ஏன் ஓடி ஒளிந்து கொண்டனர் என்ற கேள்வியை கமிசன் ஆழமாக விசாரித்திருந்தால், சிறை அதிகாரிகளுக்கும், சிறையில் இருந்த ரவுடிகளுக்கும் இருக்கும் தொடர்பு அம்பலப்பட்டிருக்கும். ஆனால், நீதிபதி டேவிட் கிறிஸ்டியன் கமிசனோ, உண்மையைக் கண்டுபிடித்துச் சொல்லுவதற்கு மாறாக, போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்துவதில்தான் அக்கறை காட்டியிருக்கிறது.

✱ திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள குண்டுபட்டி கிராம மக்கள் தங்கள் கிராமத்திற்கு தமிழக அரசு சாலை வசதி செய்து தராததால், பிப்ரவரி '98-இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்தனர். இதற்குப் பழிவாங்கத் துடித்த அப்பகுதி தி.மு.க. தலைவர்கள், தேர்தல் முடிந்தவுடன், போலீசு - ரவுடிகள் பட்டாளத்தோடு குண்டுபட்டிக்குள் நுழைந்து, அக்கிராம மக்களை மிருகத்தனமாகத் தாக்கி, அவர்களது அற்ப உடமைகளையும் நாசப்படுத்தினர்.

இதனை விசாரித்த முன்னாள் நீதிபதி முருகேசன், போலீசின் அத்துமீறலை ஒத்துக்கொண்டாலும், அதற்காக எந்தவொரு போலீசுக்காரனையும் தண்டிக்கச் சொல்லவில்லை. அதேசமயம், "குண்டுப்பட்டி கிராம மக்கள் வன்முறைக் குணம் கொண்டவர்கள்; எனவே, போலீசு பெரும் பட்டாளத்தோடு, தி.மு.க. தலைவர் வடிவேலுவைத் தாக்கியவர்களைக் கைது செய்யச் சென்றது சரியானது" என நியாயப்படுத்தியுள்ளார். போலீசு - தி.மு.க. குண்டர்கள் - ரவுடிகள் நடத்திய வன்முறை வெறியாட்டத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதிபதி, குண்டுபட்டி கிராம தாழ்த்தப்பட்ட மக்களை, "வன்முறை கும்பல்" என இழிவுபடுத்துகிறார். இது என்ன வகை நீதி?



**கருணாநிதி தலைமையில் முன்னாள் நீதிபதி மோகனுக்கு நடந்த பாராட்டு விழா.**

✱ ஜெயா ஆட்சியின் பொழுது, கொடியன்குளத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீது போலீசு நடத்திய மேல்சாதி வெறித் தாக்குதலை விசாரிக்க நியமிக்கப்பட்ட கோமதி நாயகம் கமிசன், "போலீசு அத்துமீறி நடந்து கொள்ளவில்லை" எனத் தீர்ப்பு வழங்கியது. அச்சம்பவம் நடந்தபொழுது தமிழக போலீசுத் துறையின் இயக்குநராக இருந்த வைகுந்த், "எனது 30 வருடப் பணியில், இதுபோன்று, மனிதத் தன்மையற்ற முறையில் போலீசு நடந்து கொண்டதை நான் கண்டதேயில்லை" என வெளிப்படையாகக் கூறினார். உயர் அதிகாரியே ஒத்துக் கொண்ட உண்மையை, விசாரணை கமிசன் புரட்டிக் கூறுகிறதென்றால், அதன் நோக்கத்தையே சந்தேகிக்கத்தான் வேண்டும்.

✱ 1997-ஆம் ஆண்டு இறுதியில் கோவையில் இந்து மதவெறியர்கள் தூண்டிவிட்டு நடத்திய கலவரத்தை விசாரணை செய்த கோகுலகிருஷ்ணன் கமிசன், "முசுலீம்களும் அல்-உம்மா தீவிரவாதிகளும் ஆயுதங்களைக் கொண்டு போலீசைத் தாக்க வந்ததால், முசுலீம்கள் மீது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூடு நியாயமானது" எனத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

மாசானமுத்து, முரளி என்ற இரு போலீசு அதிகாரிகள் கலவரத்தின் பொழுது இந்து மதவெறியோடு அலைந்ததையும், போலீசும் - இந்து முன்னணியும் கூட்டணி கட்டிக் கொண்டு முசுலீம்களின் உடமைகளை எரித்ததையும், முசுலீம்களின் உயிர்களைப் பறித்ததையும் மனித உரிமை அமைப்புகளின் விசாரணையில் அம்பலமாகியது. ஆனால், விசாரணைக் கமிஷனோ, தெரிந்தே இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, போலீசை நடுநிலையானதாக, நியாயமானதாகக் காட்டி, தமிழக மக்களை ஏய்க்கப் பார்க்கிறது.

கொடியன்குளம், குண்டுப்பட்டி, கோவைக் கலவரம் - இச்சம்பவங்களை விசாரித்த நீதிபதிகளுள் ஒருவரும் நீதிபதி மோகனைப் போன்று கருணாநிதியின் விசுவாசி இல்லைதான். ஆனாலும், இவ்வழக்குகளில் உண்மை குழி தோண்டி புதைக்கப்பட்டு, அரசுக்குச் சார்பாகத் தீர்ப்பு எழுதப்பட்டுள்ளது. மொத்தத்தில் பார்த்தால், இந்நீதிபதிகள் அனைவருமே உண்மைக்கு விசுவாசமாக இல்லாமல், அரசுக்கு விசுவாசமாக நடந்து கொண்டுள்ளனர். நீதிபதி மோகனோ, இன்னும் ஒருபடி மேலே போய் அரசை நடத்திச் செல்லும் கருணாநிதிக்கும் விசுவாசமாக இருக்கிறார்.

போலீசு அத்துமீறலோ, இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகளோ அம்பலப்பட்டு, மக்கள் கொதிப்படைந்து போராடும் பொழுது, மக்களின் ஆவேசத்தைத் தணித்துத் திசைதிருப்புவதற்கான கருவியாகத்தான் விசாரணைக் கமிஷன்கள் உள்ளன. இந்த உண்மை மீண்டும் இங்கே நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தி பூத்தாற்போல விசாரணைக் கமிசன் நியாயமான தீர்ப்பை வழங்கினால், அத்தீர்ப்பைக் குப்பைக் கூடைக்குள் தூக்கியெறிந்து விடுவதற்கான சட்டபூர்வமான உரிமையும் ஆளுங்கட்சிக்கு உண்டு. மும்பய் கலவரத்தை விசாரித்த சிறீகிருஷ்ணா கமிசனின் தீர்ப்புக்கு நேர்ந்த கதியை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஒருபுறம் செல்லாக் காசாகவும், மறுபுறம் மக்களை ஏய்க்கும் கருவியாகவும் இருக்கும் விசாரணை கமிசன்கள்; ஜெயா, அத்வானி, ராவ் போன்ற அரசியல் கிரிமினல்களைத் தண்டிக்க வக்கற்றதாகவும், அதேசமயம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கவசமாகவும் இருக்கும் நீதிமன்றங்கள்; இந்த நிலையில் அம்பலப்பட்டுப் போன அரசியல் கிரிமினல்களையும், போலீசு ரவுடிகளையும் தண்டிப்பதற்கும், மக்களுக்கு நீதி வழங்கவும், மக்கள் நீதிமன்றங்களை அமைப்பதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

● கருப்பன்


படிப்பகம்

www.padippakam.com

## பாலஸ்தீனப் போராட்டம்

# அமைதி ஒப்பந்த மாய்மாலம் அம்பலமானது

கடந்த ஆறேழு ஆண்டுகளாக 'அமைதி'யாக இருந்த பாலஸ்தீனப் பிரச்சினை இப்பொழுது மீண்டும் வெடித்துக் கிளம்பியுள்ளது. பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நடந்து வரும் இப்போராட்டத்தை, பாலஸ்தீன மக்கள் ''இரண்டாவது இண்டிஃபதா'' என்று அழைக்கின்றனர். முதலாவது இண்டிஃபதா 1987 தொடங்கி 1992 வரை நடந்தது. அந்த விடுதலை எழுச்சியைத் தொடர்ந்துதான், 1993-ஆம் ஆண்டு இஸ்ரேலிய அரசுக்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானது.

நவீன இரக இயந்திரத் துப்பாக்கிகள், கவச வண்டிகள், குண்டு வீச்சு ஹெலிகாப்டர்கள் என இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீன மக்களின் இந்த விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முனைந்து வருகிறது. மறுபுறமோ, பாலஸ்தீன மக்கள் இஸ்ரேலிய இராணுவத்தை எதிர்த்துத் தாக்குதல் நடத்துவதற்கு பெரும்பாலான சமயங்களில் பயன்படுத்தும் ஒரே ஆயுதம் தெருவோரங்களில் கிடக்கும் கற்கள்தான். இஸ்ரேல் இராணுவத்தின் ஆயுதப் பலத்தோடு ஒப்பிடும் பொழுது பாலஸ்தீன மக்கள் நிராயுதபாணியாகப் போராடுகிறார்கள்.

முகம்மது அல்துரா என்ற 12 வயதுச் சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், பாலஸ்தீன மக்களின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலைப் புரிந்து கொள்ள உதவும். சாதாரணமாக தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த அச்சிறுவனையும், அவனின் தந்தை ஜமாலையும் நோக்கி இஸ்ரேலிய இராணுவம் சுடத் தொடங்கியவுடனேயே, அவர்கள் இருவரும் தெருவோரத்தில் இருந்த தண்ணீர்த் தொட்டியின் அருகே ஓடிப் பதுங்கிக் கொண்டனர். ஆனாலும், இஸ்ரேலிய இராணுவம் நிராயுதபாணியான அந்த இருவரையும் கொன்றே தீர்ப்பது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு, பதுங்கிக் கிடந்த அந்த இருவரையும் நோக்கி கிட்டதட்ட முக்கால் மணி நேரம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. சரமாரியாகப் பாய்ந்து வந்த துப்பாக்கிக் குண்டுகளைக் கண்டு, பயந்து, அலறி, தனது தந்தையின் உடலோடு ஒட்டிக் கொண்ட அச்சிறுவன், இறுதியில் சல்லடையாகத் துளைக்கப்பட்டு இறந்து போனான்.

யூத இனவெறியும், கொலை வெறியும் கொண்ட இஸ்ரேலிய இராணுவம், இது போல நடத்தி வரும் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டினால், ஹெலிகாப்டர் குண்டு வீச்சுத் தாக்குதல்களினால், 150-க்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் இறந்து போயினர்; இறந்து போனவர்களுள் கிட்டதட்ட 25 பாலஸ்தீனர்கள் 18 வயதுக்கும் கீழான இளைஞர்கள் - சிறுவர்கள். இதுதவிர, மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆனாலும், இந்த அடக்குமுறைகளால் பாலஸ்தீன மக்களிடம் மீண்டும் கொழுந்து விட்டு எரியத் துவங்கியுள்ள தேச விடுதலைப் போராட்ட உணர்வைத் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கும் துணிவை, இன்று ஆரம்பப் பள்ளிக்கூடச் சிறுவர்களிடம் கூட காண முடிகிறது. ''படிப்பு, எங்கள் வாழ்க்கையில் இப்பொழுது முக்கியமானதல்ல'' என்கிறாள் கியான் காலத் அல் சாய்ஃபி என்ற பள்ளிச் சிறுமி. அவர்கள், ''இண்டிஃபதா'' போராட்டத்தில் கலந்து கொண்டு, இஸ்ரேலிய இராணுவத்தைக் கற்களால் தாக்குகிறார்கள். பள்ளிக் கூடம் முடிந்தபின் மாலை நேரத்தில், ''தியாகிகளே, நீங்கள் உங்கள் கல்லறைகளில் அமைதியாகத் துயிலுங்கள்; போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த நாங்கள் இருக்கிறோம்; பாலஸ்தீனத்திற்காக, தியாகிகளுக்காக எங்கள் ஆன்மாவையும் உயிரையும் தியாகம் செய்வோம்'' என முழங்கிக் கொண்டு, ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்துகிறார்கள்.




* * *

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேலுக்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானபொழுது, அமெரிக்க ஏகாதிபத்தியம் மட்டுமின்றி, குட்டி முதலாளித்துவ அமைப்புகளும், ''இதோ, பாலஸ்தீன பிரச்சினை தீர்ந்துவிட்டது, இன்னும் ஐந்தாறு ஆண்டுகளில் தனி பாலஸ்தீன நாடும், அரசும் உதயமாகிவிடும்'' என்று பசப்பினார்கள். அப்படியென்றால், பாலஸ்தீன மக்கள் இந்தப் போராட்டத்தை ''இரண்டாவது இண்டிஃபதா'' என அழைப்பதற்கு, என்ன காரணம்?

''உலகெங்கிலுமுள்ள யூதர்களும், முசுலீம்களும் புனிதமாகக் கருதும் ஜெருசலேம் நகரைக் கட்டுப்படுத்துவது இஸ்ரேலா? அல்லது பாலஸ்தீன சுயாட்சி அதிகாரமா? என்ற பிரச்சினை இதுநாள்வரை தீர்க்கப்படாமலே இருந்து வருகிறது. இதனைத் தீர்க்க, செப்டம்பர் மாதம் அமெரிக்க அதிபர் கிளிண்டன் தலைமையில், இஸ்ரேல் அதிபர் ஈகுத் முபாராக்குக்கும், பாலஸ்தீன சுயாட்சிப் பகுதி அதிபர் யாசர் அராபத்துக்கும் இடையே கேம்ப் டேவிட் என்ற இடத்தில் நடந்த பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்தது. இந்த நிலையில், இஸ்ரேலிய எதிர்க்கட்சியான லிகுத் கட்சியின் தலைவர் ஏரியல் ஷரோன் செப்டம்பர் 28 அன்று, கிழக்கு ஜெருசலத்தில் அமைந்துள்ள, முசுலீம்களால் ஹரம் அல் ஷரீப் என்றும் யூதர்களால் கோயில் குன்று (Temple Mount) என்றும் அழைக்கப்படும் பகுதிக்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின் பாதுகாப்போடு வந்து சென்றார். இதனால் ஆத்திரமடைந்த பாலஸ்தீனர்கள் உடனடியாகவே ஆர்ப்பாட்டத்தில் இறங்கி, கல்வீச்சுத் தாக்குதல் தொடுத்தனர். மறுநாள், வெள்ளிக்கிழமையும் இந்த ஆர்ப்பாட்டம் தொடரவே, இஸ்ரேலிய இராணுவம் அதைத் துப்பாக்கிச் சூடு நடத்தி ஒடுக்கத் தொடங்கியது. இப்படியாக பாலஸ்தீனர்களின் போராட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது'' எனக் காரணங்கள் அடுக்கப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

ஜெருசலேம் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது என்பதும், ஏரியல் ஷரோன் 1980-களில் இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்தபொழுது, லெபனான் நாட்டில் தஞ்சமடைந்திருந்த பாலஸ்தீன அகதிகளில் ஆயிரக்கணக்கானோரைக் கொன்று குவித்தவன் என்பதும், பாலஸ்தீன மக்களால் வெறுக்கப்படும் இந்த யூத இனவெறியன் முசுலீம்கள் புனிதமாகக் கருதும் பகுதிக்கு திடீர் விஜயம் நடத்தியது பாலஸ்தீனர்களை ஆத்திரமூட்டியது என்பதெல்லாம் உண்மைதான். ஆனால், இவைதான் பாலஸ்தீன மக்கள் இரண்டாவது இண்டிஃபதாவைத் தொடங்குவதற்குக் காரணம் எனக் கூறுவது காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதைதான்.

பாலஸ்தீனம் மீண்டும் சுதந்திரம் உள்ள நாடாக, சுயாதிபத்தியம் கொண்ட அரசாக எழுந்து நிற்க வேண்டும் என்பதுதான் பாலஸ்தீன மக்களின் இலட்சியம். ஆனால், பாலஸ்தீன அமைதி ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்ட சுயாட்சியைக் கூடத் தர மறுத்து இஸ்ரேல் செய்து வரும் அடாவடித்தனங்களும், குறிப்பாக, ஹெப்ரான், ஜெரிகோ நகரங்களை சுயாட்சி ஒப்பந்தப்படி பாலஸ்தீனர்கள் கோரியபொழுது, யூத இன வெறியர்கள் நடத்திய படுகொலைகளும், யாசர் அராபத்தால் தலைமை தாங்கப்படும் பாலஸ்தீன சுயாட்சி அதிகாரத்தின் சமரசமும், ஊழலும், பாலஸ்தீன மக்களிடம் அதிருப்தியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருந்தன. கடந்த ஆறேழு ஆண்டுகளாக நீறுபூத்த நெருப்பாக இருந்த இந்த அதிருப்தியை, ஆத்திரத்தை, ஜெருசலேம் பிரச்சினையும், யூத இன வெறியன் ஏரியல் ஷரோனின் ஆத்திரமூட்டும் நடவடிக்கையும் விசிறி விட்டன என்பதே உண்மை. அதனால்தான், யாசர் அராபத், இஸ்ரேலியப் பிரதமருடன் அக்டோபர் இறுதியில் எகிப்தில் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, ''போராட்டத்தைக் கைவிடுமாறு'' அறிவித்ததை, பாலஸ்தீன மக்கள் காது கொடுத்துக் கேட்கக் கூடத் தயாராக இல்லை. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து பாலஸ்தீன மக்கள் நடத்தும் இந்த ''இரண்டாவது இண்டிஃபதா'' போராட்டம், பாலஸ்தீன அமைதி ஒப்பந்தத்தின் துரோகத்தனத்தை, அம்மக்களுக்கும், உலகுக்கும் பளிச்சென்று அம்பலப்படுத்திக் காட்டவிட்டது என்றே கூறலாம்.

பாலஸ்தீன சுயாட்சி அதிகார அமைப்பில் அமைச்சராக இருக்கும் சாயேப் ஏராகத், தனது மகன் முகம்மது முதற்கொண்டு தன்னைப் பார்க்கும் பாலஸ்தீனர்கள் அனைவரும், ''நீங்கள் எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் அமைதி, இதுதானா?'' எனக் கேட்பதாகக் கூறுகிறார். மேலும், அவரே, ''நாங்கள் எங்களைத் தற்காத்துக் கொள்ள முடியாது; எங்களிடம் தரைப்படையோ, கப்பற்படையோ, விமானப்படையோ கிடையாது. இஸ்ரேலுடன் நாங்கள் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, நாங்கள் இராணுவப் படைகளை வைத்துக் கொள்ள முடியாது'' எனப் புலம்புகிறார்.

சிறுவன் முகம்மது அல்துரா இசுரேலிய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படும் கொடூரம்.



யாசர் அராபத் தலைமையில் இயங்கும் பாலஸ்தீன சுயாட்சி அதிகார அமைப்பிடம் தனது கட்டுப்பாட்டின் கீழ் காசா முனையிலும், மேற்குக் கரையிலும் வாழும் பாலஸ்தீன மக்களுக்குக் குடிநீர் வழங்கும் உரிமைகூட கிடையாது; இந்த இலட்சணத்தில் இஸ்ரேலுடன் சமரசம் செய்துக் கொண்டவர்கள் சொந்த இராணுவத்துக்காக ஏங்குவது, எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுவது போன்றதுதான்.

பாலஸ்தீன சுயாட்சிப் பகுதிகள் என அறியப்படும் காசா முனையையும், மேற்குக் கரையினையும் 1967-இல் இஸ்ரேல் நடத்திய ஆக்கிரமிப்பு போரின் பொழுது பாலஸ்தீன மக்களிடமிருந்து இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது. தான் கைப்பற்றிக் கொண்ட பகுதிகளை, பாலஸ்தீன மக்களுக்குத் தானமாகக் கொடுப்பது போல, மாய்மாலம் செய்கிறது இஸ்ரேல். 1948, 1956, 1967 ஆண்டுகளில் பாலஸ்தீனப் பகுதிகளின் மேல் இஸ்ரேல் நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களினால் கிட்டதட்ட 50 இலட்சம் பாலஸ்தீன மக்கள் அண்டை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் மீண்டும் தங்களின் சொந்த பூமிக்குத் திரும்புவதை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது. மேற்குக் கரையிலும், காசா முனையிலும் நிறுத்தப்பட்டுள்ள இஸ்ரேல் இராணுவத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள மறுத்து, சுயாட்சி ஒப்பந்தத்தைச் செல்லாக் காசாக்கிவிட்டது. இப்பகுதிகளில் இராணுவப் பாதுகாப்போடு புதுப்புது யூதக் குடியிருப்புகளை உருவாக்கி, பாலஸ்தீனர்களின் பூமியை மேலும் மேலும் விழுங்கி வருகிறது.

காசாமுனை மத்திய தரைக் கடலை ஒட்டி மேற்குப் பகுதியிலும், மேற்குக் கரை கிழக்கே ஜோர்டான் எல்லையையொட்டியும் அமைந்துள்ளன. பாலஸ்தீன மக்கள் காசா முனையில் இருந்து மேற்குக் கரைக்கோ, மேற்குக் கரையில் இருந்து காசாமுனைக்கோ தரைவழியாகச் செல்ல வேண்டுமென்றால், இஸ்ரேல் இராணுவத்தின் அனுமதியைப் பெற்றாக வேண்டும். இதுபோல, காசா முனையிலும், மேற்குக் கரையிலும் அமைக்கப்பட்டுள்ள யூதக் குடியிருப்புப் பகுதிகளில் (கிட்டதட்ட நான்கு இலட்சம் யூதர்கள் இப்பகுதி



**இசுரேலிய இராணுவத்தை வெறும் கற்களைக் கொண்டு எதிர்க்கும் பாலஸ்தீனர்களின் சுதந்திர ஆவேசம்.**

களில் வசிக்கின்றனர்) பாலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத்தின் அனுமதியின்றி நடமாட முடியாது. பாலஸ்தீன விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை விற்பது தொடங்கி வான்வழிப் போக்குவரத்து நடத்துவது வரை - அனைத்து விதமான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இஸ்ரேலின் அனுமதியைப் பெற்றாக வேண்டும். மேலும், தற்பொழுது இஸ்ரேலிய இராணுவத்தால் பாலஸ்தீன மக்கள் சுட்டுக் கொல்லப்படுவதும், இந்த 'சுயாட்சி'ப் பகுதிகளில்தான். இவற்றையெல்லாம் அறிந்து கொள்ளும் பொழுதுதான், சுயாட்சியின் மோசடித்தனத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

இப்படி, 'சுயாட்சி'ப் பகுதிகளில் பாலஸ்தீன மக்கள் இஸ்ரேலின் பிராந்திய மேலாதிக்கத்தின் கீழ் அடிமைகளாக நடத்தப்படும் பொழுது, சுயாட்சி அதிகார அமைப்பின் தலைவர் யாசர் அராபத், ''இதோ, பாலஸ்தீனத்தைத் தனி நாடாக அறிவிக்கப் போகிறேன்'' என் வாய்ச்சவடால் அடித்துக் கொண்டு திரிவது எத்தகைய கேலிக்கூத்து! இத்துணைக்குப் பின்னும், ஐ.நா. மன்றமும், பிற உலக நாடுகளும் அமெரிக்காவிற்குப் பயந்து கொண்டு இஸ்ரேலை நேரடியாகக் கூடக் கண்டிக்காமல், ''இந்த ஒப்பந்தத்தை விட்டால், பாலஸ்தீன மக்களுக்கு வேறு கதியே கிடையாது'' எனப் போதிப்பது, எத்தகைய ஏமாற்று வித்தை!

ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்படும் இதுபோன்ற துரோக ஒப்பந்தங்களினால் எந்தவொரு தேசிய இனமும் தனது சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் அடைந்துவிட முடியாது என்பதும்; இந்த ஒப்பந்தங்களால் நீண்ட காலத்திற்கு மக்களை ஏமாற்ற முடியாது என்பதும்தான் பாலஸ்தீன மக்கள் நடத்திவரும் இந்த இரண்டாவது இண்டிஃபதா போராட்டம் உலகிற்கு உணர்த்தும் பாடம்!

● இராசு

### ரப்பர்...... தேயிலை...... மக்காச்சோளம் — இது பணப்பயிர் பட்டியல் அல்ல. தாராள இறக்குமதிக்குப் பலியான விவசாயிகளின் பட்டியல்.

# அடுத்த பலிகடா யார்?

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்து, அந்நிய நாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து கொள்வதற்கு நமது நாட்டில் எவ்விதச் சிறு கட்டுப்பாடும் இருக்கப் போவதில்லை. உங்கள் கையில் காசு இருந்தால், நீங்கள் முதல் தரமான அமெரிக்க கோதுமையில் ரொட்டி சுட்டு சாப்பிடலாம்; இந்திய காபிக்குப் பதிலாக, பிரேசில் காபியைப் பருகலாம்; கியூபாவில் தயாராகும் சுருட்டுகளை ஊதித் தள்ளலாம். அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்கள் தொடங்கி, ஆடம்பர அழகு சாதனப் பொருட்கள், சொகுசுக் கார்கள் வரை, எதை வேண்டுமானாலும் இறக்குமதி செய்து இந்தியாவில் விற்கலாம்.

நீலகிரி தேயிலை விவசாயிகள் போண்டியாகி நிற்பதைப் பார்க்கும் பொழுது, இந்தத் தாராள இறக்குமதி கொள்கை அடுத்து பலி கொள்ளப் போவது தஞ்சாவூர் நெல் விவசாயிகளையா அல்லது அரியானா, பஞ்சாப் மாநிலங்களைச்சேர்ந்த கோதுமை விவசாயிகளையா என்ற அச்சம் எழுந்தே தீரும். வர்த்தகத் துறை அமைச்சர் மாறனோ, ''இறக்குமதி செய்யப்படும் விவசாய விளை பொருட்களுக்கு 100 சதவீதமும், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கு 150 சதவீதமும், சமையல் எண்ணெய்க்கு 300 சதவீதமும் சுங்கத் தீர்வை விதித்து நமது நாட்டின் விவசாயத்தைக் காப்பாற்ற நமக்கு உரிமை இருக்கிறது'' என அறிக்கை விட்டு, இந்த அச்சம் தேவையற்றதுஎன்று சாடியிருக்கிறார்.

ஆனால், வெளிநாடுகளில் இருந்து சமையல் எண்ணெயை இறக்குமதி செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டபின், கடந்த நான்கு ஆண்டுகளில் சமையல் எண்ணெய் வித்து விவசாயிகளுக்கு நேர்ந்திருக்கும் கதியைப் பார்த்தாலே போதும், இந்திய அரசின் கைகளில் இருக்கும் உரிமை, வெறும் அட்டைக் கத்தி என்பதை நாம் புரிந்து கொண்டுவிட முடியும்.

1980-களின் இறுதி வரை, இந்தியா, சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடாக இருக்கவில்லை. இதில் தன்னிறைவு அடைவதற்காக, மைய அரசு ''எண்ணெய் வித்து உற்பத்தியில் தொழில்நுட்பப் புரட்சி'' எனும் செயல் திட்டத்தை வகுத்தது. இதன் பயனாக 1985-86-இல் 1 கோடியே 8 இலட்சம் டன்னாக இருந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, 1997-98-இல் 2 கோடியே 13 இலட்சத்தை எட்டியது.

சோயாபீன்ஸின் உற்பத்தி, மற்ற எண்ணெய் வித்துக்களைவிட, 6.5 மடங்கு - 10 இலட்சம் டன்னில் இருந்து 65 இலட்சம் டன்னாக அதிகரித்தது. எண்ணெய் ஆலைகளின் பிழியும் திறனும் 1 கோடி டன்னில் இருந்து 3 கோடி டன்னாக உயர்ந்தது. இதன் விளைவாக, 1986-87-இல் 15 இலட்சம் டன் சமையல் எண்ணெயை உள்நாட்டுத் தேவைக்காக இறக்குமதி செய்த இந்தியா, 1993-94-இல் இரண்டு இலட்சம் டன் எண்ணெய்தான் இறக்குமதி செய்தது. இந்தத் தன்னிறைவுக்கும், இறக்குமதி குறைந்ததால் கிடைத்த அந்நியச் செலாவணி சேமிப்பிற்கும் அடிப்படையாக அமைந்தது உள்நாட்டு எண்ணெய் வித்து விவசாயம்தான் என்றால் அது மிகையாகாது.

சமையல் எண்ணெய் உற்பத்தியில் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சாதகமான நிலைமை 1994-க்குப் பிறகு தலைகீழாக மாறத் தொடங்கிவிட்டது. சர்வதேச சந்தையில் சமையல் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்ததையடுத்து, உலக வங்கி இட்ட கட்டளைக்குக் கீழ்படிந்து மைய அரசு எண்ணெய் வித்து விவசாயத்திற்காக நடைமுறைப்படுத்தி வந்த செயல் திட்டத்தைக் கைகழுவியதோடு, சமையல் எண்ணெய் இறக்குமதிக்குத் தாராள அனுமதி அளித்தது. இதனால் 1994-இல் இரண்டு இலட்சம் டன்னாக இருந்த சமையல் எண்ணெய் இறக்குமதி அடுத்த மூன்றாண்டுகளில் இருபது இலட்சம் டன்னை எட்டிப் பிடித்தது.

1998-ஆம் ஆண்டு குஜராத், இராசஸ்தான் மாநிலங்களில் ஏற்பட்ட வறட்சியினால் நிலக்கடலை விவசாயம் பாதிப்படைந்ததையும், அதே ஆண்டு கடுகு எண்ணெய் கலப்படத்தால் வட மாநிலங்களில் நடந்த நீர்க் கோர்வை நோய்ச் சாவுகளையும் ஏகாதிபத்தியங்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. நீர்க் கோர்வை நோய்ச் சாவுகளைக் காட்டி கடுகு எண்ணெய் உற்பத்தியையும் விற்பனையையும் தடை செய்த மைய அரசு, மறுபுறம் உள்நாட்டில் சமையல் எண்ணெய் தேவையை நிறைவு செய்வது என்ற பெயரில், சமையல் எண்ணெய் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டு வந்த சுங்க வரியை வெறும் 16.5 சதவீதமாகக் குறைத்தது. இந்தத் தாராள சலுகையின் காரணமாக, 1998-99-ஆம் ஆண்டில் 44 இலட்சம் டன் சமையல் எண்ணெய் இறக்குமதியானது. சமையல் எண்ணெய் உற்பத்தியில் இந்தியா அடைந்திருந்த தன்னிறைவு நான்கே

www.padippakam.com



**நீர்க்கோர்வை நோயால் பாதிக்கப்பட்டு, உயிருக்குப் போராடும் சிறுவன்: எண்ணெய்க் கலப்படத்தைக் காட்டி, எண்ணெய் இறக்குமதிக்கு அனுமதி.**

ஆண்டுகளில் தகர்க்கப்பட்டு, வெளிநாடு களை அண்டியிருக்க வேண்டிய நிலைமை செயற்கையாகத் திணிக்கப்பட்டு விட்டது.

தேயிலைத் தூள் இறக்குமதியால் டாடா, லிப்டன் போன்ற முதலாளிகள் எப்படி பாதிப்படையவில்லையோ, அது போலவே சமையல் எண்ணெய் இறக்குமதியால் எண்ணெய் ஆலை அதிபர்களும் பாதிக்கப் படவில்லை. அவர்கள் இந்தச் சலுகை களைப் பயன்படுத்திக் கொண்டு வெளிநாடு களில் இருந்து எண்ணெய் வித்துக்க ளையோ, சுத்திகரிக்கப்படாத சமையல் எண்ணெயையோ நேரடியாக இறக்குமதி செய்து, தங்கள் பணப் பெட்டியை நிரப்பிக் கொண்டனர். நிலக்கடலை, சோயா பீன்ஸ், ஆமணக்கு, சூரியகாந்தி போன்ற ஒன்பது வகையான சமையல் எண்ணெய் வித்துக் களைப் பயிரிட்டு வந்த விவசாயிகள்தான் இந்தத் தாராள சலுகைக்குப் பலியாகினர்.

ஒரு குவிண்டால் சூரியகாந்திக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச விலை ரூ. 1,555/- ஆனால், சமையல் எண்ணெய் இறக்குமதியால் சூரியகாந்தி வித்துகளின் விலை ரூ. 975/- ஆகச் சரிந்தது. குறைந்த பட்சம் ரூ. 845/-க்கு விற்க வேண்டிய ஒரு குவிண்டால் சோயா பீன்ஸை விவசாயிகள் ரூ. 710/-க்கு தான் விற்க முடிந்தது. விளைச் சலுக்குக் குறைந்தபட்ச விலைகூட கிடைக்க வில்லையென்றால், இந்த நட்டத்தை எப்படி தாங்க முடியும்?

இந்த விலை வீழ்ச்சியால், குஜராத்தில் 50 சதவீத எண்ணெய் வித்து விவசாயி களும், இராசஸ்தானில் 16 சதவீத எண்ணெய் வித்து விவசாயிகளும், ஒன்று நிலத்தைத் தரிசாகப் போட வேண்டும்; இல்லையென்றால், வேறு விவசாயத்திற்கு மாற வேண்டும் என்ற கட்டாயம் உருவா னது. மத்தியப் பிரதேச மாநிலத்தில் சோயா பீன்ஸ் பயிரிடப்பட்டு வரும் மொத்த நிலப் பரப்பில், 5,50,000 ஹெக்டேர் நிலப்ப ரப்பில் சோயா பீன்ஸ் பயிரிடுவதை விவசா யிகள் கைவிட்டனர்.

சமையல் எண்ணெய் உற்பத்தியை அதி கரிப்பதற்கான திட்டத்தை மைய அரசு நடை முறைப்படுத்திய பொழுது, சோயா பீன்ஸ் விவசாயம்தான் அந்தப் பத்தாண்டுக ளுக்குள் 6.5 மடங்கு அதிகரித்தது. இப்பொ ழுது, மற்ற எண்ணெய் வித்துக்களைக் காட்டிலும் சோயா பீன்ஸ் விவசாயம்தான் வீழ்ச்சியிலும் முன்னணியில் உள்ளது. இந்தி யாவில் சோயா பீன்ஸ் பயிரிடுவது இந்த ஆண்டுக்குள் மேலும் 12 சதவீதம் குறைந்து விடும் என எதிர்பார்க்கிறது, அமெரிக்கா.

அமெரிக்கா இப்படி நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருப்பதற்கு காரண முண்டு. சர்வதேச சந்தையில் சோயா பீன்ஸின் விலை 22 சதவீதம் வீழ்ச்சிய டைந்த பின்னும், அமெரிக்காவில் சோயா பீன்ஸ் பயிரிடும் நிலத்தின் பரப்பும், சோயா பீன்ஸ் உற்பத்தியும் அதிகரித்த வண்ணம்தான் உள்ளன. அமெரிக்க அரசே மானிய உதவி அளித்து சோயா பீன்ஸ் உற்பத்தியை ஊக்குவித்து வருவதை, "இது, யாருடைய பயிரோ அழியப் போவதன் அறிகுறி" என்று விமர்சனம் செய்தார் அமெ ரிக்காவைச் சேர்ந்த டபிள்யூ.ஈ.எஃப்.ஏ. என்ற நிறுவனத்தின் அதிகாரியான ஸ்டூவர்ட் ராம்சே. "யாருடைய பயிரோ" என அவர் குறிப்பிட்டது, இந்தியாவின் பயிர் என்பது இப்பொழுது தெளிவாகி விட்டது.

பல நூற்றாண்டுகளாக சோயா பீன்ஸ் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த சீனாவை, கடந்த பதினைந்து ஆண்டுகளில் சோயா பீன்ஸ் இறக்குமதி நாடாக மாற்றியமைத் ததைப் போன்று, இந்தியாவையும் மாற்றி விட முயன்று வருகிறது, அமெரிக்கா. இதற் காக தலைநகர் தில்லியில் அமெரிக்க சோயா பீன்ஸ் கழகத்தின் கிளை சமீபத்தில் திறக்கப் பட்டுள்ளது. அமெரிக்கா இந்தியாவைக் குறி வைத்ததன் விளைவாக, 1996-97-இல் வெறும் 49,000 டன்னாக இருந்த சோயா பீன்ஸ் எண்ணெய் இறக்குமதி, 1998-99-இல் 8.7 இலட்சம் டன்னாக உயர்ந் தது. சோயா விற்பனையை மேலும் அதிக ரிப்பதற்காக, மாட்டுப் பாலுக்கு மாற்றாக சோயா பாலை அறிமுகப்படுத்தவும், பள்ளிக்கூடச் சிறுவர்களுக்காகவும், கரு வுற்ற தாய்மார்கள், கைக் குழந்தைகளுக்கா கவும் அரசு நடத்தி வரும் ஊட்டச் சத்துத் திட்டங்களில் சோயா உணவு வகைகளைப் புகுத்தவும் அமெரிக்கா முயன்று வருகிறது.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி யாகும் சோயா எண்ணெய், சோயா வித்துக் களால், ஐந்து இலட்சம் இந்திய விவசாயி களின் வாழ்க்கை கேள்விக்குறியாகி விட்டது. ஆனாலும், மைய அரசு தனக்கி ருக்கும் உரிமையைப் பயன்படுத்தி, அமெ ரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் சோயாவின் மீது 300 சதவீத சுங்கவரி விதித்து, இந்திய விவசாயிகளைக் காப்பாற்ற முன்வரவில்லை. நாளை, இதே போன்ற அவலம், நெல், கோதுமை போன்ற உணவுப் பொருட்களைப் பயிரிடும் விவசா யிகளுக்கு நேராது என்பதற்கு எந்த உத்திர வாதமும் இல்லை.

இந்தத் தாராள இறக்குமதியால் போண்டியாகி நிற்பவர்களைப் பார்த்து, டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற நாளிதழ், "நீங்கள் எல்லாம் அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களை இந்தியாவில் விற்கும் ஏஜெண்டாகி விடலாம்" என்று எழுதுகிறது. "அந்நிய னுக்கு புரோக்கராகி விடுங்கள்" என்று ஒரு 'தேசிய' பத்திரிகை எழுதுகிறதே என்று ஆச்சரியப்படத் தேவையில்லை. இன்று, இந்தியாவில் பெரு முதலாளிகளாக இருக்கும் டாடா, பிர்லா போன்றவர்கள் எல்லாம், நேற்று பிரிட்டிஷ் முதலாளிக ளிடம் தரகர்களாக இருந்தவர்கள்தான்.

ஆனால், நமது முன்னோர்களோ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது சாயப் பட்டறைகளுக்காக அவுரி பயிரிடச் சொன்னபோது, அதை எதிர்த்து நின்ற வர்கள். அப்படிபட்ட பாரம்பரியத்தில் வந்த இந்திய விவசாயிகள், அமெரிக்க ஏகாதிபத் தியம் நமது விவசாயத்தை விழுங்கிவிடத் துடிப்பதை இனியும் சகித்துக் கொண்டு இருக்கலாமா?

● ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com



## சட்டக்கல்லூரி மாணவர் போராட்டம்: தேவை விரிந்த பார்வை

அண்மையில் நவம்பர் 10-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை சென்னை சட்டக் கல்லூரி விடுதி மாணவர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். விடுதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையை உலக வங்கி உத்தரவுப்படி தமிழக அரசு ரத்து செய்துள்ளதை எதிர்த்து இப்போராட்டம் நடந்துள்ளது. ஏற்கனவே திருச்சி, தஞ்சை, நாகை மாவட்டங்களிலும் சென்னையிலும் கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியாகவே சட்டக் கல்லூரி மாணவர்களும் இப்போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

மொட்டையடித்து, வாயில் கறுப்புத் துணி கட்டி, அங்கப் பிரதட்சணம் செய்து, திருவோடு ஏந்தி, உண்ணாவிரதமிருந்து தம்மைத் தாமே இழிவுபடுத்தி வருத்திக் கொண்ட இம்மாணவர்களின் போராட்டத்தை முதல் ஐந்தாறு நாட்கள் வரை அரசு ஏறெடுத்தும் பார்க்கவில்லை. உண்ணாவிரதமிருந்த 12 மாணவர்கள் மயங்கி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பிறகுதான், அரசு தரப்பிலிருந்து ஆதிதிராவிட நலத்துறை இயக்குனர் மற்றும் அதிகாரிகள் வந்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். கோரிக்கைகளைப் பரிசீலித்து ஆவன செய்வதாக அவர்கள் வாக்குறுதி அளித்த பிறகு, போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

விடுதி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை ரத்து செய்யப்பட்டதை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எதிரான சதி என்று தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளின் தலைவர்களில் சிலர் சித்தரித்தனர். போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகள், அரசியல் ஆதாயம் கருதி போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறின. அதேசமயம், கல்விக் கட்டண உயர்வும், உதவித் தொகை நிறுத்தமும் உலக வங்கி உத்தரவுப்படி கல்வியைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதிதான் என்பதைத் திட்டமிட்டே மூடி மறைத்தன. உலக வங்கி உத்தரவுப்படி, புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் நாட்டின் அனைத்து துறைகளும் மட்டுமின்றி கல்வியும் தனியார்மயமாக்கப்படுவதையும், ரேசன் கடை மானியங்கள் மட்டுமின்றி கல்விக்கான மானியங்களும் வெட்டப்படுவதையும் உணர்த்தி, தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிரான போராட்டமாக வளர்த்தெடுக்கவும் அவை முன்வரவில்லை. அதனாலேயே பிழைப்புவாத ஓட்டுக் கட்சிகள் நடத்தி வரும் மொட்டையடிப்பது, பிச்சை எடுப்பது, அரை நிர்வாண ஆர்ப்பாட்டம் முதலான தம்மையே இழிவுபடுத்திக் கொள்ளும் போராட்டங்களின் வழியிலேயே சட்டக் கல்லூரி மாணவர் போராட்டமும் நடந்துள்ளது.

ஏற்கனவே திருச்சி, தஞ்சை, நாகை மாவட்டங்களில் 26.9.2000 அன்று கல்லூரி மாணவர்கள் இதே கோரிக்கைக்காக திடீர் சாலை மறியல் போராட்டம் நடத்தியுள்ளதை அறிந்திருந்த போதிலும், அதன் தொடர்ச்சியாக அரசை நிர்ப்பந்திக்கும் வகையில் அடுத்த கட்டத்துக்கு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல சட்டக் கல்லூரி மாணவர்கள் துணியவில்லை. உழைக்கும் மக்களிடம் தமது போராட்டத்தின் நியாயத்தை விளக்கி ஆதரவு திரட்டவும் முயற்சிக்கவில்லை. பிற கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து மாநிலம் தழுவிய அளவில் போராட்டத்தைக் கட்டியமைக்க வாய்ப்புகள் இருந்த போதும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுமில்லை. இதனாலே, வழக்கமாக ஓட்டுக் கட்சிகள் நடத்தும் சம்பிரதாயமான போராட்டங்களைப் போலவே, குறுகிய துறை சார்ந்ததாக நடந்த இப்போராட்டத்தையும் ஆட்சியாளர்கள் வழக்கம் போலவே வாக்குறுதி அளித்து அலட்சியப்படுத்தியுள்ளனர்.

இந்தியாவைப் போலவே கல்விக் கட்டண உயர்வு, மானிய ரத்து முதலானவற்றுக்கு எதிராக அமெரிக்காவின் தெற்கேயுள்ள நாடான மெக்சிகோவில் மாணவர்கள் நடத்திய போராட்டம், கல்விபெறும் அடிப்படை உரிமைக்கான போராட்டமாக, நாட்டை மறுகாலனியாக்கி வரும் துரோக ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டமாக, உழைக்கும் மக்களின் பேராதரவுடன் தனியார்மய - தாராளமயத்துக்கு எதிரான போராட்டமாக விரிவடைந்தது. ஒன்பது மாத காலம் நடந்த இத்தொடர் போராட்டம் ஆட்சியாளர்களைப் பணிய வைத்து உரிமைகளை மீட்ட பிறகே முடிவுக்கு வந்தது என்பது அண்மைக் கால வரலாறு.

தமிழக மாணவர்களும் விரிந்த பார்வையுடன் மெக்சிகோ மாணவர்களின் வழியில் போராட்டத்தைத் தொடர வேண்டும். தங்களது துறை சார்ந்த கோரிக்கைக்கான போராட்டமாக வரம்பிட்டுக் கொள்வதும், பிழைப்புவாத ஓட்டுக் கட்சிகளையும் அமைப்புகளையும் வழிகாட்டிகளாக நம்புவதும், தம்மையே கேலிப் பொருளாக்கி இழிவுபடுத்திக் கொள்ளும் போராட்ட முறைகளை மேற்கொள்வதும் இதற்கு நேரெதிரான சீர்குலைவு - துரோகப் பாதையே என்பதை உணர வேண்டும்.



மொட்டையடித்துக் கொண்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தும் சட்டக் கல்லூரி மாணவர்கள்: உரிமைக்கான போராட்டத்தைக் கேலிக்கூத்தாக்குவது நியாயமா?

## 'மார்க்சிஸ்டு' மாணவர் சங்கத்தின் ரவுடித்தனம்

கேரளாவில் காங்கிரசு மாணவர் சங்கத் தலைவர் மீது ஆளும் 'மார்க்சிஸ்டு' கட்சியின் மாணவர் அமைப்பான எஸ்.எப்.ஐ.யின் குண்டர்கள் நடத்திய தாக்குதலையும் வக்கிரமான சித்திரவதையையும் கண்டு அம்மாநிலமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. எஸ்.எப்.ஐ. குண்டர்களுக்கு எதிராக மாநிலம் முழுவதும் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து கண்டனப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரம் அருகிலுள்ள நிலமேல் என்.எஸ்.எஸ். கல்லூரி மாணவரான நிஷாத், காங்கிரசு மாணவர் அமைப்பான கே.எஸ்.யு.வின் தலைவர் ஆவார். இவர் தனது கல்லூரி நிகழ்ச்சிக்காக இதர கல்லூரி மாணவர் தலைவர்களை அழைப்பதற்காக கடந்த நவம்பர் 10-ஆம் தேதியன்று திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்துக்கு வந்தார். இப்பல்கலைக்கழகத்தில் பெரும்பாலோர் ஆளும் 'மார்க்சிஸ்டு' கட்சியின் மாணவர் அமைப்பான எஸ்.எப்.ஐ.க்கு ஆதரவாளர்கள். அதனாலே இங்கு ஆளுங்கட்சியின் செல்லக் குழந்தையாக எஸ்.எப்.ஐ. கொட்டமடித்து வந்தது. மாற்று மாணவர் சங்கங்கள் ஜனநாயக ரீதியாகச் செயல்படக் கூட முடியாமல், எஸ்.எப்.ஐ. குண்டர்களால் தாக்கப்பட்டு முடமாக்கப்பட்டன.

இந்நிலையில் பல்கலைக் கழகத்துக்கு வந்த நிஷாத்தை "எங்கள் அனுமதி பெறாமல் நீ ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டு எஸ்.எப்.ஐ. குண்டர்கள் சுற்றி வளைத்து தாக்கினர். அவரது கைகளைக் கட்டி குப்புறப்படுக்க வைத்து சட்டையைக் கிழித்




படிப்பகம்

www.padippakam.com



முதுகில் கத்தியால் எஸ்.எப்.ஐ. என்று ஆங்கிலத்தில் ரத்தம் சொட்டச் சொட்டக் கீறினர். வலி தாங்காமல் நிஷாத் அலறிய போதிலும் எஸ்.எப்.ஐ. ரெளடிகள் அவரை விடவில்லை. மீண்டும் கண்மூடித்தனமாகத் தாக்கி முதுகில் மூன்று இடங்களில் இவ்வாறு எஸ்.எப்.ஐ. என்று கத்தியால் கீறியுள்ளனர். துவண்டு விழுந்த நிஷாத் தண்ணீர் கேட்டபோது, அவரது வாயில் சிறுநீரை ஊற்றி தொடர்ந்து வக்கிரமாக சித்திரவதை செய்துள்ளனர். இதனால் அவர் ட யக்கமடைந்ததும் அவரை ஒரு அறையில் வைத்து பூட்டி மீண்டும் இரவில் அவர் மீது தாக்குதலை நடத்தி கொடூரமாக சித்திரவதை செய்துள்ளனர்.

தொடர்ச்சியான தாக்குதலால் நிலை குலைந்த நிஷாத்தின் காதுகளிலிருந்து ரத்தம் வழியத் தொடங்கியதும் பீதியடைந்த எஸ்.எப்.ஐ. ரெளடிகள், அவரை மிரட்டி இதுபற்றி வெளியே யாரிடமும் சொல்லக் கூடாது என்று எச்சரித்து, ஒரு காரில் ஏற்றி அவரது சொந்த ஊரின் பேருந்து நிலையத்தில் இறக்கிவிட்டு தப்பிச் சென்றனர். வீட்டுக்குச் சென்ற நிஷாத், தனது பெற்றோரிடம் இக்கொடுமையைப் பற்றிக் கூறி கதறி அழுத பிறகு, அவர் திருவனந்தபுரம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு உடல் நிலை தேறி வருகிறார்.




முதுகில் ''எஸ்.எப்.ஐ.'' எனக் கத்தியால் கீறி, 'மார்க்சிஸ்டு' மாணவர் சங்க ரவுடிகள் நடத்திய வெறியாட்டம். உள்ளே: பாதிக்கப்பட்ட காங்கிரசு மாணவர் சங்கத் தலைவர் நிஷாத்.

இக்கொடுஞ்செயலை அறிந்து கேரள மாநிலமே கொதித்துப் போயுள்ளது. பல்வேறு கல்லூரி மாணவர்கள் எஸ்.எப்.ஐ.க்கு எதிராக கண்டனப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். எதிர்க்கட்சியான காங்கிரசு இக்கொடுரத்தைப் பற்றி சட்டமன்றத்தில் விவாதத்தைக் கிளப்பி ஆளும் 'மார்க்சிஸ்டு' குண்டர்களின் ரெளடித்தனத்தை சந்தி சிரிக்க வைத்துள்ளது. இவற்றால் அம்பலப்பட்டுப் போயுள்ள ஆளும் 'மார்க்சிஸ்டு' கட்சி, குரூர தாக்குதலில் ஈடுபட்ட 5 எஸ்.எப்.ஐ. குண்டர்களைக் கைது செய்து பரிசுத்த நாடகமாடுகிறது.

ஓட்டுக்காக குண்டர்களையும் சமூக விரோதிகளையும் பிழைப்புவாதிகளையும் சார்ந்திருக்கும் போலி கம்யூனிஸ்ட் 'மார்க்சிஸ்ட்' கட்சி, மாணவர் அமைப்பை மட்டும் ஜனநாயக உணர்வுள்ளவர்களைக் கொண்டு கட்டியமைக்கும் என்று நம்ப முடியுமா? ஏற்கனவே மே.வங்கத்தில் ஆட்சியாளர்களுக்கு எதிரான மாணவர் போராட்டங்களை எதிர்த்து அம்பலப்பட்டுப் போன எஸ்.எப்.ஐ. அங்கு செல்லாக் காசாகி விட்டது. கேரளாவிலோ அது வக்கிரம் பிடித்த மனநோயாளிகளின், ரெளடிகள் - கழிசடைகளின் புகலிடமாக மாறிவிட்டது. ஜனநாயக உணர்வும் புரட்சியின் மீது நம்பிக்கையும் கொண்டுள்ள இளைய தலைமுறையினர் இனியும் எஸ்.எப்.ஐ. மீது நம்பிக்கை கொள்ள முடியுமா?

## குடிகார போலீசு ரவுடிகளின் வன்முறை வெறியாட்டம்

போலீசு - சட்டபூர்வ கிரிமினல் கும்பல்; சீருடை தரித்த வெறி பிடித்த மிருகம்; மக்களை ஒடுக்குவதற்கென்றே அது பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ள பயங்கரவாதக் கூட்டம். இந்த உண்மைகளை கடந்த நவம்பர் 11-ஆம் நாளன்று விளாத்திகுளத்தில் சிறப்பு போலீசுப் படை நடத்திய வெறியாட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

விளாத்திகுளத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த கொலைகள் காரணமாக தமிழ்நாடு சிறப்புப் போலீசுப் படை முகாமிட்டுள்ளது. கடந்த நவம்பர் 11-ஆம் தேதியன்று தி.மு.க. பிரமுகரான திருமேனி பாண்டியன், பேருந்து நிலையம் எதிரேயுள்ள ஒரு தங்கும் விடுதி அருகே தனது வாகனத்தை நிறுத்திய போது, அங்கு போதையில் நின்று கொண்டிருந்த சிறப்பு போலீசுப் படையினர் அவரிடம் தகராறு செய்து தாக்கினர். இதைத் தடுக்க வந்த தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ரவீந்திரனுக்கும் சரமாரியாக தடியடி விழுந்தது. இதைக் கண்டு பொது மக்களில் சிலர் ஓடிவந்து தடுத்து போலீசாரிடம் வாக்குவாதம் செய்தனர். தம்மிடம் பொது மக்கள் எதிர்வாதம் செய்வதைக் கண்டு ஆத்திரமடைந்த போலீசார், சிறப்பு அதிரடிப்படை முகாமுக்கு அவசரமாக தகவல் அனுப்பினர்.

அடுத்த சில நிமிடங்களில் பேருந்து நிலையத்தை நோக்கி வாகனங்களில் படையெடுத்து வந்த சிறப்புப் படை போலீசார், பேருந்து நிலையத்தைச் சுற்றி வளைத்து, ஒவ்வொருவரும் மூன்று தடிகளை சேர்த்து மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர். தாங்கள் வந்த லாரியிலிருந்து விறகுக் கட்டைகளை எடுத்துக் கொண்டு கூச்சலிட்டபடியே குடிபோதையில் ஓடிவந்த போலீசார், பேருந்துக்காகக் காத்திருந்த மக்களை, பெண்கள் - குழந்தைகள் என்று கூடப் பாராமல் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர். சீருடையின்றி லுங்கி - பனியனுடன் விறகு கட்டைகளைக் கொண்டு தாக்கிய போலீசாரைக் கண்டு ஏதோ ரவுடிகளின் அட்டகாசம் என்று பதறியடித்துக் கொண்டு வெளியே ஓடிய மக்களை, பேருந்து நிலைய வாயிலில் நின்ற மற்றொரு போலீசு கும்பல் சுற்றி வளைத்து தாக்கி வெறியாட்டம் போட்டுள்ளது. இத்தாக்குதலை அறிந்து தடுக்க வந்த உள்ளூர் போலீசு அதிகாரிகளையும் விறகுக் கட்டையால் சரமாரியாகத் தாக்கியது. தெருவில் கண்ணில் பட்டவர்களை எல்லாம் அடித்து நொறுக்கிய போலீசு வெறியர்கள், பின்னர் உணவு விடுதிகளில் புகுந்து அங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கி, கடைகளையும் சூறையாடினர். பின்னர் சிறப்பு போலீசுப் படை உயரதிகாரிகள் வந்து கெஞ்சி, அமைதிப்படுத்திய பின்னரே போலீசு வெறியர்கள் தமது தாக்குதலை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

இத்தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் பேருந்துக்காகக் காத்திருந்த வெளியூர்க்காரர்கள் என்பதால், புகார் கொடுக்கக் கூட முன்வ


படிப்பகம்

www.padippakam.com



ராமல் பீதியில் ஊருக்குத் திரும்பியுள்ளனர். அடிபட்ட தி.மு.க. பிரமுகர்களும் தமது ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடக் கூடாது என்று இந்த கொடுஞ் செயலை மூடிமறைப்பதிலேயே குறியாக உள்ளனர். புகார் வராததால் சிறப்புப் படை போலீசு ரவுடிகள் மீது துறை சார்ந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு "எங்களை எவனும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது" என்று வெறிபிடித்த போலீசு மிருகங்கள் கொக்கரித்து திரிகின்றன.

## 'நாகரீக' கோமான்களின் போர் வெறியும் 'அநாகரீக' மக்களின் போராட்டமும்

ஏகாதிபத்திய வல்லரசுகளின் காலனியாதிக்கத்தாலும் மேலாதிக்கத்தாலும் வதைக்கப்பட்ட ஏழை நாட்டு மக்களின் வரலாறுகள் இரத்தக்கறை படிந்தவை. இந்தியாவின் தெற்கே இந்துமாக் கடலில் உள்ள டிகோ கார்சியா தீவுக் கூட்டத்தில் வாழ்ந்த பழங்குடி மக்கள், கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களின் இராணுவ மேலாதிக்க வெறியால் தமது வாழ்வுரிமையை இழந்து தவித்த கதை மிக்க கொடூரமானது; துயரமானது.

இந்துமாக் கடலில் உள்ள சாகோஸ் தீவுக் கூட்டத்தில் டிகோ கார்சியா தீவு பெரியது. இதைச் சுற்றி பெரோஸ்பனாஸ், சாலமன் முதலான சிறிய தீவுகள் உள்ளன. இத்தீவுக் கூட்டம் முன்பு பிரிட்டனின் காலனியாக இருந்த மொரீசியஸ் தீவின் ஒரு பகுதியாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஆனால் 1965-இல் மொரீஷியஸ் பெயரளவிலான சுதந்திரம் பெற்ற பிறகு, இத்தீவுகளை அந்நாட்டிடம் ஒப்படைக்காமல், பிரிட்டன் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு இந்துமாக் கடல் பிராந்தியத்தில் தனது காலனியாக்கத்தைத் தொடர்ந்தது. பின்னர், 70-களின் தொடக்கத்தில் இத்தீவுக் கூட்டம் அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்க நோக்கங்களுக்காக குத்தகைக்கு விடப்பட்டு, இங்கு வாழ்ந்து வந்த பழங்குடியின மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு மொரீஷியஸ், செசல்ஸ் தீவுகளில் அகதிகளாக்கப்பட்டனர். பாரம்பரியமான முறையில் மீன்பிடித்தல், கொப்பரைத் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இம்மக்கள் எவ்வித நட்ட ஈடு — நிவாரண உதவிகளின்றி தமது மண்ணும் வாழ்வும் பறிக்கப்பட்டு அகதிகளாய் வறுமையில் அல்லற்பட்டனர். இத்தீவுக் கூட்டம், பூர்வகுடி மக்களே இல்லாத, அமெரிக்காவின் இராணுவத் தளமாக மாற்றப்பட்டது.

உலக மேலாதிக்க நோக்கங்களுக்காக அமெரிக்காவும் பிரிட்டனும் டிகோகார்சியா தீவை இராணுவத்தளமாக்கிக் கொண்டு, அரபிக் கடல் - இந்துமாக் கடல் பிராந்தியத்திலுள்ள நாடுகளை அச்சுறுத்தி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரத் துடித்தன. குறிப்பாக, அமெரிக்க மேலாதிக்க வல்லரசின் நீர்மூழ்கிக் கப்பல், போர்க் கப்பற்படை, ஏவுகணை, போர் விமானப் படைத் தளமாகவும், பயிற்சிப் பாசறையாகவும் இத்தீவு மாற்றப்பட்டது. வளைகுடாப் போரின் போதும், சோமாலியாவில் பன்னாட்டு அமைதிப்படை என்ற பெயரில் அமெரிக்கா மேலாதிக்கம் செலுத்திய போதும், இஸ்லாமிய பயங்கரவாதி பின்லேடன் கும்பலுக்கு எதிராக ஆப்கானில் தாக்குதல் நடத்தியபோதும் அமெரிக்காவுக்கு மிக முக்கியமான இராணுவத்தளமாக டிகோகார்சியா பயன்பட்டது. அதேசமயம் அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்கப் போர் வெறிக்கு தரப்பட்ட விலையாக, 4000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களின் மண்ணும் வாழ்வும் வளமும் பறிக்கப்பட்டது.

மொரீஷியஸ் - செசல்ஸ் தீவுகளில் அகதிகளாக அல்லற்பட்ட சாகோஸ் தீவுக்கூட்ட மக்கள் படிப்படியாக ஐக்கியப்பட்டு ஓர் அமைப்பை நிறுவி, பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தொடர்ந்து போராடி வந்தனர். 1982-இல் வாழ்வுரிமை பறிக்கப்பட்ட இம்மக்களுக்கு அற்பமான நிவாரணம் அளித்து தீர்ப்பு வழங்கப்பட்ட போதிலும், அவர்களது தாய் மண்ணைத் தொடக்கூட முடியாமல் தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து சாகோஸ் அகதிகள் குழுவின் தலைவரான ஆலிவர் பான்கோல்ட், மீண்டும் வழக்கு தொடுத்து தொடர்ந்து போராடி வந்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளோ, "சாகோஸ் தீவுக் கூட்டத்தில் மக்களே இருந்ததில்லை; இவர்கள் பூர்வகுடிகள் அல்ல; இத்தீவுகளில் சில காட்டு மனிதர்கள்தான் இருந்தனர்; மக்கள் சமூகமாக வாழவில்லை; இவர்கள் மொரீஷியஸ் நாட்டின் ஒப்பந்தக் கூலிக்காரர்கள்" என்றெல்லாம் தமது ஆக்கிரமிப்புக் கொடுஞ்செயலை மூடிமறைத்து பொய்களையும் கட்டுக் கதைகளையும் நியாயப்படுத்தி எதிர்வழக்காடினர். நீண்ட காலமாக நடந்து வந்த இந்த வழக்கு முடிவுக்கு வந்து, கடந்த நவம்பர் 3-ஆம் நாளன்று பிரிட்டிஷ் உயர்நீதி மன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கியது.

"பிரிட்டனின் காலனியைச் சேர்ந்தவர்கள் என்பதால், சாகோஸ் தீவுக்கூட்ட மக்களும் பிரிட்டனின் குடிமக்களாவர்; அவர்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பது சட்டவிரோதச் செயலாகும். வெளியேற்றப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடும் நிவாரணமும் அளித்து தமது தாய் மண்ணில் வாழ முழுச் சுதந்திரமளிக்க வேண்டும்" என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது. எனினும் டிகோ கார்சியா தீவில் அமெரிக்க இராணுவத்தளம் நிறுவப்பட்டுள்ளதால் பாதுகாப்பு நலன் கருதி அத்தீவில் மட்டும் குடியேறக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. "இது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு; இந்நாள் எமக்குப் பொன்னாள்" என்று மொரீஷியஸ் தீவில் அகதிகளாக உழலும் சாகோஸ் தீவுக்கூட்ட பழங்குடியின மக்கள், உரிமைப் போரில் தாம் பெற்ற வெற்றியை விழாவாகக் கொண்டாடியுள்ளனர்.

நீண்ட போராட்டத்துக்குப் பிறகு வழங்கப்பட்டுள்ள இத்தீர்ப்பானது, அமெரிக்க - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் போர் வெறியர்களின் 30 ஆண்டுகால ஆக்கிரமிப்புப் பொய்கள் - சதிகளுக்குக் கிடைத்த மரண அடியாகும். உரிமைப் போரில் முதற்கட்ட வெற்றியைப் பெற்றுள்ள சாகோஸ் தீவுகளின் பழங்குடியின மக்கள், அனைத்துலக புரட்சிகர - ஜனநாயக சக்திகளுடன் அணிதிரண்டு, டிகோகார்சியாவிலிருந்து அமெரிக்க இராணுவத் தளத்தை வெளியேற்றுவதற்கான போராட்டத்திலும் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்.

## ஸ்டாலின்கிராடு பெயர் மாற்றம்: ரஷிய ஆளுங் கும்பலின் கீழ்த்தரமான நடவடிக்கை

சோவியத் ஒன்றியத்தில் முதலாளித்துவ மீட்சி நடந்த பிறகு, அதை சோசலிசத்தின் வீழ்ச்சியாகச் சித்தரித்து பரப்பப்படும் பிரச்சாரங்கள் ஏராளம். இனி புரட்சியே சாத்தியமில்லை; கம்யூனிசம் காலாவதியாகிவிட்டது என கட்டுக் கதைகளும் அவதூறுகளும் ஏராளம். இவற்றால் நிறைவு கொள்ளாத முதலாளித்துவவாதிகள் வரலாற்றைத் திரித்தும் மூடிமறைத்தும் சோஷலிசத்தின் சிறிய அடையாளங்களைக் கூட அழிப்பதுமான கீழ்த்தரமான வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போது கொல்லப்பட்ட ஜாரிச ரஷ்ய மன்னனுக்கு, இப்போது சிறப்பு விருதுகளும் பட்டங்களும் அளித்து கௌரவிக்கின்றனர். உலகப் பாட்டாளி வர்க்க ஆசான் லெனினது பாதுகாக்கப்பட்ட உடலை எடுத்து கிறித்துவ மதச்சடங்குகளின்படி அடக்கம் செய்வோம் என்று கீழ்த்தரமான முறையில் கொக்கரிக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக இப்போது கேடுகெட்ட ரஷிய முதலாளித்துவ ஆளுங் கும்பல், ஸ்டாலின்கிராடு நகருக்கு "வோல்காகிராடு" என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறது. ரஷிய திரிபுவாத கம்யூனிஸ்டுக் கட்சியின் மௌனமும், இந்நகரின் முக்கியத்துவத்தை அறியாத புதிய தலைமுறையின் மெத்தனமும் ஒருபுறமிருந்தாலும், உலகெங்குமுள்ள புரட்சிகர கம்யூனிச இயக்கங்களும், வரலாற்று அறிஞர்களும், முன்னாள் சோவியத் செம்படை வீரர்களும் இக்கீழ்த்தரமான நடவடிக்கையை அம்பலப்படுத்தி கண்டனம்



படிப்பகம்

www.padippakam.com



தெரிவித்துள்ளனர்.

அன்றைய சோவியத் ரஷ்யாவில், 1942 நவம்பரில் வோல்கா நதிக்கும் டான் நதிக்குமிடையே ஸ்டாலின்கிராடு அருகே இட்லரின் நாஜிப் படைகளுக்கு எதிராக சோவியத் செம்படை நடத்திய போர், இரண்டாம் உலகப் போரின் மிகப்பெரிய இராணுவ - அரசியல் நிகழ்வாகும். பாசிச ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசபக்த போராக மட்டுமின்றி, இரண்டாம் உலகப் போரின் போக்கையே மாற்றிய மிக முக்கியமான திருப்புமுனையாகவும் இது அமைந்தது. ஸ்டாலின்கிராடில் அடைந்த வெற்றியானது பாசிச ஜெர்மனியில் சாவுமணியாக ஒலித்தது. பாசிசத்தின் தாக்குதல் வேகம் இங்கே அடக்கப்பட்டதன் விளைவாக, உலகெங்கும் பாசிச எதிர்ப்பு ஜனநாயக சக்திகள் உத்வேகமடைந்து புரட்சிப் போரை முன்னெடுத்துச் சென்று பாசிசத்தை வீழ்த்தி வெற்றியைச் சாதித்தன.

இரண்டாம் உலகப் போரின் திருப்புமுனையாக அமைந்த ஸ்டாலின்கிராடு போரில் பங்கேற்ற செம்படையின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றும் வகையில் இந்நகருக்கு "வீரத்திருநகர் ஸ்டாலின்கிராடு" என்ற சிறப்பு கௌரவப் பட்டமும் வழங்கப் பட்டது. ரஷ்யாவின் 20-க்கும் மேற்பட்ட சிறிய நகரங்களுக்கு "ஸ்டாலின்கிராடு" என்று புதிய பெயர் சூட்டி அன்றைய சோவியத் மக்கள் பெருமிதம் கொண்டார்கள்.

ஸ்டாலின் கிராடு 'நகரானது, அன்றைய சோவியத் அதிபர் தோழர் ஸ்டாலினது. உறுதியான தலைமைக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின், செம்படையின், சோவியத் மக்களின் பாசிச எதிர்ப்புணர்வுக்குமான வீர அடையாளமாகும். உலகெங்குமுள்ள புரட்சிகர - ஜனநாயக சக்திகளுக்கு என்றும் நம்பிக்கையூட்டும் விடிவெள்ளியாகும். ஸ்டாலின்கிராடு நகருக்குப் பெயர் மாற்றம் செய்வதன் மூலம் ஒருக்காலும் முதலாளித்துவம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுவிட முடியாது. ஸ்டாலின்கிராடு - உலகப் பாட்டாளி வர்க்கத்தாலும் ஜனநாயக சக்திகளாலும் பெருமிதமாகவும், முதலாளித்துவ - பாசிச சக்திகளால் பயங்கரமாகவும் என்றும் நினைவு கூறப்படும்.

## ஓட்டுக்கட்சி துரோகிக்கு மக்கள் புகட்டிய பாடம்

உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, பா.ஜ.க. அரசு தேயிலை இறக்குமதியைத் தாராளமயமாக்கியதன் விளைவாக உள்நாட்டுத் தேயிலை விலை வீழ்ச்சியடைந்து, நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். தேயிலை இறக்குமதியைத் தடை செய்யக் கோரியும், தாங்கள் பயிரிடும் பச்சைத் தேயிலைக்கு கிலோவுக்குப் பதினைந்து ரூபாய் விலை நிர்ணயம் செய்யக் கோரியும் கடந்த மே, ஜூன் மாதங்களில் மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தினர். பேரணி, ஊர்வலம், ஆர்ப்பாட்டம், சாலை மறியல் என விவசாயிகள் நடத்திய போராட்டங்கள் மீது தடியடித் தாக்குதல், கைது என தி.மு.க. அரசு மிருகத்தனமாக ஒடுக்கியது.

குறிப்பாக மீக்கேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் போராட்டம் நடத்தியபோது அவர்களைச் சுற்றி வளைத்து தாக்கிய போலீசார், இளைஞர்களை இழுத்துச் சென்று கண்மூடித்தனமாக அடித்து உதைத்தனர். அவர்களது ஆடைகளைக் களைந்து உள்ளாடையுடன் ஊர்வலமாக இழுத்துச் சென்று கைது செய்து கொட்டடியில் வதைத்தனர். போராடிய இளைஞர்களை கிரிமினல் குற்றவாளிகளைப் போல அவமானப்படுத்திய போலீசாரின் இக்கொடுஞ்செயல் பத்திரிகைகளில் புகைப்படத்துடன் வெளியாகி, நீலகிரி மாவட்டமே கொதித்துக் குமுறியது. ஒருங்கிணைந்த புரட்சிகரத் தலைமை இல்லாததால் நீலகிரி தேயிலை விவசாயிகளின் போராட்டம் தொடர்ந்து முன்னேற முடியாமல், தற்காலிகமாகப் பின்நிலைக்குத் தள்ளப்பட்டது. இருப்பினும் தங்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்திய போலீசார் மீதும், தங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்காத உதகை சட்டமன்ற தி.மு.க. எம்.எல்.ஏ.வான குண்டன் மீதும் விவசாயிகள் கடும் கோபத்தில் இருந்தனர்.



தேயிலை விவசாயிகளின் போராட்டத்தின் போது இளைஞர்களை வதைத்து உள்ளாடையுடன் இழுத்துச் செல்லும் போலீசு.

இந்நிலையில், தேர்தல் நெருங்கி விட்டதால் எம்.எல்.ஏ. குண்டன், தனது தொகுதி மக்களைச் சந்தித்து குறைகேட்கும் பயணத்தை மேற்கொண்டார். கடந்த நவம்பர் 16-ஆம் தேதியன்று தனது எடுபிடிகளுடன் பி. மணி ஹட்டி என்ற கிராமத்துக்குள் நுழைந்த குண்டனுக்கு எதிராக விவசாயிகள் முழக்கமிட்டனர். "எங்களை நிர்வாணமாக்கி போலீசார் அடித்து உதைத்த போது வராத நீ, இப்போது ஏன் வருகிறாய்? துரோகியே திரும்பிப் போ!" என்று குண்டன் கும்பலை வழி மறித்து வாக்குவாதம் செய்து முழக்கமிட்டனர். இதைக் கண்டு பீதியடைந்த குண்டன் நைச்சியமாகப் பேசி அவர்களை அமைதிப்படுத்திவிட்டு பக்கத்து கிராமத்துக்குத் தப்பிச் சென்றார். பிறகு தனது பயணத்தை முடித்துக் கொண்டு மீக்கேரி சாலையில் குண்டன் பரிவாரங்கள் வந்து கொண்டிருந்த போது, இரு பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அவர்களை வழிமறித்து முழக்கமிட்டனர். "எங்களை நிர்வாணமாக்கி அடித்தது உங்க ஆட்சியும் போலீசும்தானே! அடிபட்டுக் கிடந்த எங்களைப் பார்த்து ஆறுதல் சொல்லக்கூட வராத நீங்கள், இப்போது தேர்தல் பயத்தில் இங்கே வந்துட்டீங்களா?" என்று கேட்டு அவர்களை அடித்து சட்டை வேட்டியைக் கிழித்தெறிந்தனர். அங்கு திரண்ட மீக்கேரி கிராம மக்கள், குண்டன் கும்பல் மீது சாணியைக் கரைத்து ஊற்றி அவமானப்படுத்தியதோடு, அசிங்கமாகத் திட்டி அடித்து விரட்டியுள்ளனர்.

ஆந்திராவில் உலக வங்கிக் கட்டளைப்படி திணிக்கப்பட்ட அநியாய மின் கட்டண உயர்வை எதிர்த்துப் போராடி வரும் மக்கள், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள் — அமைச்சர்களைத் தமது தொகுதிக்குள் நுழைய விடாமல் அவமானப்படுத்தி அடித்து விரட்டியடிக்கின்றனர். தலைநகரை விட்டு அவர்கள் வெளியே தலைகாட்ட முடிவதில்லை. ஆந்திர மக்களின் போராட்ட வழியில், நீலகிரி விவசாயிகள் நடத்திய இத்திடீர்த் தாக்குதலைக் கண்டு தி.மு.க. மட்டுமல்ல; உலகமயமாக்கலை ஆதரிக்கும் அனைத்து ஓட்டுக்கட்சி துரோகிகளும் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். தன்மான உணர்வுள்ள நீலகிரி விவசாயிகளின் இத்தகைய திடீர் போராட்டங்கள் தேர்தல் நேரத்தில் காட்டுத் தீயாகப் பற்றிப் பரவும். ஓட்டுப் பொறுக்கி துரோகிகளுக்கு உரிய பாடத்தைப் புகட்டும் என்பதில் சந்தேகமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

நாட்டிலேயே சாதனைக் கால முதல்வராக இருந்து மேற்கு வங்கத்தை ஆண்டு வந்த ஜோதிபாசு பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு அவரது ''மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்'' கட்சி ஒரு வழியாக ஒப்புதல் அளித்து விட்டது..

மேற்கு வங்க முதல்வர் பதவியில் இருந்து, இந்தியப் பிரதமராகி விடும் ஜோதிபாசுவின் ஆசையைத் தடுத்துவிட்ட அவரது கட்சி, முதல்வர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் அவரது கோரிக்கையையும் ஏற்கவில்லை. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் ஏறக்குறைய ஒரு பொம்மை முதல்வராகவே நீடித்தார். துணை முதல்வராக்கப்பட்ட புத்ததேவ் பட்டாச்சார்யாவே மாநில நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். வரும் ஏப்ரலில் நடக்க இருக்கும் மாநில சட்டமன்றத் தேர்தல்களில், ஜோதிபாசுவைக் கட்சியின் குறியீடாக முன் நிறுத்தி மீண்டும் ஆட்சியைப் பிடித்த பிறகு, அவருக்கு ஓய்வு கொடுக்கலாம் என்பது சி.பி.எம். கட்சியின் கணக்காக இருந்தது.

ஆனால், ஜோதிபாசுவின் எண்ணமோ வேறுவிதமாக இருந்தது. ''தேர்தல்களில் தோற்று, பதவியைப் பறிகொடுத்து விட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது, மதிப்புக்குரியதாக இருக்காது; ஆட்சியில் இருக்கும்போதே பதவி விலகுவதுதான் மரியாதையாக இருக்கும்'' என்ற எண்ணத்தில் மீண்டும், மீண்டும் வலியுறுத்தி, பதவி விலகுவதற்கு கட்சியின் சம்மதத்தைப் பெற்றார். சமீபத்தில் நடந்து முடிந்த திருவனந்தபுரம் கட்சிப் பேராயத்தில் ஒப்புதல் பெற்று பதவி விலகி, புத்ததேவ் பட்டாச்சார்யா முதல்வராவது என்றும் முடிவானது.

உடனே, ''தேர்தல் தோல்வி பயத்தினால்தான் ஜோதிபாசு பதவி விலகுகிறார்'' என்று மம்தா மற்றும் பாரதீய ஜனதா தலைவர்கள் கிண்டலத்தார்கள். இவர்கள் ஆளும் வர்க்கக் கட்சியினர் என்பதாலேயே, இவர்களுடைய கிண்டல் கருத்து பொய் என்றாகி விடாது. சமீபகால மேற்குவங்க இடைத்தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி - நகரவைத் தேர்தல்களின் முடிவுகள் இதையே காட்டுகின்றன.

அதுமட்டுமல்ல, இப்போது கேரள முதல்வராக உள்ள சி.பி.எம்.மின் முதல்வர் ஈ.கே. நாயனாரைப் பார்த்து, காங்கிரசின் அந்தோணியும், பா.ஜ.க.வின் ராஜகோபாலும் இதேபோல சொல்லும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை. அதாவது, கேரளாவிலும் சி.பி.எம். தலைமையிலான இடதுசாரி முன்னணியைத் தோல்வி என்னும் இருள் சூழும்போது நாயனாரும் இதே முடிவை எடுப்பார்.

சி.பி.எம்.மும் அதன் தலைமையிலான இடதுசாரி முன்னணியும் பல ஆண்டுகளாக ஆண்டுவந்த பிறகும் இம்மாநிலங்களில் எப்படி இந்த நிலைமை ஏற்பட்டது? நாட்டிலேயே மிகவும் வலுவான அணிகளையும், மக்கள் ஆதரவையும் பெற்றிருப்பதாகச் சொல்லிக் கொண்ட அவற்றுக்கு என்ன நேர்ந்துவிட்டது?

மக்களுக்கு இடைக்கால நிவாரணமளிப்பதுதான் மாநில அரசுகளில் தான் பங்கேற்பதற்கான காரணம் என்று சி.பி.எம். கட்சியின் திட்டம் கூறிக் கொள்கிறது. இப்படி இடைக்கால நிவாரணமளித்து, மக்கள் ஆதரவையும் நம்பிக்கையும் பெறுவது; முன்னணியாளர்களை வென்றெடுத்து அணிகளைக் கட்டியெழுப்புவது, இவற்றின் மூலம் புரட்சிக்குத் தேவையான செல்வாக்கையும், பலத்தையும் திரட்டுவதுதான் தமது நோக்கம் என்று அக்கட்சியினர் விளக்கினர்.

தாங்கள் ஆளும் மாநிலங்களில் இடைக்கால நிவாரணங்கள் அளித்து, மக்கள் செல்வாக்குப் பெருகுவதைக் காட்டி, இதரமாநிலங்களிலும் மக்கள் ஆதரவைப் பெற்று கட்சியை வளர்க்க முடியும் என்று நம்பினர். இந்த நோக்கத்தோடுதான் ''வங்கத்தைப் பார்!'' ''கேரளத்தைப் பார்!'' என்று ''பயாஸ் கோப்பு'' படம் காட்டினார்கள். குறிப்பாக, பிற மாநில இளைஞர்களின் ஆதரவைப் பெறுவதற்காக வேலையற்றோர் நிவாரண நிதி, முதியோர் கருணைத் தொகை போன்றவை வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டினர்.

பிற மாநிலங்களில், விவசாயிகளின் போராட்டங்கள் வெடிக்கும்போதும், சாதிக்கலவரங்கள் மூளும் போதும் மேற்கு வங்கத்தில் இடதுசாரிக் கூட்டணி அரசு மேற்கெண்ட நிலச் சீர்திருத்தங்கள் காரணமாக அங்கே இப்பிரச்சினைகள் கிடையாது; அங்கு சாதி-மதக் கலவரங்களுக்கான அடிப்படை தகர்க்கப்பட்டுவிட்டது என்று சித்தரித்தனர்.

ஆனால், பல ஆண்டுகள் சி.பி.எம். தலைமையிலான இடதுசாரி முன்னணி ஆட்சி செலுத்திய போதிலும் மே.வங்கம், கேரளா, திரிபுராவில் அவர்கள் பெற்றுள்ள மக்கள் செல்வாக்கு, கட்சியின் பலாபலம் பற்றிய உண்மை நிலவரம் என்ன? அங்குள்ள யதார்த்த நிலைமையைச் சுயபரிசீலனை செய்யவோ, உண்மையை ஒப்புக் கொள்ளவோ அவர்கள் தயாரில்லை. மேற்கு வங்கத்தில் தமக்குச் சரிவோ, பின்னடைவோ ஏற்படவே கிடையாது; அவ்வாறு நேர்ந்துவிட்டதாக முதலாளித்துவ, மதவாத சக்திகள் பொய்யான அவதூறுப் பிரச்சாரம் செய்கின்றன என்று சாதிக்கின்றனர்.

அங்கு ஏற்பட்ட தேர்தல் தோல்விகளைச் சுட்டிக் காட்டினால் வேறு காரணம் கூறுகின்றனர். ''சி.பி.எம். - இடதுசாரி முன்னணி அரசு மேற்கொண்ட நிலச் சீர்திருத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஜோத்திதார்கள் (மிட்டா மிராசுதாரர்கள் - பண்ணை நிலப்பிரபுக்கள்) மம்தாவின் திரிணமூல் காங்கிரசு மற்றும் பா.ஜ.க.வின் பின்னே அணிதிரண்டு குண்டர்களை ஏவி இடதுசாரி கூட்டணி அணிகளைத் தாக்குகின்றனர். வோட்டுச் சாவடிகளைத் தாக்கி தேர்தல் தில்லுமுல்லுகள் செய்கின்றனர்'' என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

**இந்த நாற்காலியில் உட்கார்ந்துதான் சாதனைக் கால ஆட்சி நடத்தினார் ஜோதிபாசு. தாங்கள் ''நாற்காலி கம்யூனிஸ்டுகள்''தான் என்பதற்குச் சான்றாக, இதை ஒரு நினைவுச் சின்னமாக்கி விட சி.பி.எம். முடிவு செய்து, பின்னர் அதைக் கைகழுவியது.**




படிப்பகம்

www.padippakam.com

இதற்கு முந்தைய தேர்தல் தோல்விகளுக்கு வேறொரு காரணம் கூறினர். ''இடதுசாரி முன்னணி அரசாங்கத்தின் சாதனைகளை மக்களிடம் பிரச்சாரம் செய்யத் தவறிவிட்டனர். இனி மக்களிடம் பிரச்சாரம் செய்யும் கடமைக்கு அணிகள் முன்னுரிமை தருவார்கள்'' என்று சொன்னார்கள். திரிணமுல் காங்கிரசு தொடங்கப்பட்டு அது ஆரம்ப வெற்றிகளை ஈட்டியபோது, இடதுசாரி முன்னணிக்கு எப்போதுமே நகர்புறங்களில் ஆதரவு இருந்ததில்லை. அதற்கு வழக்கமாக உள்ள கிராமப்புறப் பேராதரவு குறையவே இல்லை. இதனால்தான் நகரங்களில் சில இடங்களில் திரிணமுல் காங்கிரசு வெற்றிபெற முடிந்தது'' என்று விளக்கமளித்தனர்.

கேரளத்தில், சில தேர்தல் முடிவுகள் பாதகமாக வந்தபோது, பா.ஜ.க.வுடன் காங்கிரசு கொண்டுள்ள இரகசிய உடன்பாடுதான் அதற்குக் காரணமென்று விளக்கமளித்தனர். கடந்த நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்களில் பெரிய சரிவை சி.பி.எம். அணி சந்திக்கவில்லை என்றாலும், தற்போதைய தேக்க நிலையை உடைத்துக் கொண்டு அதனால் எள்முனை அளவுகூட முன்னேற முடியவில்லை.

தற்போது தேர்தல் கள்த்தில் சி.பி.எம்.மும் அதன் தலைமையிலான இடதுசாரி முன்னணியும், சந்தித்துவரும் பின்னடைவு, சரிவை விட அவற்றை நீண்டகாலத்திற்கு, பாரிய முறையில் பாதிக்கக் கூடியது, அதன் நேர்மையற்ற, சுயபரிசீலனையற்ற தன்மைதான். ஆளும் வர்க்கக் கட்சியான பிற்போக்கு - பாசிச பா.ஜ.க. கூட அடுத்தடுத்த இரண்டு தேர்தல்களில் தேக்கநிலை அடைந்துவிட்டபோது சுயபரிசீலனையில் ஈடுபட்டு, கொள்கைகள்-உத்திகளை மாற்றிக் கொள்கிறது. ஆனால் ''மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்'' கட்சி என்று கூறிக் கொள்ளும் சி.பி.எம். பொய்யான விளக்கங்களைக் கூறி அணிகளையும் மக்களையும் ஏய்க்கவே எத்தணிக்கிறது.

* * *

தனது தேர்தல் தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் சி.பி.எம். அளிக்கும் விளக்கம் எவ்வாறு தவறானது, பொய்யானது என்று இனிப் பார்ப்போம். இடைக்கால நிவாரணமளிப்பதன் மூலம் மக்கள் செல்வாக்கைப் பெற்று, அணிகளைக் கட்டிப் புரட்சிக்குத் தயாரிப்பது என்ற சி.பி.எம்.மின் கொள்கை, திட்டம் படுதோல்வி கண்டுவிட்டது. முதலாவதாக, இப்படிச் செய்ய முடியும் என்ற கொள்கையே தவறானது. இரண்டாவதாக, இதை அமலாக்கிய அணுகுமுறையும் தவறானது.

''இடைக்கால நிவாரணமளித்து மக்கள் ஆதரவைத் திரட்டுவது, அணிகளை வென்றெடுப்பது'' என்ற கண்ணோட்டமே



நவீன நாஜிக்களின் பாணியில் கட்சி அணிகளின் அரசியல் பிரச்சாரம்.

சி.பி.எம். மற்றும் இடது முன்னணிக் கட்சிகளின் தொழிற்சங்கப் பிழைப்புவாத அடிப்படையிலானது. சலுகைகள், சீர்திருத்தங்கள் மூலம் மக்கள் அரசியல்படுத்தப்படுவார்கள் என்ற கண்ணோட்டம் அடிப்படையிலேயே, மார்க்சியக் கண்ணோட்டத்துக்கு மாறானது. இதன் மூலம் மேலும் மேலும் சீர்திருத்தங்கள் - சலுகைகள் கோருவது; இதற்கு மாறாக செயல்படும் கட்சிகளின் அரசாங்கத்தைத் தேர்தல்களில் தோற்கடிப்பது; கூடுதலான சீர்திருத்தங்கள் - சலுகைகள் தருவதாக வாக்குறுதி தரும் கட்சிகளை ஆதரிப்பது; அதன்மூலம் தமது பிரச்சினைகள் தீரும் என்று நம்புவது - இவைதான் இடைக்கால நிவாரணம் என்ற கொள்கையின் விளைவாக இருக்கும். இந்தப் போக்குதான் இடதுசாரி கூட்டணி ஆளும் மாநிலங்களிலும் நடக்கிறது.

''இடைக்கால நிவாரணம்'' என்று ஏதோ பெரிய கொள்கை, கோட்பாடு - சித்தாந்த விளக்கம், வியாக்கியானம் எல்லாம் சி.பி.எம். கொடுக்கிறது. ஆனால் எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். எல்லாம் இதையேதான் செய்து ஓட்டுப் பொறுக்கினர். சத்துணவு, ஊட்டச்சத்து உருண்டை, இலவச வேட்டி - சேலை - காலணி - பற்பொடி, இரண்டு ரூபாய்க்கு ஒருபடி அரிசித் திட்டம் முதற்கொண்டு முதியோர் - ஆதரவற்றோர் ஊதியம், வேலையற்றோர் நிவாரணத்

> **ஆட்சிக்கு வருவதற்கு முன்பாவது, தொழிற்சங்கப் பிழைப்புவாத கோரிக்கைகளுக்காகவும், மக்களின் பொருளாதாரவாதக் கோரிக்கைகளுக்காகவும் போராடும் அமைப்புகளாக சி.பி.எம்.மின் மக்கள் திரள் அமைப்புகள் இருந்தன. ஆட்சிக்கு வந்து, அதிகார எலும்புத் துண்டைச் சுவைத்த பிறகு அவற்றின் தன்மையே மாறிவிட்டன. இனிமேலும் அவை போராட்ட அமைப்புகள் இல்லை; அரசாங்கத்தின் தொங்கு சதைகளாகவே உள்ளன.**

தொகை, கலப்புத் திருமணம் - விதவைத் திருமணம் உதவித் தொகை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், சமத்துவபுரம் போன்றவை வரை இத்தகைய நிவாரணத் திட்டங்கள் கால காலத்துக்கும் புதிது புதிதாக உருவாகிக் கொண்டே இருக்கின்றன.

இங்கு மட்டுமல்ல, அமெரிக்கா, பிரான்சு, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகளிலே இத்தகைய சீர்திருத்தங்கள் - சலுகைகள் ஆளும் வர்க்கங்களாலேயே அமுலாக்கப்படும்போது, பொறுக்கி - கவர்ச்சி அரசியல் கொடி கட்டிப் பறக்கும் நமது நாட்டில் சி.பி.எம்.மின் ''இடைக்கால நிவாரணம்'' என்ற கோட்பாடு வெறும் பிதற்றல்தான்.

சி.பி.எம்.மின் இடது முன்னணி பெரிதாகப் பீற்றிக் கொள்ளும் மேற்கு வங்க நிலச்சீர்திருத்தமும் கூட ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் சீர்திருத்தம் - சலுகைகளில் ஒன்றாகத்தான் ஆகிப்போனதே தவிர, நிலவுடமை உறவுகளில் அது அடிப்படை சமூகப் பொருளாதார மாற்றமாக அமைந்துவிடவில்லை. ஒரு சில குத்தகை விவசாயிகளுக்கு நிலங் கிடைத்தாலும், தொடர்ந்து முதலீடு செய்து புதிய முறையில் விவசாயத்தைத் தொடர முடியவில்லை. நிலச்சீர்திருத்தம் என்கிற பெயரில் சி.பி.எம். மற்றும்பிற இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளின் அணிகள்தாம் கனிசமான அளவு நிலம் பெற்றனர். விவசாயிகளுக்கு முதலீட்டு உதவி என்கிற பெயரில் கூட்டுறவு வங்கிகள் - சொசைட்டிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் - மானியங்களைக் கட்சி அணிகளே சுருட்டிக் கொண்டனர்.

கேரளத்தில் ஆட்சிக்கு வருவதற்குச் சில காலம் முன்பாகவே தொழிற்சங்க இயக்கம் பிழைப்புவாதத்தின் உச்சத்துக்குப் போய்விட்டது. பிற பிரிவு மக்களின் ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாக வெறுப்பையும், சுயநல வெறிபிடித்த முதலாளிய குணங்களையும் அது பெற்றது. மேற்கு வங்கத்தில், இடதுசாரி முன்னணி தனக்குச் சாதகமாக - ஆதரவாக இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தொழிற்சங்க இயக்கம் புதுவேகம் பெற்றது. அதே சமயம் முதலாளிகளில் பலர் கடும் எதிர்ப்பைக் காட்டி ஆலைகளை மூடி, மூல தனத்தைப் பிற மாநிலங்களுக்குத் திருப்ப விட்டு, மேற்குவங்கப் புறக்கணிப்பை மேற்கொண்டனர். இதன் விளைவாக அனை வருக்கும் வேலை வாய்ப்பு என்ற இடது முன்னணியின் வாக்குறுதிக்கு மாறாக வேலை இழப்பும், வேலையில்லாத் திண் டாட்டமும்தான் பெருகியது. மேற்கு வங்கப் தொழில் துவங்குவதற்குத் தகுதியற்ற மாநிலம் என்ற எண்ணம் பரவியது.

இதை மாற்றுவதற்காக மேற்கு வங்கத்தில் முதலாளிகளுக்குப் பாதுகாப் பான சூழலை உருவாக்குவது, தொழிலாள


படிப்பகம்

இயக்கத்தை ஒடுக்குவது என்ற கொள்கையை இடது முன்னணி மேற்கொண்டது. வங்கத்தின் சிங்கம் ஜோதிபாசு பலமுறை தொழிலாளர்களை மிரட்டும் முகமாகக் கர்ஜித்தது. போலீசை ஏவி ஒடுக்கியது. பேருந்து, இரயில், மின் கட்டண உயர்வுக்கெதிராகப் பிற மாநிலங்களில் கூச்சல் போட்ட அதேசமயம், சி.பி.எம். தான் ஆளும் மாநிலங்களில் அதே நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதை எதிர்த்துப் போராடியவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி ஒடுக்குமளவு போனது.

தொழிலாளர் - விவசாய இயக்கப் பிரமுகர்கள் எல்லாம் அதிகாரத் தரகர்களாக மாறினர். தொழில்முறைக் கிரிமினல்களுக்கும் இவர்களுக்கும் கள்ளக் கூட்டு ஏற்பட்டது. அயோத்தி பாபரி மசூதி இடிப்பு, மதவெறிப் படுகொலைகளை எதிர்த்து தாவூத் இப்ராகீம் - மாமுன் கிரிமினல் கும்பல் பம்பாயில் தொடர் குண்டுகளை வெடித்தபோது, கல்கத்தாவிலும் அதன் கூட்டாளிகள் குண்டு வெடித்துப் பலரைக் கொன்றனர். அப்போது சி.பி.எம்.க்கும் கிரிமினல் குற்றக் கும்பல்களுக்குமிடையிலான உறவுகள் அம்பலமாகின. இதையொட்டி இரண்டு மந்திரிகள்- மாவட்டச் செயலர்கள் மீது புகார் கூறப்பட்டு, கண்துடைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதேபோல கேரளாவில் சாராய - கடத்தல் கிரிமினல் கும்பலுடன் சி.பி.எம். பிரமுகர்கள் கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ளனர். கேரளாவில் உள்ளூராட்சி - நகராட்சி அமைப்புகளை மட்டுமல்ல; கோவில் தேவஸ்தானங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு சி.பி.எம். பிரமுகர்கள் கொள்ளையிடத் துவங்கினர். தேவஸ்தானங்களில் சி.பி.எம். பிரமுகர்களின் ஆதிக்கத்துக்குப் போட்டியாக ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. இந்து வெறியர்கள் கிளம்பவே இரு தரப்புக்குமிடையே ஆயுத மோதல்கள், கொலைகள் தொடர் நிகழ்ச்சிகளாகிவிட்டன.

# கழுதையின் வாரிசு குதிரையாகுமா?

மே. வங்கத்தில் போலி கம்யூனிஸ்டு முதல்வராக 24 ஆண்டு காலம் பதவி வகித்த ஜோதிபாசு, அண்மையில் மூப்பு காரணமாக அப்பதவியிலிருந்து விலகி ஓய்வு பெற்றுள்ளார். அவரது அரசியல் வாரிசான புத்ததேவ் பட்டாச்சார்யா புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ளார். துரோகத்தனத்தில் ஜோதிபாசு எட்டடி பாய்ந்தால், நான் பதினாறு அடி பாய் வேன் என்று புத்ததேவ் வெளிப்படையாகவே பேட்டியளித்துள்ளார்.

"தொழிற் சங்கங் கள் முற்றுகைப் போராட்டத்தை (கெரோ) நடத்தினால் அதை ஒருக்காலும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம். அப்படி யாராவது 'கெரோ' போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்கள் மீது வழக்கு தொடுத்து ஒடுக்குவோம். நாங்கள் தொழில்துறை முதலாளிகளின் நண்பனாக உள்ள அரசாகவே செயல்படுவோம்!

'சி.ஐ.டி.யு. உட்பட அனைத்து தொழிற் சங்கங்களுக்கும் நாங்கள் எச்சரிக்கிறோம்; கவனியுங்கள்! நாம் ஒரு மாற்றத்தை நோக்கிய கால கட்டத்தில் வாழ்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உற்பத்தியும் உற்பத்திப் பொருட்களின் தரமும் முதலாளிகள் சம்பந்தப்பட்ட விவகாரமாகக் கருதக் கூடாது. இனி அது தொழிலாளர்களின் விவகாரம் என்பதையும் ஏற்க வேண்டும். இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில் ஆலைகள் தொடங்கப்படவும், தொடர்ந்து நீடிக்கவும் இது அவசியமாகும்; ஆலையே இல்லாவிட்டால் தொழிலாளர்கள் எப்படி கோரிக்கை வைக்க முடியும்?" என்று மே. வங்கத்தின் புதிய முதல்வர் தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறார்.

இதுமட்டுமல்ல; தமது கட்சியும் தொழிற்சங்கங்களும் தனியார்மயம் - தாராளமயத்தையும் எதிர்ப்பதாகக் கூறினாலும், தமது அரசு, மாநிலத்தின் நலன் கருதி தனியார்மயத்தை ஊக்குவித்து ஆதரிக்கும் என்கிறார். "இன்றைய மாறிவரும் உலகின் போக்கை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்; ஒரு வெளிநாட்டு நிறுவனம் மே. வங்கத்தில் முதலீடு செய்ய முன்வரும் போது, அபத்தமான கேள்விகள் கேட்டு திட்டத்தைத் தள்ளிப் போடக் கூடாது. கடந்த காலத்தில் இப்படிச் சில தவறுகளைச் செய்து விட்டோம். இனி அவ்வாறு நிகழாமல் விரைந்து செயல்படுவோம். தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடு செய்ய பல தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளன. எனினும் நாங்கள் அன்னிய நிறுவனங்களுக்கே முன்னுரிமை அளித்து ஏற்பாடுகள் செய்து தருவோம். நாங்கள் எப்போதும் தனியார் முதலீட்டை ஊக்குவிப்போம். மாநிலத்தை தொழில்மயமாக்கும் லட்சியத்தில் நாங்கள் தொழில் துறை முதலாளிகளின் நண்பனாகவே என்றும் செயல்படுவோம். தனியார் மூலதனம், தொழில் வளர்ச்சி, புதிய வேலை வாய்ப்புகள் என்ற திசையில் நாங்கள் செல்வதை தொழிற் சங்கங்கள் புரிந்து கொண்டு பொறுப்புடன் செயல்பட வேண்டும்" என்று தனியார் - அந்நியப் பெருமுதலாளிகளுடன் வெளிப்படையாகவே கூட்டணி கட்டிக் கொண்டு தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறார், ஜோதிபாசுவின் அரசியல் வாரிசு.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களிலோ, போராட்டங்களிலோ ஈடுபடுவதை அரசு ஒருபோதும் சகித்துக் கொண்டு இருக்க முடியாது என்று எச்சரித்து, போராடிய தொழிலாளர்கள் மீது கிரிமினல் வழக்கு போட்டு சிறையிலடைத்து தனது ஆளும் வர்க்க விசுவாசத்தை நிரூபித்துக் காட்டினார் ஜோதிபாசு. அவரது அரசியல் வாரிசாகப் பதவியேற்றுள்ள புத்ததேவ் பட்டாச்சார்யா மட்டும் இதிலிருந்து மாறுபட்டு நிற்பாரா என்ன? இவ்வளவுக்கும் பிறகும் போலி கம்யூனிஸ்டு 'மார்க்சிஸ்டு' கட்சியினரும் சி.ஐ.டி.யு. சங்கத்தினரும் புத்ததேவ் பட்டாச்சார்யாவை "தோழர்" என்று வெட்கமின்றி அழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜோதிபாசு மற்றும் அவரது "நாற்காலி வாரிசு" புத்ததேவ் பட்டாச்சார்யா.



www.padippakam.com

ஆட்சிக்கு வருவதற்கு முன்பாவது, தொழிற்சங்கப் பிழைப்புவாத கோரிக்கைகளுக்காகவும், மக்களின் பொருளாதாரவாதக் கோரிக்கைகளுக்காகவும் போராடும் அமைப்புகளாக சி.பி.எம்.மின் மக்கள் திரள் அமைப்புகள் இருந்தன. ஆட்சிக்கு வந்து, அதிகார எலும்புத் துண்டை சுவைத்த பிறகு அவற்றின் தன்மையே மாறிவிட்டன. இனி மேலும் அவை போராட்ட அமைப்புகள் இல்லை; அரசாங்கத்தின் தொங்கு சதைகளாகவே உள்ளன.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி சோசலிச அமைப்பு நிறுவப்பட்ட நாடுகளில் கூட புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம்தான் மக்கள் அரசியல் விழிப்புணர்வோடு இருக்க முடியும். சோசலிச சமூக அமைப்பின் கீழ் பிறந்து வளர்ந்த புதிய தலைமுறை புரட்சியின் அவசியம், சிரமங்களை மறந்து விடுவதும், பொருளாதாரத் தேவைகளுக்குள் மூழ்கிப் போய்விடுவதும், அரசியலற்ற வாதத்தில் சிக்கி எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு ஆதரவாகத் திரும்பி விடுவதையும் கூட கண்டோம்.

இந்த நிலையில், ''இடைக்கால நிவாரணம்'' என்ற பெயரில் பெறும் சலுகைகள் மூலமே மக்கள் விழிப்புணர்வு பெற்று விடுவர் என்று நம்புவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதுமட்டுமல்ல, இந்தக் கொள்கையால் கட்சி முழுவதும் சீரழிந்து வெறும் முதலாளித்துவக் கட்சியாகிவிட்டது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு முயலுவது என்கிற பெயரில் அப்பட்டமான முதலாளித்துவ அரசியல், பொருளாதாரக் கொள்கைகளையே அமலாக்கும் நிலைக்கும் போய்விட்டது.



சமீபத்தில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மேற்கு வங்க மக்கள் உணவுக்காகத் தட்டேந்தித் திரியும் அவலம்: ஜோதிபாசுவின் 25 வருடகால ஆட்சியின் 'சாதனை'!

''சி.பி.எம். ஆளும் மாநிலங்களில் தொழிற் தகராறுகள் எதுவும் கிடையாது; அவையே முதலீடு செய்வதற்கு வசதியானவை - வாய்ப்பானவை'' என்ற கருத்தை உருவாக்குவதற்காக சி.பி.எம். கட்சியும் அரசும் கடுமையாக முயற்சிக்கின்றனர். இதற்காக உள்நாட்டுத் தரகு முதலாளிகளை வலிந்து வலிந்து அழைப்பதோடு, வெளிநாடுகளில் வாழும் மலையாளிகள், வங்காளிகளை மன்றாடி வேண்டுகின்றனர். மக்களுக்கு இடைக்கால நிவாரணமளிப்பதை நிறுத்திக் கொண்டு, ஏகாதிபத்திய - தரகு முதலாளிகளுக்கு ''நிவாரணங்கள்'' ஏற்பாடு செய்வதற்காகப் பாடுபடுகின்றனர்.

இத்தகைய நடைமுறையை வைத்துக் கொண்டு மற்றபிற ஓட்டுக் கட்சிகளைவிடத் தாம் வித்தியாசமானவர்கள், நிறையச் சாதித்திருப்பவர்கள், அந்தச் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லாததுதான் குறை; அந்தக் குறையையும் சரி செய்துவிட்டால் போதும், மீண்டும் மக்கள் ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்று சுய திருப்தி கொள்கின்றனர் போலிக் கம்யூனிசக் கட்சியினர். இந்தச் சுயதிருப்தி அவர்களுடைய சுய அழிவுக்குத்தான் வழி வகுக்கும்.

— தொடரும்

# கந்திலி கிராமச் சந்தையில் பகற் கொள்ளையர்கள்

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் அருகேயுள்ள கந்திலி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமச் சந்தையில், ஒப்பந்தக்காரர்கள் தமது விருப்பப்படி நுழைவாயில் (கேட்) வரி விதித்து வியாபாரிகளையும் விவசாயிகளையும் கேள்விமுறையின்றிக் கொள்ளையடித்து வருகின்றனர். அரசு நிர்ணயித்துள்ள சந்தை வரிக்கு மாறாக, சாதாரண நாட்களில் 10, 15 மடங்கும், பண்டிகை நாட்களில் 20,25 மடங்கும் வசூல் செய்கின்றனர். இதற்கு முறையான ரசீது எதுவும் கிடையாது. இப்பகற்கொள்ளையை எதிர்த்துக் கேட்கவும் முடியாது. அப்படி யாராவது கேட்டால்-அடியாட்களை வைத்து தாக்குவதும் அச்சுறுத்துவதும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. இப்பகற்கொள்ளையருடன் கள்ளக் கூட்டு சேர்ந்துள்ள ஊராட்சி ஒன்றிய அதிகார வர்க்கம், தமது கண்ணெதிரே இக்கொள்ளை நடந்த போதிலும் கண்டும் காணாமல் இருந்து வந்தது.

இந்த ஒப்பந்தக் கொள்ளையருக்கு எதிராக பிரசுரம் வெளியிட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி, அரசு நிர்ணயித்துள்ள சந்தை வரியையும் பட்டியலிட்டு கந்திலியில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. மிகப் பெரிய அளவில் கூடிக் கொண்டிருந்த கந்திலி சந்தை, இப்போது மிகச் சிறியதாகச் சுருங்கியதற்குக் காரணமே, சந்தை கேட் கொள்ளைக்கு அஞ்சி விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை திருப்பத்தூர், கிருஷ்ணகிரி போன்ற நகரங்களுக்குக் கொண்டு சென்று விடுவதுதான் என்பதை விளக்கியது.

கடந்த 7.10.2000 அன்று கந்திலி சந்தையில் கடைகடைய்யாக பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்த வி.வி.மு, தோழர்களை, பெனாங்குகாரன் மகன் கஜேந்திரன் என்ற ரௌடி தனது அடியாட்களுடன் வந்து தாக்கி ஆபாசமாக ஏசியுள்ளான். இப்பகற் கொள்ளையனின் ரௌடித்தனத்தை மீண்டும் மக்களிடம் அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்த வி.வி.மு., குறிப்பிட்ட நாளில் இந்த ரௌடிக் கும்பல் மக்கள் முன்பாக பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எச்சரித்து துண்டுப் பிரசுரம் வெளியிட்டது. ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் சந்தை வரி கொள்ளை பற்றி முறையிட்ட பிறகு, அரசு நிர்ணயித்துள்ள சந்தை வரிப் பட்டியலை சந்தை வாயிலில் தட்டியில் எழுதி வைக்கவும், விதியை மீறி வசூலித்தால் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்து ஒப்பந்தத்தை ரத்து செய்வதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இதை விளக்கி பிரச்சாரம் செய்து வரும் வி.வி.மு., உழைக்கும் மக்களின் உறுதியான ஆதரவுடன் பகற்கொள்ளையருக்கு எதிரான தனது போராட்டத்தைத் தொடர்கிறது.

**- விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**வேலூர், தர்மபுரி மாவட்டங்கள்.**


படிப்பகம்

www.padippakam.com

# டெல்லிக்கு 'அழகு' தொழிலாளருக்கு அழிவு

தலைநகர் டெல்லியில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் தமது வாழ்வுரிமைக்காக அண்மையில் நடத்திய போராட்டம் அம்மாநிலத்தையே உலுக்கியுள்ளது.

தலைநகர் டெல்லியில் சுற்றுச்சூழலை நஞ்சாக்கும் ஆலைகளையும் குடியிருப்புப் பகுதியிலுள்ள சிறுதொழில் - குடிசைத் தொழில் நிறுவனங்களையும் உடனடியாக மூட வேண்டும் என்று 1996-ஆம் ஆண்டில் உச்சநீதி மன்றம் உத்திரவிட்டது. உலக வங்கி நிதியுதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள டெல்லி மாநகர மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துமாறும் டெல்லி மாநில அரசுக்கு ஆணையிட்டது. டெல்லி நகருக்கு வெளியே 25 கி.மீ.க்கு அப்பால் ஆலைகளை நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அங்கு தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்றும், ஆலையை அகற்றும் இடைப்பட்ட காலத்தில் தொர்டர்ந்து முழுச்சம்பளம் தர வேண்டும் என்றும், புதிய இடத்திற்குக் குடிபெயர விரும்பாமல் வேலையிலிருந்து விலகிக் கொள்ளும் தொழிலாளிக்கு சட்டப்படி நட்ட ஈட்டுத் தொகை தரப்பட வேண்டும் என்றும் உச்சநீதி மன்றம் உத்திரவிட்டது.

இதைத் தொடர்ந்து 1997 ஜனவரியிலிருந்து பிர்லா துணி ஆலை; சிறீராம் செயற்கை இழை ஆலை, பூச்சி ம்ருந்து ஆலை என அடுத்தடுத்து 168 பெரிய ஆலைகள் மூடப்பட்டன. ஆனால் எந்த நிறுவனமும் டெல்லி புறநகரில் மீண்டும் ஆலையை நிறுவவில்லை. வேலையிழந்த தொழிலாளர்களுக்கு சம்பளமோ, நட்டஈடோ தரவுமில்லை. இப்படி 30,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து, வாழ்விழந்து வீதியில் வீசியெறியப்பட்டனர். வேதனையிலும் விரக்தியிலும் துவண்ட தொழிலாளர்களில் சிலர் தீக்குளித்தும் பூச்சி மருந்து குடித்தும் தற்கொலை செய்து கொண்டனர்.

தனது உத்தரவைச் செயல்படுத்தாமல் தொழிலாளர்களின் வாழ்வைப் பறித்த பெரு முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவக்கற்ற உச்சநீதி மன்றம், எஞ்சிய ஆலைகளையும் உடனடியாக மூடுமாறு கடந்த நவம்பர் 14-ஆம் தேதியன்று மாநில அரசை எச்சரித்து உத்தரவிட்டுள்ளது. அதாவது, 9 பேருக்கு மேல் பணியாற்றும் எந்தத் தொழில் நிறுவனமும் டெல்லி மாநகரில் இயங்கக் கூடாது; அனைத்தையும் உடனடியாக மூடிவிட வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது. இதன் விளைவாக டெல்லியிலுள்ள 1.26 லட்சம் சிறுதொழில் - குடிசைத் தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு, 15 லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து வாழ்விழந்து மரணக் குழியில் தள்ளப்படுவார்கள். உச்சநீதி மன்ற உத்தரவுப்படி டெல்லி மாநில அரசு அனைத்து சிறுதொழில் நிறுவனங்களுக்கும் நோட்டீசு அனுப்பியதும், ஆத்திரமடைந்த தொழிலாளர்களும், சிறுதொழில் நிறுவன உரிமையாளர்களும் இக்கொடுஞ்செயலை எதிர்த்து போராட்டத்தில் இறங்கினர்.

தமது வாழ்வுரிமையைப் பறிக்கும் அநீதிமன்றத்தின் உத்தரவையும், மத்திய - மாநில அரசுகளின் நடவடிக்கையையும் எதிர்த்து வீதிகளில் திரண்ட தொழிலாளர்கள் சாலை போக்குவரத்தைத் துண்டித்து, அரசு கட்டிடங்களைத் தாக்கி, பேருந்துகளைக் கொளுத்தி கடையடைப்புப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தனர். அதன்படியே நவம்பர் 19-ஆம் நாளன்று கடைகள் மூடப்பட்டு தொழிலாளர்களின் போராட்டம் டெல்லி ஆட்சியாளர்களைச் சுட்டெரிக்கும் காட்டுத் தீயாகப் பரவத் தொடங்கியதும், பீதியடைந்த ஆட்சியாளர்கள் போலீசுப் படையை ஏவி ஒடுக்க முற்பட்டனர். போலீசார் தடியடித் தாக்குதல் நடத்தி பலரது மண்டையைப் பிளந்த போதிலும் தொழிலாளர்களின் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு வீதியில் திரண்டு போலீசாருக்கு எதிராக வீரப்போர்

வாழ்வுரிமையைப் பறிக்கும் நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டத் தீயில் பொசுங்கிய அரசுப் பேருந்து.





படிப்பகம்

www.padippakam.com

புரிந்தனர். அதன்பிறகு 4 கம்பெனி அளவுக்கு விரைவு அதிரடிப் படை குவிக்கப்பட்டு நகரெங்கும் தொழிலாளர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டு பலர் படுகாயமடைந்தனர். இதன் காரணமாக, தொழிலாளர்களின் போராட்டம் தற்காலிகமாக ஒய்ந்துள்ள போதிலும் இன்னமும் வெடிக்கக் காத்திருக்கும் எரிமலையாய் குமுறிக் கொண்டிருக்கிறது.

டெல்லியில் தொழிலாளர் போராட்டம் தீவிரமானதும், டெல்லி மாநில காங்கிரசு முதல்வர் ஷீலா தீட்சித் தலைமையில் காங்கிரசுப் பெருச்சாளிகள் ஊர்வலமாக சென்று பிரதமரைச் சந்தித்து முறையிட்டு தொழிலாளர்களின் வாழ்வைப் பறிக்காதீர்கள் என்று முதலைக் கண்ணீர் வடித்துள்ளனர். டெல்லியைச் சேர்ந்த பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு பிரதமரிடம் முறையீட்டு நாடகம் நடத்தினர். நாடாளுமன்ற மேலவையில் இந்த உத்தரவை ஒட்டி எதிர்க்கட்சிகள் கூச்சலிட்டு வெளிநடப்பு கூத்தடித்தன. ஆனாலும் எந்தக் கட்சியும் உலக வங்கி கட்டளைப்படியிலான டெல்லி மாநகர மேம்பாட்டுத் திட்டத்தையோ, உச்சநீதி மன்றத்தின் அயோக்கியத்தனமான உத்தரவையோ எதிர்த்துப் போராடத் தயாராக இல்லை.

சுற்றுச்சூழல் காரணத்தைக் காட்டும் உச்சநீதி மன்றம் பெருகி வரும் வாகனப் புகையால் ஏற்படும் பாதிப்பு பற்றியோ, மேட்டுக்குடியினர் பயன்படுத்தும் குளிர்பதனப் பெட்டிகளிலிருந்து வெளியாகும் சி.எப்.சி. எனும் நச்சு வாயுவினால் ஏற்படும் பாதிப்பு பற்றியோ வாயே திறக்கவில்லை. சுற்றுச்சூழல் பாதிப்பு என்ற காரணம் காட்டி, ஆலைகளை அகற்றிவிட்டு அந்த நிலத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டிக் கொள்ளையிடத் துடிக்கும் வீட்டு மனை மாஃபியா கும்பலின் நலனுக்காகவும், உலக வங்கியின் கட்டளைப் படியும் தொழிலாளர்களின் வாழ்வுரிமை திட்டமிட்டே பறிக்கப்படுகிறது. உழைக்கும் மக்களால் உருவான மாநகரிலிருந்து, அம்மக்களையே துரத்தியடித்துவிட்டு, மேட்டுக் குடியினருக்கான நகரமாக்கும் சதிச் செயலே இது. உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப் படி, ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்திப் பொருட்களைக் கட்டுப்பாடு ஏதுமின்றி இறக்குமதி செய்து, உள்நாட்டு சிறுதொழில்களை அழிக்கும் பா.ஜ.க. அரசின் மறுகாலனியாதிக்க நடவடிக்கையின் ஓர் அங்கமே இது.

நகரங்களைத் தூய்மைப்படுத்துவது, மேம்படுத்துவது என்ற பெயரில் சேரிகள் ஒழிப்பு, நடைபாதைக் கடைகள் ஒழிப்பு என்று தொடங்கிய இத்தாக்குதல் இப்போது பல்லாயிரக் கணக்கான சிறுதொழில் நிறுவனங்களை அழித்து, இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் வாழ்வையும் பறிக்கத் தொடங்கி விட்டது. தலைநகர் டெல்லியில் தொடரும் இந்த அட்டூழியம் நாளை நமது நகரைத் தாக்கும் முன்னே, தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் விழிப்படைந்து கேடுகெட்ட ஓட்டுக் கட்சி ஆட்சியாளர்களுக்கு எதிராகத் திரண்டெழ வேண்டும். தமது வாழ்வுரிமைக்கான வர்க்கப் போராட்டத்தை மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போராக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

# குடிநீர் கட்டண உயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்டம்! போலி கம்யூனிஸ்டுகள் பீதி!

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், செல்லம்பட்டி ஊராட்சியிலுள்ள [illegible]குளம் பஞ்சாயத்தில் குடிநீர் குழாய் இணைப்பு பெற்றுள்ள வீடுகளுக்கு திடீரென கட்டண உயர்வும், வைப்புத் தொகை உயர்வும் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்பு ரூ. 200 வைப்புத் தொகையாகக் கட்டியவர்கள் தற்போது ரூ. 1000 கட்ட வேண்டுமென்றும், குடிநீர் கட்டணமாக மாதம் ரூ. 10-க்குப் பதிலாக இனி ரூ. 30 கட்ட வேண்டுமென்றும் பஞ்சாயத்துத் தலைவராக உள்ள 'மார்க்சிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த பரமன் உத்தரவிட்டு நோட்டீசு அனுப்பியுள்ளார். தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தத் தவறினால் குடிநீர் இணைப்புக் குழாய் துண்டிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

இந்த அநியாயக் கட்டண உயர்வைக் கண்டித்து கடந்த அக்டோபர் 5-ஆம் நாளன்று செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக விவசாயிகள் விடுதலை முன்னணி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. மதுரை, தேனி மாவட்டங்களில் செயல்படும் வி.வி.மு. கிளைகளின் முன்னணித் தோழர்கள் இதில் சிறப்புரையாற்றினார். பகுதிவாழ் மக்கள், அநியாய கட்டண உயர்வுக்கெதிரான இப்போராட்டத்தை வாழ்த்தி பல வகையிலும் ஆதரவு தெரிவித்தனர்.

குடிநீர் கட்டண உயர்வு அநியாயமானது; நீங்கள் 'டாடா சுமோ'வில் செல்ல நாங்கள் வரி கட்ட முடியாது என்றும் பஞ்சாயத்துத் தலைவராக உள்ள பரமன், உசிலம்பட்டி வட்ட விவசாய சங்கத் தலைவராகவும் இருப்பவர்; உழைக்கும் மக்களுடன் நின்று கட்டண உயர்வை எதிர்த்துப் போராடாமல், அதிகாரிகளின் உத்தரவிற்கும் அமெரிக்காவின் கட்டளைக்கும் விசுவாசமாக அவர் செயல்படலாமா? இதுதான் கம்யூனிசக் கொள்கையா? என்றும் தோழர்கள் விளக்கிப் பேசினர்.

இதனால் பீதியடைந்த போலி கம்யூனிஸ்டு 'மார்க்சிஸ்ட்' கட்சியினர், தமது இளைஞர் சங்கத்தின் (DYFI) ஆதரவாளர் ஒருவர் மூலம், "தோழர் பரமனைத் திட்டுவது கம்யூனிசத்தை இழிவுபடுத்துவது ஆகாதா? அவரின் தனிப்பட்ட ஒழுக்கம் நேர்மையைப் பற்றி பேசத் தயாரா?" என்று துண்டுச் சீட்டில் கேள்வி எழுதியனுப்பி, தைரியமிருந்தால் இதை ஒலி பெருக்கியில் படித்துக் காட்டி பதில் கூறுமாறு கோரினர்.

"எத்தனையோ தலைவர்கள், அதிகாரிகள் ஒழுக்கமாகவும் நேர்மையாகவும் உள்ளனர். அதனால் அந்தக் கட்சியும் அரசும் ஒழுக்கமானது - நேர்மையானது என்று கூற முடியுமா? வாஜ்பாய் நேர்மையானவர் என்றால், பாரதீய ஜனதா மதவெறிக் கட்சியல்ல என்றாகிவிடுமா? உலகவங்கி - அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து, கேடுகெட்ட அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து நின்று கொண்டு கட்டண உயர்வை நியாயப்படுத்துவதும், குடிநீர் இணைப்பைத் துண்டிப்பேன் என்று எச்சரிக்கை நோட்டீசு கொடுப்பதும் தான் கம்யூனிசக் கொள்கையை இழிவுப்படுத்தும் செயல். கம்யூனிசத்தின் பெயரால் பிழைப்பு நடத்தி பதவிச் சுகம் காணும் பரமன், கட்டண உயர்வை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராட முன்வராதது ஏன்? மற்ற பகுதிகளில் நீங்கள் கட்டண உயர்வை எதிர்ப்பது ஏன்?" என்று காட்டமாக தோழர்கள் ஒலி பெருக்கியில் முழங்கியதும் பரமனின் விசுவாசிகள் வாயடைத்துப் போயினர்.

குடிநீர்க் கட்டண உயர்வை எதிர்த்து வி.வி.மு. நடத்திய ஆர்ப்பாட்டம்.



— வி.வி.மு.,
உசிலம்பட்டி வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# வாழ்வைப் பறித்த தீர்ப்பு

**உதவி - நிவாரணத் திட்டம் எதுவுமில்லாமல், நர்மதா அணையை உயர்த்திக் கட்ட உத்தரவிட்டதன் மூலம், உச்சநீதி மன்றத்தின் மக்கள் விரோதத் தன்மை மீண்டும் அம்பலமாகிவிட்டது.**

''பசுவிற்குக் கூட நீதி வழங்கிய சிபி சக்கரவர்த்தி ஆண்ட நாடு, நமது நாடு'' என்று இந்தியாவின் ''நீதி வழுவாமை'' குறித்து ஆளுங் கும்பல்கள் அடித்து வரும் தம்பட்டம், நமக்குப் புளித்துப் போன ஒன்று. ஆனால், இந்தியாவில், சாதாரண மாட்டுக்குக் கிடைத்ததாகக் கூறப்படும் நீதி, உழைக்கும் மனிதனுக்குக் கிடைத்ததா என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி. மன்னர்களும், மிட்டா மிராசுகளும் ஆண்ட காலத்தை விட்டுவிடுங்கள். இந்தியா 'குடியரசாகி', கடந்த ஐம்பதாண்டுகளில், நிலைமை என்ன? நர்மதா அணைக் கட்டு தொடர்பான வழக்கில் உச்சநீதி மன்றம் சமீபத்தில் வழங்கியுள்ள தீர்ப்பு, பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல அமைந்துள்ளது.

குஜராத் மாநிலத்தில் நர்மதை ஆற்றின் குறுக்கே சர்தார் சரோவர் எனும் மிகப் பெரிய அணையை குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மூன்று மாநிலங்களும் இணைந்து கட்டி வருகின்றன. இந்த அணைக் கட்டால், இம்மூன்று மாநிலங்களில் வாழ்ந்து வரும் 40,000 குடும்பங்கள், (கிட்டதட்ட இரண்டு இலட்சம் பேர்) தாங்கள் வாழ்ந்து வந்த கிராமங்களை விட்டு, வேறு இடங்களுக்குக் குடிபெயர வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இவர்களுள் பெரும்பாலோர் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பழங்குடி இன மக்கள். உரிய நிவாரணமும், வீடும், நிலமும் வழங்குவதற்கு முன்னதாகவே, அவர்கள் தங்கள் சொந்த கிராமத்தில் இருந்தும், நிலத்தில் இருந்தும் துரத்தியடிக்கப்படுவதால் ''நர்மதா பாதுகாப்பு இயக்கம்'' எனும் அமைப்பில் இணைந்து, கடந்த பத்தாண்டுகளாக அவர்கள் போராடி வருகின்றனர்.

நர்மதா பாதுகாப்பு இயக்கமும், வேறு சில தன்னார்வக் குழுக்களும் இணைந்து, 'இந்த அணைக் கட்டால் சுற்றுச் சூழலுக்கு நேரக்கூடிய பாதிப்புகள் பற்றி முறையாக ஆய்வு செய்யப்படவில்லை; இந்த அணைக்கட்டால் பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்று நிலமும், வீடும் வழங்கப்பட்ட பின்புதான் அணைக் கட்டைக் கட்டத் தொடங்க வேண்டும் என்பதுதான் விதி. இந்த விதியைக் குப்பைக் கூடைக்குள் தூக்கிப் போட்டுவிட்டு, இந்த அணை கட்டப்படுகிறது என்பதோடு, பாதிக்கப்படும் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய அளவிற்குப் போதிய வளமிக்க நிலங்கள் இம்மாநில அரசுகளிடம் இல்லை; 18,000 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் இந்த அணையால் இம்முதலீட்டிற்கான உரிய பலன் கிடைக்க வாய்ப்பில்லை'' என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டி, சர்தார் சரோவர் திட்டத்தைக் கைவிடுமாறு உத்திரவிடக் கோரி, உச்சநீதி மன்றத்தில் 1994-ஆம் ஆண்டு பொதுநல வழக்கொன்றைத் தொடுத்தன. இவ்வழக்கை ஏற்றுக் கொண்ட உச்சநீதி மன்றம், அணை கட்டப்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்தது.

மூன்று நீதிபதிகள் அடங்கிய உச்சநீதி மன்ற ''பெஞ்ச்'' விசாரித்து வந்த இந்த வழக்கில் பருச்சா என்ற நீதிபதி, நர்மதா பாதுகாப்பு இயக்கம் முன்வைத்த விவரங்களை ஏற்றுக் கொண்டு, முறையான சுற்றுச் சூழல் ஆய்வும், மறுவாழ்வுக்கான நிவாரண உதவியும் செய்யப்படும் வரை அணையைக் கட்டத் தொடங்கக் கூடாது என உத்தரவிட்டார்; ஆனால் மீதி இரண்டு நீதிபதிகள், ''பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மறுவாழ்வுக்கான உதவிகள் தங்களுக்குத் திருப்தியளிப்பதால், அணைக்கட்டின் உயரத்தை உடனடியாகவே 88 மீட்டரிலிருந்து 90 மீட்டராக உயர்த்திக் கொள்ளலாம்; அதன்பின் பகுதி பகுதியாக அணைக் கட்டின் உயரத்தை 138 மீட்டர் வரை உயர்த்திக் கொள்ளலாம்'' என்று அனுமதியளித்துத் தீர்ப்பளித்துள்ளனர். இந்தப் ''பெரும்பான்மை'' தீர்ப்பை குஜராத் மாநில பா.ஜ.க. அரசு பட்டாசு வெடித்துக் கொண்டாடியது.

கீழ் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பை, மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்யும் பொழுது, ''கற்றறிந்த நீதிபதி, தனது அறிவைப் பயன்படுத்தவில்லை'' என்று கீழ்நீதிமன்ற நீதிபதியை நாசுக்காக மட்டம் தட்டுவது வழக்கம். ஆனால், இந்த வழக்கில் பெரும்பான்மைத் தீர்ப்பை வழங்கிய இரு நீதிபதிகளுக்கும் அறிவு கிறிவு ஏதாவது இருக்கிறதா என்றே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

ஏனென்றால், மத்தியப் பிரதேச மாநில அரசு, அணையின் உயரம் [illegible] உயர்த்தப்படும் பொழுது தன [illegible] பாதிக்கப்படும் 156 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கக் கூடிய வகையில் தன் கைவசம் நிலம் கிடையாது என்று உச்சநீதி மன்றத்திடம் பத்திரத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறது.

இந்த அணையால் மகாராஷ்டிரா மாநிலத்தில் 20,000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட 33 கிராமங்கள் மூழ்கவுள்ளன. ஆனால், இக்கிராம மக்களின் மறுவாழ்வுக்காக அம்மாநில அரசு ஒதுக்கியிருக்கும் நிலத்தின் பரப்பளவு 4,500 ஹெக்டேர்தான். இந்த நிலம் அக்கிராம மக்கள் அனைவரும் ஒண்டுக் குடிசை போட்டுக் கொள்ளவே சரியாகிப் போய்விடும் எனும் பொழுது, வயித்துப் பாட்டுக்கு என்ன செய்வது? விவசாயத்தையெல்லாம் பழங்கதையாக் எண்ணி மறந்துவிட்டு, கூலி வேலை தேடி அல்லய வேண்டி

உச்சநீதி மன்றத் தீர்ப்பைப் பட்டாசு வெடித்துக் கொண்டாடும் குஜராத் மாநில முதல்வர் கேசுபாய் பட்டேல் மற்றும் அவரது சக அமைச்சர்கள்.





படிப்பகம்



உச்சநீதி மன்றத் தீர்ப்பைக் கண்டித்து நர்மதா பாதுகாப்பு இயக்கம் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

யதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி கிடையாது.

குஜராத் மாநில அரசால் மறுவாழ்வு அளிக்கப்பட்ட 300 குடும்பங்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட நிலம் சாகுபடிக்கு ஏற்றதல்ல என்பதால், அணைக்கட்டு நீரால் மூழ்கிப் போன தங்கள் கிராமமான மொகாதிக்குத் திரும்பிவிட்டனர்.

மறுவாழ்வு குறித்த இந்த உண்மைகளும், அதுபோன்றே மோசடிகளும் தகுந்த ஆதாரங்களுடன் உச்ச நீதி மன்றத்தின் பரிசீலனைக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் மறுவாழ்வு குறித்த அரசின் நடவடிக்கைகள் தங்களுக்கு திருப்தி அளிப்பதாக இரு நீதிபதிகள் குறிப்பிட்டால், அவர்களின் அறிவுத் திறனை மட்டுமல்ல, நாணயத்தையே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு இரு நீதிபதிகளும், நிவாரணம் மற்றும் மறுவாழ்வு குறித்து ஒரு வரைவுத் திட்டத்தை நான்கு வாரங்களுக்குள் தயாரித்துத் தரும்படி கட்டளையிட்டிருக்கின்றனர். திட்டம் தயாராவதற்கு முன்பே, மறுவாழ்வுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தங்களுக்குத் திருப்தியளிப்பதாகக் கூறிவிட்டு, மறுபுறம் மறுவாழ்வுக்கான திட்டத்தை எங்களுக்குத் தயாரித்துக் கொடு எனத் தீர்ப்பில் உத்திரவிட்டால், அவர்கள் கற்றறிந்த நீதிபதிகளா? இல்லை, இரட்டை வேடம் போடும் கயவர்களா?

நர்மதை அணையால் இதுவரை 88 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசின் புள்ளி விவரம் கூறுகிறது. நர்மதை அணை கட்டத் துவங்கி பதிமூன்று வருடங்கள் ஆன பின்னும், இந்த 88 குடும்பங்களுக்கும் ஒரு துண்டு நிலமோ, ஒண்டுக் குடிசையோ உருப்படியாக ஒதுக்கப்படவில்லை. 88 குடும்பங்களின் மறுவாழ்வுக்குக் கடந்த பதிமூன்று வருடங்களில் உருப்படியாக ஒரு நடவடிக்கையும் எடுக்காத அதிகார வர்க்கம், அணை உயர உயர வெளியேற்றப்படவுள்ள 40,000 குடும்பங்களின் மறுவாழ்வுக்காக ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதனை இம்மி பிசகாமல் நடைமுறைப்படுத்தும் என நீதிபதிகள் நம்பினால், ஒன்று, அவர்கள் முட்டாள்களாக இருக்க வேண்டும்; இல்லையென்றால், அவர்கள் தங்கள் அதிகாரத்தின் மூலம் மக்களை முட்டாளாக்குகின்றனர் என்றுதான் பொருள்.

பாதிக்கப்படும் மக்களுக்கு மறுவாழ்வு தர வேண்டியதில் மட்டுமின்றி, இந்த அணை தொடர்பான சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்த பிரச்சினையிலும் மைய/மாநில அரசுகள் அலட்சியமாகவும், மோசடித்தனமாகவும்தான் நடந்து கொண்டுள்ளன. இந்த அணை தொடர்பான கோப்பில், "சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்துச் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் திருப்திகரமாக இல்லை" என்று 1986 அக்டோபரில் குறிப்பு எழுதிய சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம், அடுத்த ஆண்டின் ஜூன் மாதமே அணையைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்தது. இடைப்பட்ட எட்டு மாதத்திற்குள்ளாகவே சுற்றுப்புறச் சூழல் பாதிப்புக் குறித்து முழுமையாக ஆய்வு நடத்தினார்களா என்றால், அதுதான் இல்லை. அணையைக் கட்டுவதற்கு உலக வங்கி அளித்த 450 கோடி டாலர் கடனுதவி, அதிகாரிகள், காங்கிரசு அமைச்சர்கள், காண்டிராக்டர்களின் கையை அரிக்கத் தொடங்கியதால், இருக்கும் விவரங்களைக் கொண்டு திருப்தியடைவோம் என முடிவுக்கு வந்துவிட்டனர்.

**அணை கட்டத் துவங்கி பதிமூன்று ஆண்டுகள் கழிந்த பின்னும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்காத ஆளுங் கும்பலை உச்சநீதி மன்றம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவில்லை. மாறாக, அணை கட்டத் துவங்கி ஏழு ஆண்டுகள் கழித்து பழங்குடி மக்கள் வழக்குத் தொடுத்ததைக் குற்றமாகப் பார்த்தது.**

சிறுபான்மை தீர்ப்பில், அதிகார வர்க்கத்தின் இந்த அலட்சியத்தை எல்லாம் குறிப்பிட்டு, "சுற்றுப்புறச் சூழல் குறித்து முறையாக ஆய்வு செய்யப்படவில்லை; அணையைக் கட்டுவதற்கான ஒப்புதலும் முறையாக வழங்கப்படவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார் நீதிபதி பரூச்சா. அதாவது, சட்ட விரோதமான முறையில்தான் அணை கட்டப்படுகிறது என்பதுதான் இதன் பொருள். ஆனால், பெரும்பான்மை நீதிபதிகளோ, இந்த மோசடிகளை, சட்ட விரோதத்தை "நிர்வாகக் கோளாறு" என்று ஒற்றை வரியில் ஒதுக்கித் தள்ளிவிட்டனர்.

பெரிய அணைக் கட்டுகள் பற்றிய உலக ஆணையம் எனும் அனைத்துலக நிறுவனம், இந்தியாவில் கட்டப்பட்டுள்ள பெரிய அணைக்கட்டுகளினால் வெறும் 10 சதவீதம் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது என ஆய்வறிக்கை ஒன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. ஆனால்; பெரும்பான்மை தீர்ப்பை எழுதிய நீதிபதிகளோ, இந்தியா, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்ததற்கே அணைக்கட்டுத் திட்டங்கள்தான் காரணம் என்ற வாதத்தை எந்தவிதமான ஆதாரமுமின்றி, தீர்ப்பை நியாயப்படுத்துவதற்காக முன் வைத்தனர்.

அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அண்டப் புளுகை அவிழ்த்து விட்டு மக்களிடம் தங்களின் கருத்தைத் திணிப்பது பாசிஸ்டுகளின் பாணி. அதே வழியில்தான் உச்சநீதி மன்றத்தின் பெரும்பான்மை தீர்ப்பு எழுதப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படுகிறது. மேலும், மாற்றுக் கருத்துக்களை இருட்டடிப்புச் செய்து நசுக்கும் பாசிஸ்டுகளின் பாணியிலேயே உச்சநீதி மன்றம், இவ்வழக்கு விசாரணையின் பொழுது நர்மதா பாதுகாப்பு இயக்கம் தனது வாதத்தை எடுத்து வைக்க ஒரேயொரு சந்தர்ப்பம் கூட வழங்காமல் தீர்ப்பைக் கூறியிருக்கிறது. பெரும்பான்மை தீர்ப்பை எழுதிய இரு நீதிபதிகள், "அணை கட்டத் துவங்கி ஏழு ஆண்டுகள் கழிந்து, இவ்வளவு கால தாமதமாக வழக்குத் தொடுக்க வேண்டிய காரணம் என்ன?" எனக் குதர்க்கமாகக் கேட்டு, நியாயம் கேட்க வந்த மக்களையே குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விட்டனர்.

பதிமூன்று ஆண்டுகள் ஆன பின்னும் மக்களுக்கு ஏன் உரிய நிவாரணம் வழங்கப்

www.padippakam.com

படவில்லை என ஆளுங் கும்பலைக் கேள்வி கேட்க, தனது அதிகாரத்தைக் காட்டத் துப்பில்லாத உச்சநீதி மன்றம், மக்களைக் கிள்ளுக் கீரைகளைப் போல பாவித்துக் கேள்விக் கேட்பதற்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது. வீரப்பன் வழக்கில் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற இயலாத அரசுகள் போகலாம் என வாய்க் கொழுப்பு வழியப் பேசிய உச்சநீதி மன்ற நீதிபதிகளுக்கு, இந்த வழக்கில், மக்களின் வாழ்வைக் காப்பாற்ற முடியாத அரசுகள் போகலாம் என்று சொல்வதற்கு வாய் வரவில்லை.

எனினும் உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு ''மக்கள் நலன்'', ''வளர்ச்சி'' என்ற பெயரில்தான் நியாயப்படுத்தப்படுகிறது. ஆண்டாண்டு காலமாக நர்மதை ஆற்றுப் படுகையில் வாழ்ந்து வந்த பழங்குடி மக்களுக்கும், விவசாயிகளுக்கும் நர்மதை அணையால் ஒரு துளிப் பயனும் இல்லை எனும் பொழுது உச்சநீதி மன்றம் எந்த 'மக்களின்' நலனைப் பற்றிப் பேசுகிறது? உண்மையிலேயே இந்த வளர்ச்சியின் பயனை அனுபவிக்கப் போகிறவர்கள் யார்?

குஜராத்தைச் சேர்ந்த பெரும் பணக்கார கரும்பு விவசாயிகள், கரும்பாலை அதிபர்கள், நர்மதை ஆற்றின் குறுக்கே கட்டப்படும் மகேஷ்வர் அணை நீரில் இருந்து நீர் மின்சாரம் தயாரிக்க முதலீடு போடக் காத்திருக்கும் எஸ். குமார், ஆக்டேன் என்ற பெரு முதலாளிகள் - இவர்கள்தான் இதன் பலனை அனுபவிக்கப் போகிறவர்கள்.

பாதிக்கப்படும் மக்களைத் திரட்டிப் போராடி வரும் நர்மதா பாதுகாப்பு இயக்கம் உள்ளிட்ட அனைத்துத் தன்னார்வக் குழுக்களும், நர்மதையின் குறுக்கே சிறிய அணைக் கட்டுகளைக் கட்டினால், சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு இருக்காது; மக்களுக்கும் வளர்ச்சியின் பலன் கிட்டும் என்கிறார்கள்.

அணைக்கட்டு இல்லை சிறியதா, பெரியதா என்பது பொருளாதார வளர்ச்சியின் பலனை அனுபவிக்கப் போகிறவர்களைத் தீர்மானிப்பது கிடையாது. அரசியல் அதிகாரம் யார் கையில் உள்ளது என்பது தான் அதைத் தீர்மானிக்கிறது.

அரசியல் அதிகாரம் மக்கள் கையில் இல்லாதவரை, வளர்ச்சியின் பலனை அனுபவிக்கப் போகிறவர்கள் அதைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் தரகு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும்தான். ஓட்டுக் கட்சி தொடங்கி உச்சநீதி மன்றம் வரை ஜனநாயகத்தின் அனைத்துத் தூண்களும் ''மக்கள் நலன்'', ''நாட்டு நலன்'' என்று அலங்காரமாகப் பேசுவதெல்லாம் வெறும் பசப்பல்கள்தான். அந்தப் பசப்பலின் பின்னே மறைந்து கிடப்பது ஆளுங் கும்பலின் நலன் மட்டும்தான்!

● ரஹீம்

**''கழிப்பறை கட்டிக் கொடு! அல்லது உங்கள் வீடுகளின் கழிப்பறைகளை எங்களுக்குத் திறந்து விடு!''**

# ஆட்சியாளர்களை நடுங்க வைத்த அதிரடிப் போராட்டம்

ஈரோடு, சூரம்பட்டி பேரூராட்சியிலுள்ள சங்குநகர் — அணைக்கட்டு பகுதியில் கழிப்பிட வசதிகோரி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி தொடர்ந்து போராடி வருகிறது. கடந்த 7.8.2000 அன்று மனித மலத்தை பேரூராட்சி அலுவலகம் முன் கொட்டும் போராட்டத்தை நடத்தியது. அதைத் தொடர்ந்து நிர்வாக அதிகாரி 40 நாட்களில் கோரிக்கையை நிறைவேற்றுவதாகவும்; போலீசார் 15 நாட்களில் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்றும் வாக்குறுதி அளித்தனர். ஆனால் இரு மாதங்களுக்கு மேலாகியும் கழிப்பிட வசதி செய்து தராமல் இப்பகுதி வாழ் மக்களை அலட்சியப்படுத்தி வந்தனர்.



இதையடுத்து, மக்களின் நியாயமான கோரிக்கையை அலட்சியப்படுத்தி புறக்கணித்து வரும் திமிர் பிடித்த நிர்வாக அதிகாரி மற்றும் கவுன்சிலர் வீடுகளின் முன்பு மலங் கழிக்கும் போராட்டத்தை 2.10.2000 அன்று நடத்துவதென பு.மா.இ.மு. அறிவித்தது. இதையொட்டி பிரசுரம் வெளியிட்டும் சுவரெழுத்து, தட்டிகள் மூலமும் தொடர் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இப்போராட்டத்தை வரவேற்று உழைக்கும் மக்கள் பெருத்த ஆதரவு அளித்தனர்.

இதைக் கண்டு பீதியடைந்த பேரூராட்சி நிர்வாக அதிகாரியும், அதிகார வர்க்கமும், கவுன்சிலர்களும் போராட்டத்தை அவதூறு செய்து, எதிர்போராட்டம் நடத்துவோம் என்று எச்சரித்தும் சங்குநகர் - அணைக்கட்டு பகுதிவாழ் மக்கள் பெயரில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு விநியோகித்தனர். ஆனால் சங்குநகர் மக்கள் இத்துண்டுப் பிரசுரத்தை வாங்கி கிழித்தெறிந்ததோடு, கவுன்சிலர் அப்பாஸ் என்பவரைச் சூழ்ந்து கொண்டு ''கெரோ'' செய்து ''பு.மா.இ.மு.வின் போராட்டம் நியாயமானது; மிகச் சரியானது; அதை யாராலும் இனி தடுக்கவும் முடியாது. இனிமேல் இதுபோல் நோட்டீசு போட்டால் உன்னைச் சும்மா விடமாட்டோம்!'' என்று எச்சரித்து விரட்டியடித்தனர்.

மக்களின் உறுதியான ஆதரவைக் கண்டு அரண்டு போன அதிகாரிகளும் கவுன்சிலர்களும், போலீசாரை ஏவி பேச்சு வார்த்தைக்கு அழைத்தனர். 'தேசப் பிதா' காந்தி பிறந்த நாளில் இப்படி போராட்டம் நடந்தால் ஊரே நாறிப் போய் விடும் என்ற பீதியில், போராட்டக் கமிட்டியிடம் நைச்சியமாக அதிகாரிகளும் பேரூராட்சித் தலைவரும் பேசிப் பார்த்தனர். கழிப்பறை கட்ட உரிய இடம் இல்லை; குடிசை மாற்று வாரியத்திடம் கேட்கிறோம் என்று பசப்பினார்கள்; போராட்டக் கமிட்டியினர் இப்படி பிரச்சினையை ஆறப்போட்டு இழுத்தடிக்கும் மாய்மாலங்களை ஏற்காமல், ''கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் பயணம் செல்லும் போது உடனடியாக கழிப்பறை கட்டிக் கொடுப்பது போல், எங்களுக்கும் போர்க்கால அடிப்படையில் கழிப்பறை கட்டிக் கொடு! அல்லது உங்கள் வீடுகளின் கழிப்பறைகளை எங்களுக்குத் திறந்து விடு!'' என்று உறுதியாக எச்சரித்தனர். பின்னர், வேறு வழியின்றி இன்னும் இரு மாதங்களுக்குள் கட்டித் தருகிறோம் என்று பேரூராட்சித் தலைவரும் அதிகாரிகளும் வாக்குறுதி அளித்தனர்.

இந்த வாக்குறுதியை எழுதிக் கொடுத்து கையொப்பமிடுமாறு போராட்டக் கமிட்டி நிர்பந்தித்ததும், சாக்குபோக்கு கூறி தட்டிக் கழிக்க முயன்ற நிர்வாக அதிகாரி, வட்டாட்சியரிடம் கலந்து பேசி பின்னர் 1.10.2000 அன்று மாலை எழுத்துப்பூர்வமாக வாக்குறுதி அளித்து கையெழுத்திட்டுக் கொடுத்தார். இதன்படி அதிகாரிகளின் வீடுகளின் முன்பு மலங்கழிக்கும் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. உரிய காலத்திற்குள் கழிப்பறை கட்டித் தராவிடில் மீண்டும் அடுத்த கட்டப் போராட்டம் தொடரும் என்று அதிகாரி எழுதிக் கொடுத்த வாக்குறுதியைக் காட்டி மக்களிடம் பு.மா.இ.மு. பிரச்சாரம் செய்தனர். பு.மா.இ.மு.வின் போர்க்குணமிக்க போராட்டத்தால் உணர்வு பெற்றுள்ள உழைக்கும் மக்கள் தமது உறுதியான ஆதரவை அளித்து வருவதோடு, அடுத்த கட்டப் போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

— புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, ஈரோடு.



படிப்பகம்

www.padippakam.com

நடைபெற்றுவரும் அரசியலையும் நடக்கவிருக்கும் அரசியல் போக்கையும் புரிந்து கொள்ள புதிய ஜனநாயகம் பெரிதும் உதவுகிறது. நிலவுகின்ற பிரச்சினைகளுக்கான காரணங்களையும் தீர்வையும் பு.ஜ. மட்டுமே தெளிவாக முன்வைக்கிறது. புதிதாக பத்திரிகையை வாங்கிப் படிக்கும் போது புரிந்து கொள்ள சற்று சிரமமாக இருந்தது. இப்போது அரசியல் நிலைமைகளை உற்று கவனித்து பு.ஜ.வைப் படிக்கும்போது எளிமையாக உள்ளது.

**— வாசகர் வட்டம்,**
**திருமுதுக்குன்றம் (விருத்தாசலம்).**

கோவை விவசாயக் கண்காட்சி பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. உள்ளூரிலுள்ள நாங்கள் இக்கண்காட்சியின் நோக்கத்தை அம்பலப்படுத்தி எழுத முயற்சிக்காமல் இருந்ததற்காக மிகவும் வருத்தமடைகிறோம். சாதி - வாரிசு அரசியல் பற்றிய கட்டுரை பிரச்சாரத்துக்குப் பெரிதும் உதவியது. பரவலான வாசகர்களிடம் வரவேற்பையும் பெற்றது. "யார் இந்து?" - என்ற கட்டுரையானது பார்ப்பன மதவெறியையும் போலி கம்யூனிஸ்டுகளின் துரோகத்தையும் எடுப்பாக திரைகிழித்துக் காட்டியது.

**— வாசகர் வட்டம்,**
**கோவை.**

நவம்பர் இதழ் மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளது. குறிப்பாக சாதி - வாரிசு அரசியலைத் தாக்கி எழுதப்பட்ட கட்டுரை பெரும் வரவேற்பைப் பெற்றது. பு.ஜ.வை பேருந்துகளில் மக்களிடம் அறிமுகப்படுத்தி பிரச்சாரத்துடன் விற்பனை செய்தபோது, இதுவரை கண்டிராத வகையில் ஒரே நாளில் 400-க்கும் மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

**— வாசகர் வட்டம்,**
**மதுரை.**

ஏகாதிபத்தியங்களுக்குத் தரகு வேலை செய்யும் ஓட்டுக் கட்சி அரசியல் கிரிமினல் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமலேயே, தண்டனை தீர்ப்பு தரும் நீதித்துறையின் யோக்கியதையை தலையங்கம் அம்பலப்படுத்திக் காட்டியது. ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களுக்கு எதிரான போராட்டச் செய்தியும், கோவை விவசாயக் கண்காட்சி பற்றிய கட்டுரையும் உலகமயமாக்கலின் - மறுகாலனியாதிக்கத்தின் விளைவுகளைப் புரிந்து கொள்ள பெரிதும் உதவியது.

**— மகாலிங்கம்,**
**அய்யனார்குளம்.**

ஏகாதிபத்திய கொள்ளைக்காரன் கிளிண்டன் இங்கு வந்தபோது நடந்த ஆரவாரங்களோடு, இப்போது அடிமை வாஜ்பாயி அமெரிக்காவில் அவமானப்பட்டதையும் அமெரிக்க தாசர்கள் ஒப்பிட்டுப் புரிந்து கொள்ளட்டும். வலதானாலும், இடதானாலும் போலி கம்யூனிஸ்டுகள் இனி




# வாசகர் கடிதம்

மேலும் புரட்சி சாயம் பூசிக் கொண்டு ஏய்க்க முடியாது. இக்கட்சிகளிலுள்ள பிழைப்புவாதிகளைத் தவிர, புரட்சிகர உணர்வுள்ளவர்கள் வெளியேறுவது நிச்சயம். முட்டுச் சந்தில் சி.பி.எம். என்ற தொடர் கட்டுரை இதை நிரூபித்துக் காட்டுகிறது.

**— தொழிலாளர் பிரச்சாரக் குழு,**
**நெய்வேலி.**

ஜெயா - சசி; ராவ் - பூட்டாசிங் போன்ற அரசியல் கிரிமினல்களுக்கு கிடைத்த நீதித்துறையின் தண்டனையைக் காட்டி ஜனநாயகத் தாயத்து வியாபாரம் செய்யும் முட்டாள்களுக்கு சம்மட்டி அடியாக பு.ஜ.வின் தலையங்கம் அமைந்தது.

**— நாஞ்சில் இராசாசி,**
**திருவள்ளூர்.**

சுதேசி வசனம் பேசி சொந்த நாட்டு மக்களையே சூறையாடும் பி.ஜே.பி.யின் பித்தலாட்ட அரசியலை அம்பலப்படுத்தும் வகையில் பெட்ரோல் விலையேற்றம் பற்றிய கட்டுரை அமைந்திருந்தது. அரசுக்கெதிராக சீறி எழுந்த மாணவர்களின் நியாயமான போராட்டம் ஒரு ஆரம்ப எச்சரிக்கைதான். அடுத்து, தமிழகம் தழுவிய அளவில் மக்கள் ஆதரவோடு மாணவர் போராட்டங்கள் நித்தம் நித்தம் தொடரட்டும்.

**— தர்மராஜ்,**
**திருச்சி.**

முட்டுச் சந்தில் சிக்கித் திணறும் சி.பி.எம். கட்சியினர் கேரளாவில் மாநாடு நடத்தியபோது, போலி கம்யூனிச ஆட்சியில் கள்ளச் சாராயம் குடித்து 34 பேர் மாண்டு போன செய்தியும் வந்தது. கள்ளச் சாராயம் விற்ற பெண், எல்லா கட்சியினருக்கும் பணம் கொடுத்துள்ளேன்; சி.பி.எம். கட்சி மாநாட்டுக்கு பேருந்து வசதியும் செய்து கொடுத்துள்ளேன் என்று உண்மையைப் போட்டு உடைத்துள்ளார். எதற்கெடுத்தாலும் வங்கத்தைப் பார்! கேரளாவைப் பார்! என்று சி.பி.எம். கட்சியினர் உபதேசிக்கிறார்கள். நாட்டு மக்களும் கேரள போலி கம்யூனிச ஆட்சியின் லட்சணத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்குப் பாடம் புகட்டவும் காத்திருக்கிறார்கள்.

**— புஷ்கின்,**
**மதுரை.**

ஓராண்டு காலமாக 25 பிரதிகள் மட்டுமே வருவித்து தனியொருவனாக நான் பிரச்சார - விற்பனை வேலைகளைச் செய்து வந்தேன். பு.ஜ.வின் சரியான அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக எனது துணைவியார் உள்ளிட்டு படிப்படியாக புதிய வாசகர்கள் உருவாகி, பிரச்சார - விற்பனை வேலைகளில் என்னுடன் தோள் கொடுக்கின்றனர். இன்று 100 பிரதிகள் தருவிக்கும் அளவுக்கு பு.ஜ. பரவலாக வாசகர்களைப் பெற்றுள்ளது. பு.ஜ.வின் சரியான, புரட்சிகர அரசியலால் இன்னும் பல புதிய வாசகர்கள் உருவாகி வருவார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

**— ராஜகுரு,**
**ஒசூர்.**

பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வுக்கு உண்மையான காரணம் என்ன என்பதை பு.ஜ. மட்டுமே தெளிவுபடுத்தியது. வேறு எந்த பத்திரிகையும் இந்த உண்மையைக் கூறி, ஆட்சியாளர்களின் மோசடிகளை அம்பலப்படுத்தவில்லை. பு.ஜ. என்றும் மக்களுக்கான பத்திரிக்கை. எனவே இன்னும் எளிமையான நடையில் வெளிவர வேண்டும்.

**— வாசகர் வட்டம்,**
**சென்னை.**

பு.ஜ. இதழின் கட்டுரைகள் பெரிதாகவும், நீண்ட நேரம் படிக்க வேண்டியுள்ளது என்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலும், அச்செய்திகளின் தேவையை உணரும் போது இது அவசியமானதுதான் என்பதை ஏற்க முடிகிறது. சொல்லப் போனால் பு.ஜ.வின் செய்திகள் மக்களுக்கு மட்டுமல்ல; வரலாற்றியல் படிக்கும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதே என் கணிப்பு. மாற்றுக் கருத்தாளர்களும் பு.ஜ.வைப் பாராட்டவே செய்வர். பெட்ரோல் விலையேற்றம் பற்றிய கட்டுரை, தேவையான - உண்மையான செய்தி. "விவசாயம் - உணவுக்கா? வணிகத்துக்கா?" மிக அருமையான கட்டுரை.

**— செம்மலர். மா. நடராசன்,**
**அறந்தாங்கி.**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 65, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/Chief.PMG- 544 / 2000

# இதுதான் இன்றைய இந்தியா

அண்மையில் மையத் தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு, சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். உடனடியாக அவருக்குச் செயற்கை சுவாசக் கருவிகள் பொருத்தி, உலகத்தரம் வாய்ந்த உயர்தொழில்நுட்ப சிகிச்சை அளிக்கப்பட்டது. இலண்டனிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் புகழ் பெற்ற இருதய சிகிச்சை நிபுணர்கள் அவசரமாக வரவழைக்கப்பட்டனர். தினந்தோறும் அளிக்கப்பட்ட சிகிச்சை முறை பற்றியும், உடல்நிலை முன்னேற்றம் குறித்தும் பரபரப்புடன் பத்திரிக்கை செய்திகள் வெளியிடப்பட்டன. பிரதம மந்திரி, அமைச்சர்கள், அதிகாரிகள், எதிர் கட்சிகள் உட்பட அனைவரும் நேரிலும், தொலைபேசியிலும் அக்கறையுடன் நலம் விசாரித்தனர்.

இதோ, இந்தப் படத் தில் இருப்பது மாறன் மற்றும் அவரது மாமன் கருணாநிதி ஆட்சியின் கீழுள்ள சென்னை அரசு பொது மருத்துவமனை. கடந்த ஆகஸ்டு மாதம் பெய்த இலேசான மழையில் மருத்துவமனைக் கட்டிடத்தின் ஒரு பகுதி மேல் தளம் இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் நசுங்கி நோயாளிகள், மருத்துவர்கள் பலர் காயமடைந்தனர். திருமூர்த்தி என்ற நோயாளி இதில் பலியானார். மாநிலப் பொதுப் பணித்துறை அமைச் சர் ஆற்காடு வீரச்சாமி வந்து பார்வையிட்டுப் போனதோடு சரி! இச்சம்பவத்துக்குப் பிறகு மருத்துவர்கள் தலைக் கவசத்தோடு பணிக்கு வருகின்றனர். நோயாளிகளோ மரண பீதியுடன் விட்டத்தை முறைத்துக் கொண்டுள்ளனர்.

ஏற்கனவே அரசு மருத்துவமனைகளின் யோக்கியதை என்ன? தரமில்லாத மருந்து, பணம்பறிக்கும் ஊழியர்கள், மக்களைத் துரும்புக்குக் கூட மதிக்காமல் இழிவுபடுத்தும் மருத்துவர்கள், சுகாதாரம் கிலோ என்ன விலை என்று கேட்கும் பராமரிப்பு என்றுதானே இருக்கிறது. மாரியாத்தாளுக்கு நேர்ந்து கொண்டு போகும் பக்தனுக்குத் தரப்படும் விபூதிக்கும், ''த/அ'' பதித்த மாத்திரைகளுக்கும் பெரிய வேறுபாடுகளில்லை என்பதுதானே எதார்த்தம்.

சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்து என்ன நடக்கிறது என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாமல் திருமூர்த்தி செத்ததற்கு யார் பொறுப்பு? அந்தக் கட்டிடம் பழையதாய் இருந்ததா? பராமரிக்காத பொதுப் பணித் துறையா? மருத்துவம் போன்ற சேவைகளைப் புறக்கணிக்கும் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கையா? அதை அமுல்படுத்தச் சொல்லும் உலக வங்கியின் உத்தரவா?

மருத்துவத் துறையின் வளர்ச்சி, முரசொலி மாறன் போன்ற அரசியல், சமூக செல்வாக்கும் பண பலமும் கொண்டவர்களுக்கு மட்டுமே பயன்படுவதும், அவர்கள் தும்மினால்கூடத் துடைத்து விடுவதற்குக் காத்துக் கிடக்கும் ஐந்து நட்சத்திர அதிநவீன மருத்துவமனைகளும், கைதேர்ந்த மருத்தவர் கூட்டமும் ஒருபுறம்; உலக வங்கி உத்தரவுப்படி மானியங்கள் வெட்டப்பட்டு, அரசு மருத்துவமனைகளில் இதுவரை பெயரளவில் இருந்து வந்த மருத்துவ சேவைகளும் சாமானிய மக்களுக்குக் கிடைக்காமல் பறிக்கப்படும் அவலம் மறுபுறம். இந்த அநீதியை இன்னமும் நாம் சகித்துக் கொண்டிருக்கத் தான் வேண்டுமா?





இலண்டன் மருத்துவரும் (மேலே) ஜெர்மன் மருத்துவரும் (கீழே) மாறன் உடல்நிலை குறித்து அளிக்கும் பேட்டி.



